தர்மசக்கரம்



பிங்கள ௵ வைகாசி ௴ சக்கரம் 26 ஆரம் 5
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115 திருச்சி ஜில்லா

விவேகானந்த கல்லூரி

திருவேடகம் மேற்கு, சோழவந்தான் R. S. மதுரை ஜில்லா.

இக்கல்லூரி குருகுல முறையில் ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. வாழ்க்கைப் பயிற்சி இதனுடைய சிறப்பு அம்சமாகும். இங்குக் கீழ்க்கண்ட வகுப்புகள் நடைபெறுகின்றன.

I. P. U. C. Part I Tamil/Sanskrit
Part II English
Part III 1. Mathematics, Physics & Chemistry
2. Physics, Chemistry & Biology
3. (i) Advanced English, Economics and Commerce (English Medium)
(ii) Advanced Tamil, History & Commerce (Tamil Medium)

II. THREE-YEAR DEGREE COURSES (SEMESTER SYSTEM)
Part I Tamil/Sanskrit
Part II English
Part III 1. B. A. Main : Economics, Ancillary : Elements of Economic Statistics, History of India II
2. B. Sc. Main : Physics, Ancillary: Mathematics & Chemistry
3. B. Sc. Main : Zoology, Ancillary: Chemistry & Botany
4. B.Com. Optional Subjects : 1. Costing. 2. Income Tax Law and Practice.

Application Form & Prospectus (விண்ணப்பப்படிவமும் விவரணமும்) பெற விரும்புபவர்கள் நேரில் ரூ. 3-00 செலுத்தி அல்லது கல்லூரி முதல்வருக்கு ரூ. 3-50 மணியார்டர் செய்து தபாலில் பெறலாம். M. O. கூப்பனில் எந்த வகுப்பில் சேரவேண்டும் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

குருகுலப் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்க விவரம்

திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளியில் ஸ்டாண்டர்டுகள் IV முதல் XI வரையிலும் உள்ளன. எட்டாம் ஸ்டாண்டர்டிலும், அதற்கு மேலான ஸ்டாண்டர்டுகளிலும் புதிய மாணவரைச் சேர்த்துக்கொள்வதில்லை. IV, V, VI, VII ஸ்டாண்டர்டுகளில் புதிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். போதனுமொழி தமிழ்.

குருகுலத்தில் மாணவரைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30 ஆம் தேதி காலையில் 9 மணிக்குள் பையன்களுடன் இங்கு வரவேண்டும். விரிவான விவரம் வேண்டுவோர் காரியதரிசி, ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலம், திருப்பராய்த்துறை 639 115, திருச்சி ஜில்லா என்ற முகவரிக்கு ஐம்பது பைசா ஸ்டாம்பு அனுப்பி 'வித்யாவனச் சட்டதிட்டங்கள்' என்ற சிறு புத்தகத்தைப் பெற்றுப் பார்த்துக்கொள்ளலாம்.

மாணவிகளைக் குருகுலத்தில் சேர்க்க விவரம்

பெண் குழந்தைகளை உயர்நிலைப்பள்ளி குருகுலத்தில் சேர்ப்பதற்கு ஸ்ரீ சாரதா வித்யாலயம், அளகாபுரம், சேலம்-4 என்ற விலாசத்திற்கு எழுதிக்கேளுங்கள்.

கல்லூரியில் பெண்களைச் சேர்க்க விரும்புவோர் ஸ்ரீ சாரதா கல்லூரி, அளகாபுரம், சேலம்-4 என்ற விலாசத்திற்கு எழுதி விவரம் தெரிந்து கொள்ளலாம்.

குற்ருலத்தில் பருவ அந்தர்யோகம்

15-6-1977 முதல் 15-8-1977 முடிய

திருக்குற்ருலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி முடிய இரண்டு மாதங்களுக்கு கீழ்க்கண்ட சாதனை முறைப்படி அந்தர் யோகம் நடைபெறும். ஏககாலத்தில் பத்துப்பேர்களுக்கு மேற்படாமல் ஆச்ரமத்தில் தங்குதற்கும் உணவிற்கும் வசதி செய்வது சாத்தியமாகும். ஒருவர் மூன்று தினங்களுக்குக் குறையாமலும் பத்து தினங்களுக்கு மேற் படாமலும் இந்த இரண்டு மாதங்களுக்கு நடைபெறும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார். எந்தத் தேதிகளில் தாம் கலந்து கொள்வதற்கு விரும்புகிருர் என்பதைக் கடிதம் மூலம் குற்ருலத்துக்கு எழுதி முற்கூட்டி அனுமதி பெற்றுக்கொள்க. உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் ஆறுவீதம் ஆச்ரமத்துக்கு வந்த பின்பு நேரில் செலுத்திஞல் போது மானது. படுக்கை வசதிக்குத் தேவையானதை உடன் கொண்டுவர வேண்டும். தாய்மார்கள் இரவில் தங்குதற்கு வசதிகிடையாது. ஆனல் வேறு இடத்தில் தங்கிக்கொண்டு சாத்தியமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.

சாதனை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
திருப்பள்ளியெழுச்சி, தியானம், நாமஜபம்	4-30	5-30
ஐந்தருவி ஸ்நானம்	5-30	7-00
தியானம்	7-00	7-30
சிற்றுண்டி	7-30	
பஜனை	10-00	10-30
உபந்யாசம்	10-30	11-00
தியானம்	11-00	11-15
அர்ச்சனை, தீபாராதனை	11-15	11-30
உணவு	12-00	

மாலை

	மணிமுதல்	மணிவரை
பஜனை	3-00	3-30
உபந்யாசம்	3-30	4-00
தியானம்	4-00	4-15
சிற்றுண்டி	4-15	
நாமபஜனை, ஆரத்திரிகம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-30	
சத் சம்பாஷணை	8-00	8-30

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
குற்ருலம்-627 802, (வழி) தென்காசி

சுவாமி குஹானந்தர்

ஸ்ரீ சாரதா பால மந்திர் "குழந்தைகள் இல்லம்"

19, ராஜாஜி ரோடு, சேலம்-7

இங்கு நர்சரி முதல் ஐந்து வகுப்புகள் முடிய தமிழ்மீடியத்திலும், ஆங்கில மீடியத்திலும் நடைபெறுகின்றன. ஹாஸ்டல் வசதியும் உண்டு. நான்கு வயது முடிந்த குழந்தைகளை நர்சரி வகுப்புகளிலும், 5 வயது முடிந்த குழந்தைகளை முதல் வகுப்பிலும், மற்றும் 2, 3, 4, 5 வகுப்புகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

விருப்பமுள்ள பெற்றோர்கள் மே மாதம் 25-ந் தேதி காலை 9 மணிக்குமேல் குழந்தைகளை நேரில் அழைத்து வரவேண்டும். இங்கு படித்து முடித்த பெண் குழந்தைகளை சேலம் ஸ்ரீ சாரதா வித்யாலயத்திலும், தமிழ்மீடியம் ஆண்குழந்தைகளை திருப்பராய்த்துறை விவேகானந்த வித்யாவனத்திலும் சேர்த்துக் கொள்ளப்படு வார்கள். மற்ற விபரங்களை பாலமந்திரில் நேரிலோ கடிதமூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ சாரதா வித்யாலயா, சேலம்-4.

பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை தமிழ் மீடியத்திலும் ஆங்கில மீடியத்திலும் நடத்தப் பெறுகிறது. ஹாஸ்டல் வசதி உண்டு. ஜூன் 1ஆம் தேதி பள்ளி திறக்கப்பெறும். எந்தெந்த வகுப்பு மாணவிகளை எந்தெந்த தேதிகளில் தேர்வு வைத்து சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை மேற்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்-4.

பெண்களுக்கான கல்லூரி சேலத்தில் நடைபெறுகிறது. P. U. C. வகுப்பு களும், B. A. History, Economics, English, Tamil. B. Sc. Mathematics, Physics, Chemisty, Botany, Zoolagy, Home Science. M. A. Economics வகுப்புகள் உள் ளன. ஹாஸ்டல் வசதி உண்டு. ஆன்மீகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. முழுவிவரங் களுக்கு முதல்வர் ஸ்ரீ சாரதா கல்லூரி, சேலம்-636 004 என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 26	பிங்கள ௵ வைகாசி ㆏	ஆரம் 5

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 10

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 5

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்து விட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 15—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்**

இராமநாதபுரம் ஜில்லா—எமனேஸ்வரத்தில் 15—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்**

புதுக்கோட்டை ஜில்லா—திருவரங்குளத்தில் 17—5—77 செவ்வாய்க்கிழமை
18—5—77 புதன்கிழமை (இரண்டு நாட்கள் அந்தர்யோகம்)

இடம்: திருவரங்குளம் வள்ளநாடு நகரத்தார் தவணை கட்டடம்
நேரம்: காலை 5 மணிமுதல் இரவு 9-15 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**
இதர விவரம்: செய்திகளில் பார்க்கவும்

மதுரை ஜில்லா—காமயகவுண்டன்பட்டியில் 21—5—77 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ பாட்டையா கோவில் காமதேனு மண்டபம்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

இராமநாதபுரம் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 22—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

மதுரை ஜில்லா—உசிலம்பட்டியில் 29—5—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நாடார் சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்**

கோவை—சித்திரச்சாவடியில் 5—6—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்**

மதுரை ஜில்லா—தேனியில் 8—6—77 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் இரவு 8-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்**
உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00 செலுத்தி சீட்டு பெற்றுக் [கொள்ளலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற் குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 26 | பிங்கள ஆு வைகாசி மீ | ஆரம் 5

பிரார்த்தனை

मानसमिति विद्वाꣳसस्तस्माद्विद्वाꣳस एव मानसे रमन्ते

— महानारायणोपनिषत्

மானஸமிதி வித்வாம்ஸஸ்தஸ்மாத்
வித்வாம்ஸ ஏவ மானஸே ரமன்தே ।

— மஹாநாராயணோபநிஷதம்

சில வித்வான்கள் மானஸபூஜை முக்திக்கு ஏதுவானது எனக்கருதுகின்றனர் ஆகையி னல் வித்வான்கள் மானஸ பூஜையிலேயே இன்புற்று இருக்கின்றனர்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்பு (உ)ருகு சிந்தை இடுதிரியா--நன்பு (உ)ருகி
ஞானச்சுடர் விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

— திவ்யப்பிரபந்தம்

அருள் விருந்து

சோம்பித்திரியும் மனது கீழ்மை உறுகிறது.

அன்புடன் தொண்டு புரிவது தேவாராதனைக்கு நிகர்.

நீ நாடும் லட்சியத்திற்காக உன்னுடைய வாழ்வை ஈடுகொடு.

ஏதாவது நலன் செய்துகொண்டிருக்கிற மனது மேன்மையுறுகிறது.

அச்சத்துக்குப் பிறப்பிடம் மெலிவு. துணிவுக்குப் பிறப்பிடம் திண்மை.

ஆற்றலால் உண்டு பண்ணப்பட்டது அன்பினால் பாதுகாக்கப்படுகிறது.

உயிர்வகைகளிடத்து வைக்கும் அன்பும் கடவுள் பக்தியும் ஒன்றேயாம்.

உடல்பற்று ஆசையை வளர்க்கிறது. அருள்பற்று ஆசையை ஒடுக்குகிறது.

தராசைக் கோணலாக்குபவன் முதலில் தன் மனதைக் கோணலாக்குகிறான்.

கடவுள் நாட்டம் அதிகரிக்குமளவு கவலையும், துயரமும் அடிபட்டுப் போகின்றன.

அடக்கம், பணிவு, பொறுமை, இரக்கம், கனிவு ஆகியவைகள் தெய்வ சம்பத்துக்கள் ஆகின்றன.

உரிமை பாராட்டாது உண்டு பண்ணு; கைமாறு கருதாது உழைத்திடு; அபகரிக்காது வளர்த்திடு.

குடும்பபாரத்தை உண்டுபண்ணிக் கொள்ளாதவனே சமுதாய சேவைக்குத் தகுதி உடையவன் ஆகிறான்.

விவேகம் என்னும் மலை உச்சியினின்று பார்ப்பவனுக்கு மக்கள்படும் துயரத்துக்கெல்லாம் காரணம் அக்ஞானம் என்பது புலனாகிறது.

வெற்றிபெறுவது மலை ஏறுவதற்கு நிகர். மலை ஏறுபவன் ஏற்றத்தைச்சமாளிக்கிறான். வெற்றிபெறுபவன் தடைகளைத் தாண்டிச் செல்லுகிறான்.

தான் உண்ணும் உணவைத் தானே ஜீரணம் பண்ணுவது போன்று ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஜீவிதத்தைத் தன் பாங்குக்கேற்றவாறு அமைத்துக்கொள்ளுகிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சர் மேலும் தொடர்ந்து சம்பாஷணை செய்கின்றார்.

பரமஹம்சர்: ''தெய்வத்தோடு வைக்கிற இணக்கங்களுள் வாத்ஸல்ய பாவனை நான்காவது இடம் பெறுகிறது. தெய்வத்தோடு ஒரு தந்தை ஒரு தாயின் இணக்கத்தை வைத்துக்கொள்வது வாத்ஸல்ய பாவனையாகும். அவதார மூர்த்திகளாகிய ராமன், கிருஷ்ணன் போன்றவர்களைப் பாலராமன், பாலகிருஷ்ணன் ஆகிய நிலையில் வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தாயாகவோ, தந்தையாகவோ ஆத்ம சாதகன் வைத்துக்கொள்ளவேண்டும். பாலகிருஷ்ணனைத் தன் குழந்தையாக யசோதை கருதி வந்தாள். ஐந்தாவது இணக்கம் மதுரபாவனை எனப்பெயர் பெறுகிறது. இந்த இணக்கத்தை நாயகன் நாயகி முறைமை எனத் தமிழில் சொல்லுகிறோம். ஸ்ரீமதி ராதை கிருஷ்ணனுடைய காதலியாகத் தன்னை வைத்துக் கொண்டாள். இத்தனை விதமான இணக்கங்களும் தெய்வத்திடத்தில் பக்தி பூணுவதற்கு உதவுகின்றன.

''இறைவா, நீ என் பிரபு. நான் உன்னுடைய தாசன். இங்ஙனம் கருதுவது தாஸ்யபாவனை அல்லது ஆண்டான் அடிமை இணக்கம் ஆகிறது. சாதகனொருவன் தெய்வத்தைத் தன்னுடைய தலைவனாகவும், தன்னைத் தெய்வத்துக்குத் தொண்டனாகவும் வைத்துக் கொள்வது மிக நன்று. ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இத்தகைய இணக்கம் பக்தியை வளர்ப்பதற்குப் பேருதவி புரிகிறது.''

பண்டிதர்: ''ஆம் ஐயனே.''

சிந்தியிலிருந்து வந்திருந்த பண்டிதர் இப்பொழுது புறப்பட்டுப்போய் ஆய்விட்டது. அது மாலை நேரம். மங்கலான வெளிச்சம் பஞ்சவடியையும் தக்ஷிணேசுவரக் கோயில்களையும் கங்காநதியையும் ஏதோ ஒரு அளவில் விளக்கிக் காட்டும் நிலையில் இருந்தது. தக்ஷிணேசுவரத்தில் அம்பிகையின் சந்நிதி, ராதாகிருஷ்ணன் சந்நிதி, சிவனார் சந்நிதி ஆகிய சந்நிதிகளில் மாலை வழிபாடு தொடங்கியது. மணியோசையும், சேகண்டிகளின் ஓசையும், சங்கு நாதங்களும் ஆங்காங்கு ஒலித்துக் கொண்டிருந்தன. பரமஹம்சரின் அறையில் தெய்வங்களின் படங்கள் மாட்டி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படத்திற்கும் பக்கத்தில் போய் அந்தந்த தெய்வத்துக்குரிய வணக்கத்தைப் பரமஹம்சதேவர் செய்து முடித்தார். ஈசானன் கிரியா முறைகளைக் கையாண்டு வழிபாடு செய்வதில் பெரிதும் ஈடுபட்டிருந்தான். சாஸ்திரங்களில் சொல்லி வைத்திருக்கிற வெவ்வேறு விதமான கிரியா விசேஷங்களையும் வழிபாட்டு முறைகளையும் அவன் பக்தி பூர்வமாகக் கையாண்டு வந்தான். சம்பாஷணையை இப்போது பரமஹம்சதேவர் துவக்கி வைத்தார்.

பரமஹம்சதேவர்: ''தெய்வமே தெய்வமே என்று வெறுமனே வாயால் சொல்லிக் கொண்டிருப்பதன்வாயிலாகப் பரஞானத்தை ஒருவன் பெறமுடியுமா? பரஞானத்தைப் பெறுவதின் அறிகுறிகள் இரண்டு இருக்கின்றன. முதலாவது அறிகுறி அருள்தாகம். அதன் வாயிலாக ஈசுவர பக்தி ஓங்குகிறது. விசாரத்திலும், விவாதத்திலும் ஒருவன் ஏராளமாக ஈடுபடலாம். ஆனால் அத்தகைய மனிதனிடத்து அருள்தாகம் இல்லையென்றால் அவன் பண்ணுகின்ற பரவஸ்து ஆராய்ச்சிகள் அத்தனையும் வீணாய்ப் போகின்றன. இரண்டாவது அறிகுறியாய் அமைந்திருப்பது ஆத்மபோதம் ஓங்குவது. ஆத்மபோதம் ஓங்காத இடத்துப் பரஞானம் உருவெடுப்பதில்லை. மணிக்கணக்காக ஒருவன் சாஸ்திரங்களை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கலாம். மணிக்கணக்காக ஒருவன் தத்துவத்தைப்பற்றி சர்ச்சை பண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்த மனிதனிடத்து உள்ளுணர்வு அல்லது ஆத்மபோதம் வடிவெடுக்காவிட்டால் பரஞானத்தை அவன் அடையப் பெறமாட்டான்.

''உள்ளுணர்வு ஓங்குவது அல்லது ஆத்மபோதத்தை வளர்ப்பதும், குண்டலினி சக்தி உருவெடுப்பதும் ஒன்றேயாம். உள்ளுணர்வு

ஓங்குதற்கேற்ப சாதகன் ஒருவனிடத்து ஆத்ம விகசிப்பு அல்லது பாவனை ஓங்குகிறது. படிப் படியாக அது பக்தியாக மாறுகிறது. அதற்கு மேல் அது பிரேமைபக்தி அல்லது பராபக்தி யாக உருவெடுக்கிறது. இங்ஙனம் அன்பு ஓங்கப் பெறுவதற்குப் பக்திமார்க்கம் என்னும் பெயர் வந்துள்ளது.

"வெவ்வேறு விதமான பூஜாவிதிகளை அல் லது கர்மமார்க்கத்தைக் கையாளுவது மிகக் கடினமானது. பூஜாமுறைகளை மட்டும் சாஸ் திரத்தில் சொல்லி வைத்திருக்கிறபடி ஒருவன் கையாண்டு வந்தால் ஏதோ சிலசித்திகள் அத் தகைய வழிபாட்டின் வாயிலாக வாய்க்கிறது."

ஈசானன்: "ஹஸ்ராவிடம் போக நான் விரும்புகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள்."

பரமஹம்சதேவர் மௌனமுற்று உட்கார்ந் திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஈசா னன் ஹஸ்ராவை அழைத்துக்கொண்டு பரம ஹம்சதேவருடைய அறைக்குள் வந்தார். பரம ஹம்சதேவரோ இன்னும் மௌனத்திலேயே நிலைத்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ராவானவர் ஈசானருடைய காதில் ஏதோ முணுமுணுத்தார். அவர் பகர்ந்ததாவது: "அவரை அவர் போக்கில் விட்டுவிட்டு நாம் வெளியேகுவோம். ஒரு வேளை இப்பொழுது அவர் தியானத்தில் அமர்ந்திருக்கிறார்போலும்! இருவரும்அவ்வறையைவிட்டு வெளியேகினர்."

பரமஹம்சதேவர் தொடர்ந்து மௌனமுற்று இருந்தார். ஆங்குக் குழுமியிருந்த அன்பர் களும் அவர் தியானத்தில்தான் மூழ்கியிருந் தார் என்பதை அதிவிரைவில் காணலாயினர். சிறிது நேரத்துக்குப் பிறது பரமஹம்சதேவர் ஜபம்பண்ணினர். அவர் தம்முடைய வலக் கரத்தைத் தம் தலையின் மீதும் நெற்றியின் மீதும் தொண்டையின் மீதும் ஹ்ருதயத்தின் மீதும் கடைசியாக நாபியின்மீதும் நாட்டினர். அவர் தீண்டிய ஒவ்வோர் அங்கமும் யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற ஆறு ஆதாரங்களுக்கும் ஏற்றவைகளாக இருந்தன. ஆகையினால் அவை யாவுக்கும் ஆதாரமாயுள்ள ஆதிசக்தியைக் குறித்து அவர் தியானம் பண்ணியிருக்கக் கூடுமோ?

ஈசானனும், ஹஸ்ராவும் காளிகாதேவியின் சந்நிதானத்துக்குச் செல்லலாயினர். பரம ஹம்சதேவரோ அந்தர்முக திருஷ்டியில்ஆழ்ந்து மூழ்கியிருந்தார். இப்பொழுது ஆதார் அங்கு வந்து சேர்ந்தார். அது சமயம் இரவு சுமார் ஏழரை மணியாக இருக்கும்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பரமஹம்சதேவர் காளிகாதேவியின் சந்நிதிக்குச் சென்றார்.அம்பி கையின் பதுமையை அவர் உற்று நோக்கினர். அம்பிகையின் பாதங்களிலிருந்து சில புஷ்பங் களை எடுத்து தமது சிரசின்மீது வைத்தார். சந் நிதியில் வீழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தார். பிறகு அம்பிகையை வலம் வந்தார். ஆங்கு சுவரில் மாட்டப்பெற்றிருந்த சாமரத்தை எடுத்து அம்பிகைக்கு வீசினர். அவர் முற்றி லும் பரவசப்பட்டவராகத் தென்பட்டார். சந்நிதியினின்று அவர் வெளியே வந்த பிறகு ஈசானன் ஜலபாத்திரங்களை வைத்துக் கொண்டு சந்தியாவந்தனம் செய்துகொண் டிருப்பதைப் பார்த்தார்.

பரமஹம்சதேவர்: (ஈசானரைப் பார்த்து) "என்ன இன்னும் நீ இந்தநிலையில்தான் இருக் கிறாயோ? சந்தியாவந்தனம் பண்ணுவதை நிறுத்திவிட்டு அதற்கு மேலான நிலைக்குப் போக உனக்கு இயலவில்லையா? பாடல் ஒன்று பாடுகிறேன் கேள். நான் கங்கைக்கோ, கயாவுக்கோ, காசிக்கோ, காஞ்சிக்கோ, பிர பாசத்துக்கோ ஏன் போகவேண்டும்? காளிகா தேவியின் திருநாமத்தை நான் சதா உச்சரித் துக் கொண்டிருப்பேனாகில் பிறகு தீர்த்த யாத்திரையால் எனக்கு வரும் நலன்தான் யாது? அம்பிகையின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருப்பவன் கிரியா விசேஷங்களில் ஈடு படுவது எதற்காக? பிறகு வந்தனைவழிபாடு கள் எதற்காக? த்ரிசந்தியா நேரங்களிலே ஆத்ம சாதகன் ஒருவன் அம்பிகையின் திரு நாமத்தை விடாது ஓதிக்கொண்டிருந்தால் போதாதா? சாதகன் ஒருவனைத் தொடர்ந்து கிரியை ஸதா நிகழ்ந்துகொண்டிருக்கலாம். அவைகள் அவனைவிட்டு ஒருபொழுதும் விலக மாட்டா. தானம் பண்ணுவது, விரதங்கள் பூணுவது போன்ற கிரியைகள் மனிதனுடைய மனதை ஒருபொழுதும் கவருவதில்லை. ஆனந்த சொரூபிணியாக இருக்கின்ற அன்னை பரா சக்தியின் தாமரைத் திருவடிகளில் தன்மனதை ஸதா செலுத்திக் கொண்டிருப்பதே அவன்

பண்ணுகிற பிரார்த்தனையும் வேள்வியுமாகும்.

''ஸந்தியாவந்தனம் போன்ற கிரியைகளை மானுடன் ஒருவன் எவ்வளவு காலத்துக்குச் செய்யவேண்டும்? பரமனுடைய திருவடிகளில் அவன் பக்திபண்ணுதிருக்கும் பரியந்தம் அக்கிரியைகளை அவன் செய்து கொண்டிருக்கவேண்டும். பரமனைக்குறித்து எண்ணி எண்ணிஆனந்தக் கண்ணீர் சிந்தாதிருக்கும் பரியந்தம் அவன் கிரியைகளில் ஈடுபடவேண்டும். இறைவனுடைய திருநாமத்தை ஓதியமாத்திரத்தில் அவனுக்கு மயிர்க் கூச்சு எடுக்காதிருக்கும் பரியந்தம் கிரியைகளில் அவன் ஈடுபடவேண்டும்.

''உலக ஆசைக்கும், முக்தி நாட்டத்துக்கும் தலைவணங்கி அவை இரண்டையும் நான் ஒதுக்கி வைக்கிறேன் என்று பிரசாத் பகருகிறான். காளிகாதேவியும் பரபிரம்மமும் ஒன்று என்னும் உண்மையை நான் அறிய வருகிறேன். அவ்வுண்மையை அறிந்தான பிறகு தர்மம், அதர்மமாகிய இரண்டையும் நான் அறவே புறக்கணிக்கிறேன்.

''பிஞ்சு உருவெடுக்கின்றபொழுது பூ தானாக உதிர்ந்து போகிறது. அதேவிதத்தில் சாதகன் ஒருவனிடத்துக் கடவுள் பக்தி ஓங்குங்கால் அவன் சந்தியாவந்தனம் போன்ற கிரியைகளை ஒதுக்கித்தள்ளுகிறான். அச்செயல் எதற்கு நிகர் என்பதை ஓர் உபமானத்தின் மூலம் நாம் ஆராய்வோம். புதிதாக வந்துள்ள மருமகள் கர்ப்பம் தரிக்கிறபொழுது மாமியானவள் அவளுடைய வேலையைக் குறைக்கின்றாள். அவள் கருத்தரித்து ஒன்பது மாசம் ஆனபிறகு அவளுக்கு வீட்டு அலுவல் எதையும் கொடுப்பதில்லை. அவள் மகப்பேறு பெற்றான பிறகு அந்த மகவைக் கையில் ஏந்திக்கொண்டு அதற்கு அவள் பணிவிடை செய்கிறாள். வேறு அலுவல் ஏதும் அவளுக்குக் கிடையாது. அதற்கு நிகராகச் சாதகனொருவனிடத்துக் கடவுள் பக்தி தலையெடுத்தானவுடனே சந்தியாவந்தனம் போன்ற கிரியைகள் ஒதுக்கப்படுகின்றன.

''சாதனத்தில் நீ சுறுசுறுப்பாக ஈடுபடுவதில்லை. ஏனோ தானோவென்று நீ மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறாய். சுறுசுறுப்பாக செயலில் ஈடுபடாவிட்டால் நீ எதையும் சாதிக்க முடியாது. அகப்பற்றை ஒழிக்கும் விஷயத்தில் நீ தீவிரம் படைத்தவனாக இருக்க வேண்டும். பதினைந்து மாதங்களை ஒரு வருஷமாகக் கருதுகிற நீ எதையாவது சாதிக்க முடியுமா? உன்னிடம் வலிவுமில்லை. உறுதிப்பாடுமில்லை. அவலைப் பாலில் ஊற வைத்தால் அது வதவத சொத சொதவென்று இருக்கும். அதே போல் நீயும் வெறும் வத வத சொத சொத ஆளாக இருக்கிறாய். இப்படி இருப்பது உனக்குப் பொருந்தாது. வீரத்துடன் விழித்து எழுந்திரு. உறுதிப்பாடோடு செயலில் ஈடுபடு. செயற்கரிய செயல்களைச் செய்து முடிப்பதற்கே உன்னை ஆயத்தப்படுத்து.

''நீ பாடுகிற பாடலொன்று இத்தகைய கருத்துடையதாக இருக்கிறது:

''சகோதரா, கடவுளை மகிழ்வோடு கட்டிப் பிடித்துக்கொள். உனக்கு இயன்ற பாங்கில் முயன்று வா. ஏதேனும் ஒரு காலத்தில் நீ அவரை அடையப் பெறுவாய். இத்தகைய கருத்தடங்கிய பாடல் எனக்குப்பிடிக்கவில்லை. எப்பொழுதாவது ஒரு தடவை நீ அவரை அடையப்பெறுவாய் என்று உன்னுடைய பாடலில் இயம்புகிறாய். இந்த மனப்பான்மை உனக்குப் பொருந்துமா? அற்ப உலகப்பற்றை உதறித்தள்ளுதலில் நீ உறுதி பெற்றவனாக இரு. இந்தப் பாங்கில்தான் ஹஸ்ராவுக்கும் நான் தூண்டுதல் போடுகிறேன்.

''உறுதிப்பாடான கடவுள் நாட்டம் உனக்கு ஏன் உண்டாவதில்லை என்று நீ என்னைக் கேட்கின்றாய். அதற்குற்ற காரணம் ஒன்று உண்டு. உன் உள்ளத்தினுள்ளே உலக ஆசைகளும், உலக இயல்புகளும் வேண்டியவாறு இருக்கின்றன. ஹஸ்ராவிடத்தில் இருப்பதும் இதே மனப்பான்மைதான். கிராமத்துப் பக்கங்களில் உழவர்கள் நெற்பயிருக்கு என்ன பாங்கில் தண்ணீர் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். வயலின் வரப்புகள் மிகத் தாழ்ந்து இருக்கின்றன. பாய்ச்சுகின்ற நீரைப் பாதுகாத்து வைப்பதற்கு அவைகள் போதமாட்டா. அவ்வரப்புகளில் ஆங்காங்கு துவாரங்கள் இருக்கின்றன. தண்ணீர் துவாரங்கள் வாயிலாக ஒழுகிப் போகின்றது. அதுபோன்று உலகப்பற்றுடைய நீங்கள் செய்துவரும் சாதனங்களெல்லாம் பொருளற்றவைகளாகப் போய்விடுகின்றன.''

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

314. இன்ப நிட்டை எய்தாமல்
யாதெனினுஞ் சென்றுமனந்
துன்புறுதல் வன்பிறவித்
துக்கம் பராபரமே.

இன்பநிட்டை—பரம்பொருளோடு சர்வ காலமும் கூடியிருத்தல்.

பிறத்தலும் இறத்தலும் ஜீவாத்மாக்களின் பாங்கு ஆகும். ஜீவகோடிகளனைத்தும் இன்பத்தையே நாடுகின்றன. அவ்வுயிர்கள் நாடுகிற இன்பம் புற உலகில் இருக்கிறதென்று அவைகள் கருதுகின்றன. புற உலகை நாடிச் செல்லுதற்கே பஞ்சேந்திரியங்களும் அமைந்திருக்கின்றன. பச்சைக் குழந்தை ஒன்றுக்குக் கையில் ஏதேனும் பொருள் அகப்பட்டால் அதைத் தன் வாயில் வைப்பது அதன் இயல்பு. அவ்வாறே ஐந்து இந்திரியங்கள் வாயிலாகப் புறவுலகினின்று இன்பத்தை நாடித் திரிதல் பிறந்தது முதற்கொண்டு எல்லா உயிர்களுக்கும் நிகழ்ந்துகொண்டு வருகிறது. நாடுகிற பொருள் ஏதேனும் ஒன்று அகப்பட்டால் பிறகு அதனிடத்திருந்து துன்பமும் உண்டாவதை ஜீவர்கள் அனுபவபூர்வமாக அறிகின்றனர். ஒவ்வொரு பொருளிலும் இன்பமும் துன்பமும் சேர்ந்தே இருக்கின்றன. அப்பொருளில் உள்ள இன்பம் துவக்கத்தில் மையல் ஊட்டுகிறது. பிறகு அதே பொருள் துன்பத்தை நல்குகிறது. அப்படித் துன்பம் வாய்த்தகாலே அதை ஒதுக்கிவிட்டு மற்றொரு பொருளில் நாட்டம் கொள்ள உயிர் வகைகள் முந்துகின்றன. அப்படி நாடுகிற இன்பத்தைப் பெறுதற்கு ஒரு பிறவி போதாது. பலப்பல பிறவிகளில் பலப்பல பொருள்களில் இன்பத்தை நாடி துன்பத்தைப் பெற்றதுதான் பிறவியின் பயனாகிறது. இத்தகைய அனுபவம் மற்ற உயிர்களிடத்துப் பட்டும்படாமல் இலேசாக அமைகிறது. மானுடப் பிறவியிலோ பிரபஞ்சப் பொருளினின்று இன்பம் எவ்வளவு விரைவில் வருகிறதோ, அவ்வளவு விரைவில் அது துன்பமாக மாறுகிறது. இன்பத்தை நாடி துன்பத்தைப் பெறுவது உயிர் வாழ்க்கையின் விளைவு ஆதலால் பிறவி ஆனது வன் பிறவி என ஈண்டு இயம்பப்படுகிறது. சிற்றுயிர்களிடத்து மனம் என்னும் அந்தக் கரணம் சிறிது சிறிதாகப் பரிணமிக்கிறது. மனிதனிடத்து அது உச்சநிலை எய்துகிறது. ஆதலால் மனதை உடையவன் மனிதன் என்னும் கோட்பாடு வந்துள்ளது. மனிதன் படைத்துள்ள மனமானது இன்பத்தை நாடி ஏதேதோ பொருள்களில் விரைந்து சென்று உடனுக்குடனே துன்பத்தைத்தேடிக்கொள்ளுகிறது. இதுவே மானுடப் பிறவியில் மக்கள் எல்லாரும் பெறுகிற அனுபவமாகிறது. ஆனால் இந்த மனமானது புறப்பொருள்களை நாடாது பரம்பொருளை நாடிச் செல்லுமாகில் அது நிரந்தரமான இன்பமாக வடிவெடுக்கிறது. உன்னுடைய பயிற்சிக்காகப் புறவுலகைப் பயன்படுத்து. ஆனால் உன்னுடைய மனநாட்டமானது யாண்டும் பரமனுக்குரியதாக வேண்டும். அப்பொழுது மாறாத இன்பத்தை நீ அடையப்பெறுகிறாய். மானுடப் பிறவியின் மேலான நோக்கம் கடவுள் நாட்டம் பூணுதல். அத்தகைய முயற்சியிலும் இன்பம்இருக்கிறது. அம்முயற்சியானது நிறை நிலையை எட்டுகிற இடத்தும் இன்பம் இருக்கிறது. அங்ஙனம் பேரின்பம் பரமனுடைய சந்நிதானத்தில் இருக்கிறது. மனிதனே அதைப் புறக்கணித்துவிட்டு நிலையற்ற பிரபஞ்சத்தில் இன்பத்தைத் தேடி துக்கத்தை வரவழைத்துக் கொள்ளுகிறான். இறைவா, துன்பம் தருகிற பிரபஞ்சத்தில் என் பிறவியைப் பாழாக்காமல் உன்னிடத்திலேயே மெய்யான பேரின்பத்தை நான் நாடியிருப்பேனாக என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

315. பொய்யகல மெய்யான
போதநிலை கண்டோர்க்கோர்
ஐயமிலை ஐயமிலை
ஐயா பராபரமே.

போதநிலை—பரம்பொருள் உணர்ச்சியில் திளைத்திருத்தல்.

திருடன் ஒருவன் கார் இருளில் வீடு ஒன்றனுள் நுழைகிறான். ஒவ்வொரு பொருளாக அவன் தடவிப்பார்க்கிறான். ஒவ்வொன்றையும் இது அல்ல, இது அல்ல வென்று ஒதுக்கித்

தள்ளி விட்டுப் பெட்டிக்குள்ளிருக்கும் பணப் பையைத் தொடுகிறுன். அதைக் குலுக்கிப் பார்க்கிறுன். தான் நாடியது அது தான் என்று அவன் முடிவு கட்டுகிறுன். அதை எடுத்துக் கொண்டு அவன் வெளியேகுகிறுன். அப்படி அவன் செய்கின்ற செயலுக்கு நிகரானது பர நாட்டம் பூணுதல். மையல் ஊட்டுகின்ற பிர பஞ்சப் பொருள்கள் மனிதனை ஏமாற்றுகின் றன. இன்பம் தருவனபோன்று அவை மனி தனைக் கவர்ந்திழுத்து பிறகு துன்பத்தைத் தருகின்றன. ஆகையால் அவை பொய் யானவை எனப் புறக்கணிக்கப்படுகின்றன. பரம்பொருள் நாட்டம் பூணுதலில் தெளிவு உண்டு. அதற்குப் படாதபாடுபடுதலில் தெளிவு உண்டு. பரம்பொருளை அடையப் பெறுதலில் தெளிதல் உச்ச நிலைக்கு வருகிறது. மனந்தெளிதலே போதநிலை எனப் பகரப் பெறுகிறது. பரம் பொருள் உணர்ச்சியில் சர்வ காலமும் மூழ்கியிருப்பது போத நிலையாம். போத நிலையில் துன்பத்தை அனுபவித்தல் என்னும் எதிர்மறைச் செயல் இல்லை. தெவிட் டாத பேரின்பமே ஆங்கு மேலும் மேலும் ஓங்கு கிறது. அப்படி அது ஓங்குவதால் அந்நிலை என்றும் இருக்கக் கூடியதா அல்லது சிறிது காலம் இருந்து அழிந்து பட்டுப்போகக் கூடி யதா என்னும் ஐயம் உள்ளத்தில் எழுவதில்லை. ஆதலால் ஐயமில்லை ஐயமில்லை என்று இரண்டு தடவை அவ் உண்மை வற்புறுத்திக் கூறப்படு கிறது.யாண்டும் மனிதனுக்குச் சொந்தமாயிருப் பது பரவஸ்து. ஆதலால் அவ்வஸ்துவானது ஐயாவென அழைக்கப்பெறுகிறது. அநித்திய மாயுள்ள உலக பாசங்களை ஒதுக்கித்தள்ளி விட்டு யாண்டும் மனிதனுக்குச் சொந்தமாயுள்ள பரவஸ்துவினிடத்துப் பேரானந்தத்தைக் கண்டு அதிலேயே திளைத்திருப்பது குறிக் கோள் என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

316. மந்திரத்தை உன்னி
மயங்கா தெனக்கினியோர்
தந்திரத்தை வைக்கத்
தகாதோ பராபரமே.

அம்பிகை உபாசனையில் யந்த்ரம், மந்த்ரம், தந்த்ரம் என்னும் மூன்று சொற்கள் அந்த மார்க்கத்துக்குத் திறவுகோல்களாக வந்தமை கின்றன. யந்த்ரம் என்றுல் கருவி. மனித னுக்கு மானுட சரீரமே யந்த்ரமாக அமைந் திருக்கிறது. எனக்கு என்னும் சொல் இக் கண்ணியில் யந்த்ரத்தைக் குறிக்கிறது. யந்த்ர மாகிய சரீரத்தைக் கடவுள் வழிபாட்டுக்கு உரியதாகப்பண்ணுவது தந்த்ர சாஸ்திர முறை யாகும். தெய்வ வழிபாட்டுக்குரிய மந்த்ரங் களை அல்லது மேலாம் கருத்துக்களை முறை யாகக் கையாளுவதும் ஒரு தந்த்ரமாகும். தந்த்ரம் என்னும் சொல் நேர்வழி எனப் பொருள்படுகிறது. அம்பிகை உபாசனை செய் கிறவர்களுக்கு யந்த்ரமாகிய உடல் தேவாலய மாகப் பாதுகாக்கப்படுகிறது. மந்த்ரத்தை அல்லது எண்ணங்களையெல்லாம் குறியின் கண்ணே செலுத்துவது அம்பிகையின் அரு ளைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகிறது. அருளைப்பெறுவது குறிக்கோள். அதன் பொருட்டுத் தான் எடுத்துள்ள தேகத்தைத் தன்னுடையது என்று கருதாது அது தெய்வத் துக்குரிய ஆலயம் எனக்கருதி அந்தத் தெய்வத் தின் கண் தன் மனதை ஒடுக்குதல் அந்தச் சாத னத்தின் குறிக்கோள் ஆகிறது. தந்திரமாக ஒரு காரியத்தைச் செய்தல் என்பது முறையாக வும், வெற்றிகரமாகவும் அதைச் சாதித்தல் எனப்பொருள்படுகிறது. அம்பிகை வழிபாட் டுக்குரிய தந்திர சாதனங்கள் அனைத்தும் தேகத்தைத்தெய்வத்துக்குரியதாக்கி பிறகுமன தையும் அதனிடத்தில் ஒடுக்குதலாம். அப்படிச் செய்வதே மேலான தந்த்ரமாகிறது. வண்டி ஒன்றில் ஊர்ந்து ஓர் ஊருக்குப் போகிறோம். ஊரை எட்டியான பிறகு வண்டிக்கு அவசிய மில்லை. அந்த வண்டிக்கு நிகர் மனது. மனதில் உண்டாகிற விருத்திகளனைத்தும் ஆத்ம சாதக னுக்கு மந்த்ரங்களாகின்றன. மனம் ஒடுங்கப் பெறுவது சாதனத்தின் இலட்சியம். மனம் ஒடுங்குங்கால் மந்த்ரங்களும் தாமாக நின்று விடுகின்றன. மனது ஒடுங்கிய பிறகு மந்த் ரத்தை ஓதி திண்டாடுதல் என்பது தானே நின்றுவிடுகிறது. தெய்வக் காட்சியை அடை யப் பெற்றுன பிறகு அந்தத் தெய்வத்தைக் குறித்து மந்த்ரம் ஓதுதற்கு இடமில்லை. உடல் உணர்ச்சி தானுகவே மறைந்து போகிறது. அத்தகைய பெருநிலையை அதிவிரைவில் இறைவா, எனக்குத் தரமாட்டாயோ என்பது இக்கண்ணியின் கருத்து ஆகும்.

பரபோதம்

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை)

பொறி புலன்களையும் இவ் உலகையும் நம்பி வாழும் உனக்கு மரணம் ஒரு பெரிய பாடம் புகட்டுகின்றது. உன்னை மயக்கும் இவ் உலகப்பொருள்களை நம்பி நீ இன்பம்பெற விரும்புகின்றாய். கண்ணைக் கவரும் அழகு தோற்றங்கள் நீ இறுதியாகக் கண்ணை மூடும் பொழுது உன் கண்முன் நிற்குமா? நீ உயிரோடு வாழும்பொழுதாவது அவை உனக்கு என்னநலம் செய்கின்றன? நீ அவைகளை நம்பி அவைகள் பின் செல்லும்பொழுது அவை உன்னை மேலும் அறியாமையின் கண் இழுத்துச் செல்கின்றன. ஞானம் பெறுவது உன் லட்சியமா? அறியாமையின் கண் மேலும் அமுந்திப்போவது உன் லட்சியமா? அறிவைத் தெளிவுபடுத்தும் ஒளி பொருந்திய பாதையில் செல்ல விரும்புகின்றாயா அல்லது அறிவை அந்தகாரத்துள் வைக்கும் இருள்பாதையில் செல்ல விரும்புகிறாயா?

செந்நெறி அல்லது கடவுள் நெறியைப் பின்பற்றுபவன் ஒளி நிறைந்த பாதையில் செல்பவன் ஆகின்றான். தொடர்ந்து நீ கடவுள் நெறியைப் பின்பற்றி வா. சிறிது நாள் கடவுள் நெறியில் சென்றபின் அதில் ஒன்றுமில்லை என்று எண்ணி உலக நெறிக்கு மக்கள் சென்று விடுவார்கள். நீ அங்ஙனம் நடந்து கொள்ளாதே. புலன் இன்பம் உண்மையில் பலம் பொருந்தியது. அது உள்ளத்தை இழுக்கும். புலன் இன்ப இழுப்புக்கு நீ வசப்பட்டு விடுவாயாகில் அது மனதில் தீயபதிவுகளை உண்டாக்கிவிடும். நீ எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் தீய பதிவுகளோடு கூடிய மனது உன்னைக் கீழ்நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும். உலகப்பிடிப்பிலிருந்து மீளுவதற்கு உன் முழுமனதையும் கடவுளுக்குக் கொடுத்து விடுவதுதான் உபாயமாகும். தெய்வ பலத்தில் நீ உறுதியாக இரு. உன்னிடத்தில் தெய்வபலம் ஓங்கும்பொழுது மாயை என்னும் வலையை நீ சுலபத்தில் கிழித்தெறிந்து விடலாம். கடவுளினுடைய அருளைப் பெற்றவன் தான் பந்தத்திலிருந்து விடுபட முடியும். பந்தத்திலிருந்து விலகிக்கொள்வது மிகக்கஷ்டமான செயல். கடவுளின் துணையை நாடுவாயானல் நீ உலக பந்தத்திலிருந்து சுலபத்தில் விலகிக்கொள்ளலாம்.

உலகை நாம் காண்கின்றோம். பஞ்சேந்திரியங்களின் துணைகொண்டு உலகோடு நாம் தொடர்பு வைக்கின்றோம். கடவுளை நாம் காணவோ, கடவுளோடு தொடர்பு வைக்கவோ முடிவதில்லை. கடவுள் ஒருவர் உண்டா, இல்லையா என்ற ஐயமும் இடையிடையே உள்ளத்தில் எழுகிறது. அப்படி நாம் தொடர்பு வைக்காத பொருளிடத்து எப்படி நம்மை ஒப்படைப்பது? அப்பொருளை நாம் எப்படி நேசிப்பது? உலக பந்தத்தில் உழலுகின்றவர்களுக்கிடையில் நீ இருந்து வருவாயாகில் இத்தகைய ஐயப்பாடுகள் உன் உள்ளத்தில் எழத்தான் செய்யும். ஸத்சங்கமும் தக்க குருவினுடைய தொடர்பும் இத்தகைய ஐயப்பாட்டை உன் உள்ளத்திலிருந்து அகற்றிவிடும். கடவுள் நாமத்தை ஜபிப்பதும், கடவுளுடைய மகிமையைக் கேட்பதும், பக்தர்களோடு கூடிவாழ்வதும்,பூஜை பண்ணுவதும் மனத்திலுள்ள அழுக்கைப் போக்குகின்றன. கண்ணாடியிலுள்ள அழுக்கை நீக்கினால் உன்முகம் அதில் தெளிவாகத் தெரிவது போன்று மனதிலுள்ள அழுக்கு நீங்கப் பெறும்பொழுது அதனுள்ளிருக்கும் ஆத்ம சொரூபத்தின் காட்சி கிடைக்கிறது. அப்பொழுது ஐயப்பாடுகள் எல்லாம் நீங்கிவிடும். பரிசுத்த மனமே உனக்குக் குருவாக இருந்து ஆத்மானுபூதிக்குரிய நெறியை உனக்குக் காட்டித்தரும்.

குருவினிடத்தும், சாஸ்திரத்தினிடத்தும் ஆழ்ந்த நம்பிக்கை வை. குரு காட்டித் தந்துள்ள நெறியையும், சாஸ்திரம் காட்டும் நெறியையும் சிரத்தையோடு பின்பற்று. பாத்திரத்தைத் துலக்கத் துலக்க அது சுத்தமாவது போன்று சாதனை செய்கின்ற அளவுதான் மனம் சுத்தியடையும். சுவாசிப்பதும், உண்பதும் உடலுக்கு எவ்வளவு முக்கியமோ, சாதனை செய்வது அதைவிட முக்கியமானது. உணவில்லாது ஓரிரண்டு நாள் இருப்பதில் குற்றமில்லை. சாதனை இல்லாது ஒரு நாள்

கூடக் கழியக் கூடாது.

கடவுள் நாட்டத்தில் தீவிர நாட்டம் உடைய வனாக நீ இருந்து தீவிரமாகச் சாதனை செய்து வருவாயானால் உண்மை நெறி உனக்குக் காட்டப்படும். பிறகு நீ அந்நெறியில் தீவிரமாகச் செல்லலாம். ஒரு அழகான வைஷ்ணவப் பழமொழி உண்டு. அஃதாவது: "நீ குருவினுடைய கிருபையைப் பெற்றிருக்கலாம். கடவுளினுடைய கிருபையும் உனக்கு இருக்கலாம். பக்தருடைய கூட்டுறவும்உனக்கு அமைந்திருக்கலாம். ஆனால் உன்னுடைய மனதினது கிருபை உனக்கு இல்லாவிடில் நீ எவ்விதமுன்னேற்றமும் அடையமுடியாது." இதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள். இப்பொழுது நீ குருவின் கிருபையைப் பெற்றிருக்கிறாய். கடவுளினுடைய அருளைப் பெற்றிருக்கின்றாய். கடவுள் காட்சி பெறவேண்டுமென்ற ஆவலும் உனக்கு இருக்கிறது. நீ, உன்னுடைய மனதின் துணையைப் பெற முயல வேண்டும். அதற்குத் தன்னடக்கம் மிகவும் அவசியம். புலனடக்கம் பழகியவனுக்கு மனம் வசப்படுகின்றது. மனதை வசப்படுத்த முயல். நீ மனதுக்கு வசப்பட்டுவிடாதே. மனதை வென்றவனே மகாயோகி ஆகின்றான்.

கடவுளை உனக்குச் சொந்தமாகக் கருது. அப்பன் ஆகவும், அம்மை ஆகவும், அனைத்து உறவு ஆகவும், பெண் பொருள் யாவுமாகவும் உனக்கு இருப்பவர் கடவுள். இது உண்மை என்று உணர்ந்து உன்மனதை அவர்பால் நிலை நிறுத்து. உன்மனம் அவர்பால் சென்றுவிடு மானல் சாதனை எளிதாகிவிடும்.

மானுட வாழ்வு கிடைப்பது அரிது. அரிய மானுடப் பிறவியைப் பொருளுக்காகவும், போகத்துக்காகவும் பயன்படுத்துபவர்கள் உண்டு. அவர்கள் வீணே வாழ்ந்தவர்கள் ஆகின்றார்கள். நீ உனக்குக் கிடைத்த வாய்ப்பை அவர்கள் போன்று வீணாக்கி விடாதே. கடவுளுக்காக வாழ்ந்து வா. உன் வாழ்வு முழுவதையும் கடவுளுக்கென்றே ஒப்படைத்துவிடு. உனக்காக வாழும் இச்சையை ஒழித்துவிடு. அவரையே நம்பி இரு. அவரிடம் அடைக்கலம் புகுந்துவிடு. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்னும் பழமொழிக்கேற்ப கடவுளை நம்பி அவரிடம் உன்னை ஒப்படைத்து விடுவாயானால் உனக்கு வாழ்வில் துன்பம் இல்லை.

ஒரே உணவு எல்லாருடைய உடலுக்கும் பொருந்தாது. பிறந்த குழந்தைக்குத் தாய்ப் பால்தான் சிறந்தது. வயது வர, வர அதற்கு உணவுத் திட்டம் மாறி அமைகிறது. உள்ளத்திற்கும் உபதேசம் மாறி மாறி அமைய வேண்டும். சாதனையின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்குக் கூறும் உபதேசம் சாதனையில் மேல் நிலைக்கு வந்தவர்களுக்குப் பொருந்தாது. சாதகனுடைய மன நிலையை அறிந்து குரு உபதேசிக்கின்றார். சாதகனுடைய இயல்புக்கு ஏற்றபடியும் உபதேசம் அமைய வேண்டும். சிலருடைய இயல்புக்கு ஞானமார்க்கம் பொருந்தும். சிலருடைய இயல்புக்குப் பக்திமார்க்கம் பொருந்தும். சிலருடைய இயல்புக்குக் கர்ம மார்க்கம் பொருந்தும். சிலருடைய இயல்புக்கு ராஜமார்க்கம் பொருந்தும். அவரவர்களுடைய இயல்புக்கு ஏற்ற மார்க்கத்தை அறிந்து போதிப்பதுதான் சரியான போதனையாகும். அவரவர்கள் இயல்புக்கு ஏற்ற மார்க்கத்தைப் பின்பற்றும் பொழுது முன்னேற்றம் விரைவில் வந்து அமைகிறது. எல்லா மார்க்கங்களும் முடிவில் ஒரு பொருளிடத்தே சாதகர்களைக் கொண்டு சேர்க்கின்றன. மார்க்கங்களில் உயர்வு, தாழ்வு இல்லை. எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் முன்னேற்றம் அடையலாம். முன்னேற்றம் உன்னுடைய சிரத்தைக் கேற்றவாறு உண்டாகிறது. நீ எந்த மார்க்கத்தைப் பின்பற்றுகிறாய் என்பது முக்கியமான தன்று. நீ எத்தகைய சிரத்தை உடையவனாக இருக்கிறாய் என்பதுதான் முக்கியமானது. சிரத்தையோடு உன் இயல்புக்கு ஏற்ற மார்க்கத்தைப் பின்பற்றி சாதனையில் முன்னேற்றம் அடைந்து வருவாயாக. நீ பின்பற்றும் மார்க்கத்தில் ஆழ்ந்து போகலாம். உனக்கு அது சிறந்த மார்க்கமாகவும் இருக்கலாம். ஆனால் எல்லாரும் அதே மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்று நீ எண்ணக்கூடாது. வேறு மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர்களை நீ குறை கூறவும் கூடாது. அவரவர்கள் பின்பற்றுகிற மார்க்கம் அவரவர்களுக்குச் சிறந்த மார்க்கமாகிறது.

என் குருநாதர்

(சுவாமி விவேகானந்தர் நியூயார்க் நகரில் நிகழ்த்திய சொற்பொழிவு)

கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் பகர்ந்துள்ள ஒரு கோட்பாட்டை ஈண்டு எடுத்துக் கொள்வோம். "தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும் காலங்களில் எல்லாம் மனித சமுதாயத்தின் நலத்தைக் காப்பதற்கு நான் பிறப்பெடுத்து வருகிறேன்." சமுதாயத்தில் மக்கள் தொகை அதிகரிக்கும்பொழுது சில சூழ்நிலைகள் காரணமாக ஓர் புதிய ஒழுங்குப்பாடு ஆத்மீகத் துறையிலும், லௌகீகத் துறையிலும் தோன்றுவது அவசியமாகிறது. அப்புதிய ஒழுங்குப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு வல்லமை வாய்ந்த சக்தி படைத்தவர் இவ்வுலகத்துக்கு வருகிறார். பௌதிகத் துறையின் ஒழுங்கு முறைக்கு ஐரோப்பாக் கண்டம் முக்கிய இடமாக இருக்கிறது. ஆத்மீகத் துறையின் ஒழுங்குப் பாட்டுக்குச் சரித்திர காலம் முழுவதும் ஆசியாக் கண்டமே முக்கிய இடமாக இருந்து வருகிறது. இன்றைக்கு ஆத்மீகத் துறையில் ஒரு புதிய ஒழுங்குப்பாடு தேவைப்படுகிறது. இன்றைக்கு லௌகீகம் உச்ச நிலையில் இருக்கிறது. அது மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் இருக்கிறது. உலகப் பொருளை நம்பி மனிதன் தன்னுடைய தெய்வீக நிலையையும் மறக்கும் நிலையிலிருக்கின்றான். மனிதன் இன்றைக்குப் பணம் சேகரிக்கும் இயந்திரமாக ஆகிக்கொண்டிருக்கின்றான். அதில் இருந்து அவனைத்திருப்பித் திருத்த ஒரு சக்தி அவசியமாகிறது. உலக மயக்கம் என்ற மோகத்தை ஓட்டுவதற்கு ஒரு சக்தி வந்து கொண்டு இருக்கிறது. அந்தச் சக்தி செயலாற்றவும் தொடங்கிவிட்டது. மிக விரைவில் மனித சமுதாயத்துக்கு அதனுடைய உண்மையான இயல்பை ஞாபகத்துக்குக் கொண்டு வரும் சக்தி ஆசியாவிலிருந்து ஆரம்பமாகும். ஆசியாவே அதற்குக் கேந்திரமாக இருக்கும்.

உலக அமைப்பில் ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய செயல் உண்டு. எந்த நாடாவது தானே அனைத்தையும் பெற்றிருப்பதாகச் சொல்லுமானால் அது பொருளற்ற சொல்லாகும். நம்முடைய சிறு பிள்ளைத்தனத்தை என்னென்பது! குழந்தை விளையாட்டுப் பொருளை அத்தியந்தம் நேசிக்கிறது. அது தன் அறியாமையினால் உலகத்திலேயே தான் ஆசைப்படக்கூடிய சிறந்த பொருள் விளையாட்டுக் கருவிதான் என்று நினைக்கிறது. அங்ஙனம் ஜட சக்தியை நன்கு பயன்படுத்தி வருகின்ற நாடு, ஜட சக்தி ஒன்றே விரும்பிப் பெறுவதற்கு உரியது என்றும், அது ஒன்றே வளர்ச்சியைத் தருவது என்றும், அது ஒன்றே நாகரிகத்தை வளர்க்கும் என்றும் நினைக்கின்றது. மேலும் மற்ற நாட்டினர் ஜடசக்தியைப் பெற விரும்பாதும், அச்சக்தியைப் பெறாதும் இருப்பாராயின் அவர்கள் வாழத்தகுதியற்றவர்கள் என்று ஜடசக்தியைப் பெற்றுள்ள நாடு நினைக்கிறது. ஜடசக்தியைப் பெறாத நாடு இருந்தும் பயனில்லை என்று ஜடசக்தியைப் பெற்றுள்ள நாடு நினைக்கிறது. இதற்கு நேர்மாறாக மற்றொரு நாடு வெறும் ஜடசக்தியைப் பெற்றிருப்பது பயனில்லை என்று நினைக்கின்றது. கீழ்நாடு இவ் உலகத்திலுள்ள அனைத்தையும் பெற்றிருந்தும் ஆத்மீகத்தைப் பெறாது இருந்தால் அவைகளினால் என்ன பயன் என்கின்றது. இது கீழ் நாட்டாரின் லட்சியமாகும். மற்றது மேல் நாட்டாரின் லட்சியமாகும்.

ஒவ்வொருவருடைய நோக்கமும் சிறந்ததே. ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மதிப்பு உண்டு. இன்றைக்கு அவ் இரண்டு நோக்கங்களையும் ஒற்றுமைப்படுத்துவதே நம்முடைய சீர்திருத்தமாகும். மேல்நாட்டவர்களுக்கு இவ் உலக வாழ்க்கை எவ்வளவு உண்மையானதோ கீழ் நாட்டவர்களுக்கு ஆத்மீக வாழ்க்கை அவ்வளவு உண்மையானது. ஆத்மீக வாழ்க்கையில்தான் தாங்கள் விரும்பத்தக்கதும் தாங்கள் அடைய வேண்டியதும் உள்ளன என்று கீழ் நாட்டவர் கருதுகின்றனர். ஆத்மீக வாழ்க்கை தான் அழியாத வாழ்க்கை என்று கீழ் நாட்டவன் எண்ணுகின்றான். மேல் நாட்டான், கீழ் நாட்டானைக் கற்பனை மனிதன் என்று எண்ணுகின்றான். கீழ் நாட்டான் மேல் நாட்டானைக் கற்பனை மனிதன் என்று எண்ணுகின்றான். மேல் நாட்டானுடைய உலக வாழ்வு பொம்மைக் கருவிகளை வைத்து விளையாடுவது

போன்று அநித்தியமானதென்று கீழ்நாட்டான் கருதுகின்றான். வயது முதிர்ந்த ஆடவரும் மகளிரும் அழிந்து போகக்கூடிய இவ் உலகப்பொருளை மிகப் பெரியதாக எண்ணுவதைப் பார்த்துக் கீழ்நாட்டான் புன்னகை புரிகின்றான். ஒவ்வொருவரும் மற்றவரைக் கனவு காண்பவர் என்று நினைக்கின்றனர். மேல்நாட்டாருடைய கருத்து வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு எவ்வளவு அவசியம் என்று கருதுகிறோமோ கீழ்நாட்டாருடைய கருத்தும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவ்வளவு அவசியமானதென்று கருதவேண்டும். கீழ்நாட்டாருடைய கருத்து வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அதிகம் தேவை என்பது என்னுடைய கருத்தாகும். யந்திரங்கள் மனிதனுக்கு ஒரு பொழுதும் இன்பத்தைத் தரமாட்டா. இனியும் இயந்திரத்தால் மகிழ்ச்சி அடையப் போவதில்லை. யந்திரத்தின் மூலமாகத்தான் இன்பம் பெறலாம் என்று புகட்டுபவர்கள் உண்டு. தாங்கள் புகட்டுவதை மக்கள் நம்பும்படியும் செய்கின்றனர். ஆனால் இன்பம் மனதில்தான் இருக்கிறது. மனதை வென்றவன்தான் யாண்டும் இன்புற்று இருக்கமுடியும். மற்றவர்களுக்கு இன்புற்றிருப்பது சாத்தியம் இல்லை. ஏன் என்றால் ஜடசக்தியினால் நிலைத்த இன்பத்தைத் தரமுடியாது. மின்சக்தியைக் கம்பியின் மூலம் செலுத்தலாம் என்று கண்டுபிடித்த மனிதன் அறிஞனாக ஏன் போற்றப்படுகின்றான்? இதைவிட லட்ச மடங்கு அற்புதச் செயல்களை ஒவ்வொரு க்ஷணமும் இயற்கை செய்கிறதல்லவா? எனவே நாம் ஏன் அந்த இயற்கையை வீழ்ந்து வணங்கக்கூடாது? உலகம் முழுவதையும் நீ வெற்றி கொண்டாலும் இவ் இயற்கையில் உள்ள ஒவ்வொரு அணுவின் மீது ஆட்சி செலுத்தினாலும் அதனால் உனக்கு ஆகப்போவது என்ன? அது இன்பத்தை ஒருகாலும் உனக்குத் தரப்போவதில்லை. உனக்கு இன்பத்தைத் தரும் சக்தி உன்னிடத்திலேயே இருக்கிறது. உன்னை நீ வெல்லுவதற்கு முன்பு அவ்வின்பத்தைப் பெறமுடியாது. இயற்கையை வெல்லுவதற்கு மானுடன் பிறந்திருக்கின்றான். அது உண்மை. மேல் நாட்டவர்கள் ஜட சம்பந்தமான வெளி உலகை இயற்கை என்கின்றனர். மலைகளும், கடல்களும், நதிகளும், விதவிதமான எல்லையற்ற சக்திகளும் இவ் இயற்கையைப் பெருமிதப்படுத்துகின்றன. ஆனால் இவற்றைவிடப் பெருமைக்குரியது மனிதனுடைய அக உலகம் ஆகும். அவ் அக உலகம் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி ஆகிய இவை எல்லாவற்றையும் விட மகிமை வாய்ந்தது. இவ் உலக வாழ்வைக் காட்டிலும், நம்முடைய சிறு வாழ்வைக் காட்டிலும் அக உலகம் மேலானது. அதில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஏராளமாக இருக்கிறது. புற உலக ஆராய்ச்சியில் மேல் நாட்டவர்கள் சிறந்தவர்களாக விளங்குவது போன்று அக உலக ஆராய்ச்சியில் கீழ் நாட்டவர்கள் சிறப்புற்று இருக்கிறார்கள். எனவே ஆத்மீகத்துறையில் வருகின்ற சீர்திருத்தங்களெல்லாம் கீழ்நாட்டவர்களிடமிருந்தே வருகின்றன. கீழ் நாட்டவர்கள் யந்திரங்களை உருவாக்குவதுபோன்ற தொழில் துறையில் உள்ள விஷயங்களை மேல் நாட்டவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேல்நாட்டவர்கள் ஆத்மீக விஷயத்தைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ, வாழ்க்கையைப் பற்றிய ரகசியத்தைப் பற்றியோ அறிந்துகொள்வதற்குக் கீழ் நாட்டவர்களை அணுகவேண்டும்.

உங்களுக்கு முன் ஆத்மீக அலையை இந்தியாவில் வீசும்படி செய்த பெரியார் ஒருவருடைய வாழ்க்கையைப் பகரப் போகின்றேன். அவருடைய வாழ்க்கையைப் புகட்டுதற்கு முன்பு இந்தியா என்றால் என்ன என்பதையும், இந்தியாவின் ரகசியத்தைப்பற்றியும் உங்களுக்குப் புகட்டுவேன். இவ் உலகத்தால் மயக்குண்டு, இவ் உலகத்துக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதை அறியாது அறிவுக் குருடராக இருப்பவர்கள், உண்பதிலும், பருகுவதிலும், புலன் இன்பம் அனுபவிப்பதிலும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், பொன்னும், பூமியுமே உடைமைப் பொருள்களெனக் கருதுபவர்கள், புலன் இன்பமே லட்சியம் எனக்கொண்டிருப்பவர்கள், பணத்தையே கடவுள் எனப் போற்றுபவர்கள், இவ் உலகிலும், மறு உலகிலும் சுகஜீவன வாழ்க்கையையே லட்சியமாகக் கொண்டிருப்பவர்கள், இவ் உலகத்துக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதில் கருத்துச்

செலுத்தாதவர்கள், இவ் உலக போகங்களுக்கிடையில் வாழ்ந்து அதற்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதைச் சிந்திக்காதவர்கள்— இத்தகையவர்கள் இந்தியாவுக்குச் செல்வார்களேயானுல் அவர்கள் எதைப் பார்ப்பார்கள்? ஏழ்மையையும், அசுத்தத்தையும், மூடநம்பிக்கையையும், அறியாமையையும், கொடுமையையும் அவர்கள் இந்தியாவில் காண்பார்கள். அவர்களுடைய கருத்தில் நாகரீகம் என்பது உடையிலும்,உலகக்கல்வியிலும், சமூக அந்தஸ்திலும் இருக்கிறது. ஆனுல்கீழ்நாட்டவர்களோ, மேல்நாட்டவர்களைப்போன்று லௌகீக அந்தஸ்தை அபிவிருத்தி பண்ணுவதிலேயே தங்கள் சக்தியைச் செலவழிப்பவர்கள் அல்லர். அதற்கு மாறுபட்ட மார்க்கத்திலேயே கீழ்நாட்டவர்கள்மனதைச் செலுத்தி இருக்கின்ருர்கள். மற்ற நாட்டுமக்களை வெல்லுவதற்காகத் தங்கள் நாட்டுஎல்லையைக்கடந்துபோகாத மக்கள் இந்தியர்களே ஆவர். மனித வரலாற்றிலேயே மற்றவர்களுடைய பொருளுக்கு ஆசை வைக்காதவர்கள் இந்தியர்களே ஆவர். அவர்களுடைய நாடு வளம்பொருந்தியதாக இருந்தது. கஷ்டப்பட்டு உழைத்துச்செல்வத்தைத் திரட்டினுர்கள். அவர்களுடைய நாட்டின் செழுமையைக் கண்டு ஆசைகொண்ட மற்ற நாட்டினர்கள் அந்நாட்டைக் கொள்ளையடிக்க முயன்றனர். தங்களை அநாகரீகர்கள் என்று பிறர் நினைத்தாலும், தங்களைப் பிறர் கொள்ளையடித்தாலும் அவர்கள் மனக்கசப்பு அடையாது இருந்தார்கள். அப்படித் தீங்கு செய்தவர்களுக்கும் பாரமார்த்திகத்தத்துவங்களைப் புகட்டிவந்தார்கள். கடவுளைப்பற்றிய உண்மையை அவர்கள் உலகெங்கும் பரவச்செய்தார்கள். மக்கள் வாழ்க்கையின் இரகசியங்களை உலகத்துக்கு எடுத்து விளக்கினுர்கள். மனிதனைமறைத்திருக்கும் அறியாமை என்னும் திரையை அகற்றுவதற்கு வழி காட்டினுர்கள். இவ் உலகுக்கு அப்பால் உண்மை இருக்கிறதென்றும் அவர்கள் அறிந்திருந்தனர். மாசுபடுத்த முடியாததும், குறை எதுவும் இல்லாததும், காமத்தால் பாதிக்கப்படாததும் தெய்வம் ஆகும். அத்தெய்வீகத் தன்மையை நெருப்பு எரிக்காது. நீர் நனைக்காது. காற்று உலர்த்தாது. கத்தி வெட்டாது. இவ்வுலகப்பொருள்கள் மேல்நாட்டவர்களுக்கு எவ்வளவு உண்மையாகத் தெரிகின்றனவோ, தெய்வீகத் தன்மை கீழ்நாட்டவர்களுக்கு அவ்வளவு உண்மையாகத் தெரிகிறது.

நாட்டுக்காகப் பீரங்கி குண்டுக்கு உயிரைக் கொடுக்க மேல்நாட்டவர்களாகிய நீங்கள் ஆயத்தமாக இருந்து உங்கள் வீரத்தை வெளிப்படுத்துகிறீர்கள். நாட்டுக்கு உயிர் கொடுக்கும் தேசாபிமானிகளாக நீங்கள் இருக்கின்றீர்கள். தெய்வத்துக்காக உயிர் கொடுக்கும் உறுதி பெற்றவர்களாக கீழ்நாட்டவர்கள் இருக்கின்ருர்கள். உலகம் அநித்தியம் என்றும் கனவு போன்றது என்றும் ஒருவர் எடுத்துக்காட்டினுல் அதைக் கீழ்நாட்டவர்கள் நம்புகின்றனர். தங்கள் நம்பிக்கை உண்மையானது என்பதை விளக்குவதற்குத் தங்கள் சொத்துக்களையும், துணிமணிகளையும் துறந்து விடுகின்றனர். உடல் அநித்தியம் என்றும் ஆத்மா நித்தியம் என்றும் அறிகின்றவன் தன்னுடைய உடலைத் துரும்பை நதியில் தூக்கி எறிவது போன்று எறிந்துவிட ஆயத்தமாக இருக்கின்ருன். கீழ்நாட்டவருடைய வீரம் இத்தகைய செயல்களில் வெளிப்படுகின்றது. மரணத்தைச் சகோதரனை வரவேற்பது போன்று வரவேற்கின்றனர். தங்களுக்கு அழிவில்லை என்பதை அவர்கள் முற்றிலும் அறிந்திருப்பதால் மரணத்தைப்பற்றி அஞ்சுவதில்லை. அநேக நூற்றுண்டுகள் அவர்கள் மீது அந்நிய படையெடுப்பு நிகழ்ந்திருக்கின்றது. அந்நியருடைய கொடுங்கோன்மைக்கு ஆளாகிவிருக்கின்றனர். எனினும் அவர்கள் அழியாது தங்களை யாரும் வெல்லமுடியாதவாறு விளங்குகின்றனர். அத்தகைய பலம்படைத்த சமூகம் இன்றும் உயிரோடு இருக்கிறது. கொடுங்கோன்மை நிகழும் இக்காலத்திலும் அந்த நாட்டில் அருளாளர்கள் தோன்ற இருக்கின்றனர். ஆசியா ஆத்மீகத்துறையில் பேரருளாளர்களைத் தோற்றுவித்திருக்கிறது. மேல்நாடுகள் விஞ்ஞானத்திலும் அரசியல் துறையிலும் அறிவாளிகளைத் தோற்றுவித்திருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் மேல்நாட்டு நாகரீகம் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தபொழுது மேல்நாட்டு வெற்றி வீரர்கள் கையில்வாளேந்தி மகரிஷிகளின் வழியில் வந்த மக்களைப் பார்த்து "காட்டு

மிராண்டிகள் எனவும், பகல் கனவு காண்கின்றவர்கள் எனவும், மூடநம்பிக்கை உள்ள மதத்தை உடையவர்கள் என்று திட்டிய பொழுதும், கடவுள் என்றும் ஆத்மா என்றும் பொருளற்ற சொற்களைப் பேசுகிறார்கள் என்று கூறிய பொழுதும், கீழ்நாட்டவர்களுடைய துறவுநிலை எல்லாம் பொருளற்றது என்று கூறிய பொழுதும் கீழ்நாட்டு இளைஞர்களிடையே ஓர் எண்ணம் எழுந்தது. "நாம் இவ்வளவு காலம் வாழ்ந்த வாழ்க்கை வீண் தானா? நம்முடைய பழைய சாஸ்திரங்களைக் கிழித்துவிட்டு, தத்துவங்களை எல்லாம் எரித்துவிட்டு, மதபோதகர்களை யெல்லாம் ஓட்டிவிட்டு, கோயில்களை எல்லாம் இடித்துத் தள்ளிவிட்டு மேல்நாட்டவர்களுடைய போக்கில் நம்முடைய வாழ்க்கையை ஆரம்பிப்பதா?" என்ற கேள்வி அவர்களுடைய உள்ளத்தில் எழத்தொடங்கியது. கத்தியைக் காட்டி, துப்பாக்கியைக் காட்டி, தன் மதத்தைப் பரப்பிய மேல்நாட்டு வீரன் நம்முடைய வழிபாடுகளும் விக்கிரக ஆராதனைகளும் குருட்டு வழிபாடு என்று சொன்னான் அல்லவா? மேல்நாட்டு முறையில் ஆரம்பித்த பள்ளிகளில் பயின்று அவர்களுடைய கருத்தை குழந்தை முதல் பருகி வந்த இளைஞர்களுக்கு நம் வாழ்க்கையைப் பற்றி சந்தேகம் எழுந்ததில் ஆச்சரியம் இல்லை. நம் மூடக் கொள்கைகளைக்களைந்தெறிந்து விட்டு உண்மையைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதற்குப் பதிலாக மேல்நாட்டவர்கள் என்ன சொல்கிறார்களோ அதை வேதவாக்காகக் கொண்டனர். மதபோதகர்கள் ஒழியவேண்டும், வேதங்கள் எரிக்கப்படவேண்டும் என்ற நிலை இந்திய இளைஞர்களிடையே ஏற்பட்டது. இந்த எண்ணம் இளைஞர்கள் உள்ளத்தில் எழுந்தபோது இந்தியாவில் சமயத்துறையில் சீர்திருத்தம் என்னும் அலை எழுந்தது.

(தொடரும்)

மணம் செய்து கொள்வதன் மூலம் நீ பந்தத்துக்குள் அகப்பட்டுக் கொண்டவனாகின்றாய். மணம் செய்துகொள்வதற்கு மனப்பூர்வமாக உனக்கு விருப்பமில்லை எனில் நீ மணம் கொள்ளாதிருப்பதே நல்லது. உன் தாயை நீ கவனித்தாக வேண்டும். தாயின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் வசதி செய்து வைக்கவேண்டும். தாய்க்கு வேண்டியதைச் செய்தான பிறகு நீ உலக பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு வேண்டியதைச் செய். உலகத்தில் நீ அகப்பட்டுக் கொள்ளும்போது உன் உறவினர்களும், நண்பர்களும் உன்னைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பார்களேயன்றி உனக்கு உதவிக்கு வரமாட்டார்கள். முதலில் அவர்கள் பந்தத்துக்குள் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களைச் சார்ந்திருப்பவர்கள் பல பேர் இருக்கிறார்கள். இந்நிலையில் இருக்கும் அவர்கள் உனக்கு எப்படி உதவி புரிவார்கள்?

மணம் புரிந்துகொண்டவர்கள் எத்தகைய இன்னலுக்கு உள்ளாக வேண்டும் என்பதற்கு உன்னைச் சுற்றிலுமுள்ள நண்பர்களும், உறவினர்களும் உனக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நீ பாடம் கற்றுக்கொள். நோய் உள்ளவன் தனக்கு நோய் இருப்பதாக அறிந்த பிறகுதான் அதற்குப் பரிகாரம் தேடுவான். நீ உலக வாழ்க்கை துன்பமானது என்பதை அறிகிறபொழுதுதான், உலக இன்பத்தில் உனக்கு வெறுப்பு ஏற்படும் பொழுதுதான் உனக்குக் கடவுளிடம் பக்தி அதிகரிக்கும். ஆரம்பத்தில் இறைவனுடைய நாமத்தை ஜபிக்கும் பழக்கத்தை உனக்கு நீயே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும். தொடர்ந்து ஜபம் செய்து வருவாயானால், ஜபம் செய்வதில் உனக்கு ஒருவித சுவை உண்டாகும். உனக்கு அதில் சுவை ஏற்பட்டதும் ஜபம் செய்வதை உன்னால் நிறுத்தி விடமுடியாது. தன்னம்பிக்கை மிகவும் அவசியம். இந்த ஜன்மத்திலேயே ஆத்ம ஞானம் பெற்றாகவேண்டும் என்று உறுதியாகத் தீர்மானம் செய். அதில் உறுதிப்பாடு உண்டாகும் அளவு காமக் குரோதங்களை நீ வென்றுவிடலாம்.

— *சுவாமி பிரேமானந்தர்*

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-105

634. शैलेन्द्रतनया சைலேந்த்ரதனயா— பர்வதராஜனுடைய புதல்வி என்பது இதன் பொருள்.

ஹிமாலயம் என்னும் பெரிய மலைக்கு ஹிமவான் என்னும் பெயர் வந்துள்ளது. மகத்தான அம்மலை ஒரு பேர்அரசனைக் கருதப்படுகிறது. மலைக்கு உயிர்உண்டு என்பது கோட்பாடு. மலை இருந்த இடத்திலேயே இருப்பதால் அது ஸ்தாவரம் எனக் கருதப்படுகிறது. கிருஷ்ண பரமாத்மா தன்னுடைய விபூதிகளை விளக்குமிடத்து ஸ்தாவரங்களுள் தான் ஹிமாலயமாக இருப்பதாக இயம்புகிறார். சைலம் என்றால் மலை எனப் பொருள்படுகிறது. மலைகளுக்கெல்லாம் ஹிமவான் தலைவனாக இருப்பதால் சைலேந்திரன் என்னும் பெயர் அவனுக்கு வந்துள்ளது. வரைராஜன் எனவும் அவன் அழைக்கப் பெறுகிறான். ஹிமவானுக்குப் புதல்வியாக அம்பிகை அவதரித்ததினால் அவளுக்கு ஹைமவதி என்னும் பெயர் வந்துள்ளது. பர்வதராஜனுக்குப் புதல்வியாக அவள் அவதரித்திருப்பதால் அவளுக்குப் பார்வதி என்னும் பெயர் வந்துள்ளது. கிரி என்பது மலைக்கு அமைந்துள்ள மற்றொரு பெயர். மலைமகளாகிய அவளுக்கு கிரிஜா என்பதும் ஒரு பெயர். இப்பெயர்கள் அம்பிகைக்கு அமைந்திருப்பதில் மேலான கோட்பாடு ஒன்று விளக்கப்பெறுகிறது.

பிரபஞ்சத்தை அசேதனம் என்றும், அப் பிரபஞ்சத்திலே வசித்துவருகிற உயிர்வகைகளைச் சேதனம் என்றும் கூறுவது ஐதிகம். ஜடப் பொருள் சேதனமாகப் பரிணமிப்பது இயற்கையின் திட்டம் என்பது ஆன்றோர் துணிபு. அதே கோட்பாட்டை நவீன பௌதிக விக்ஞானமும் எடுத்து இயம்புகிறது. ஒருநிலையில் அசேதனமாயிருப்பது மற்றொருநிலையில் சேதனமாகப் பரிணமிக்கிறது. மலையானது அசேதனம், சேதனம் ஆகிய இரண்டுக்கும் இடைநிலையிலிருக்கிறது. அம்பிகை தானே ஜடசக்தியாகவும், சித்சக்தியாகவும் இலங்குகின்றாள். ஆதலால் ஜடசக்தியை மட்டமானதென்று புறக்கணிக்கலாகாது. அம்பிகைக்கு அமைந்துள்ள இப்பெயர்கள் யாவும் அவள் தன்னுடைய தவத்தால் ஜடநிலையினின்று சேதன நிலைக்கு அவதரித்து வருகிறாள் என்னும் கோட்பாட்டை விளக்குகின்றன. தென் முனையில் பார்வதி தேவி குமரியாயிருந்து கொண்டு சிவத்தை அடைவதில் தவம்புரிதலில் இக்கோட்பாடு அடங்கியிருக்கிறது. உயிர் வகைகளாகிய ஜீவகோடிகள் படிப்படியாகத் தங்களுடைய ஜடநிலையைப் புறக்கணித்துவிட்டுச் சேதனநிலைக்குப் பரிணமித்துவருவதையும் அம்பிகையினுடைய இத்திருநாமங்கள் ஒரு போக்கில் விளக்குகின்றன. இந்த நாமங்களை அர்ச்சனையில் ஓதுகின்ற ஆத்ம சாதகர்கள் தாங்களும் ஜடாவஸ்தையைக் கடந்து சேதனவஸ்தைக்கு விரைவில் வரவேண்டும் என்று உணர்வார்களாகில் அப்பொழுது அவர்கள் புரிகிற அர்ச்சனை பொருள் புதைந்ததாகிறது.

635. गौरी கௌரீ— இளம் மஞ்சள்நிறம் வாய்க்கப் பெற்றவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பொன்னார் மேனியன் என்று சிவனாரும், பொன்னார்மேனியள் என்று அம்பிகையும் கூறப்பெறுகிறார்கள். தங்க நிறத்துக்கு கௌர வர்ணம் என்பது மற்றொரு பெயர். பொன்னார் மேனியளாக அம்பிகை இலங்குவதால் அவள் கௌரீ என்னும் நாமத்தைப் பெற்றிருக்கிறாள். தக்ஷப்பிரஜாபதிக்குச் செல்வியாக அம்பிகை அவதரித்திருந்தாள். அந்தத் தக்ஷப் பிரஜாபதி பெரிய யாகம் ஒன்று புரிந்தான். அந்த யாகத்துக்குத் தேவர்களெல்லாம் அழைக்கப்பெற்றனர். ஆனால் சிவனாருக்கும், அவருக்குச் சக்தியாக வாய்த்த கௌரீ தேவிக்கும் அழைப்பு இல்லை. தந்தையின் வீட்டிலிருந்து அழைப்பு வரவேண்டியது அவசியமில்லை என்று கருதிய அம்பிகை சிவனார் செய்த எச்சரிக்கையையும் ஏற்றுக்கொள்ளாது தந்தையின் யாகசாலைக்குச்சென்றாள். அந்த யாகசாலையில் அவள் அவமதிக்கப்பட்டாள். அவமானத்தைச் சகிக்க முடியாதவளாய் இருந்த அம்பிகை யோக நிலையிலிருந்து கொண்டு ஆங்கு சரீரத்தை உகுத்தாள். பின்பு அவள் ஹிமவானுக்குப் புதல்வியாக அவதரித்த பொழுது அவள் தரித்

திருந்த மேனி சங்குபோன்றும், மல்லிகைப் பூ போன்றும், பூர்ண சந்திரன் போன்றும் வெண்மை நிறம் படைத்ததாயிருந்தது. அக் காரணத்தை முன்னிட்டு கௌரீ என்னும் சொல்லுக்கு வெண்மை நிறம் என்னும் பொருளும் வந்துள்ளது.

நதி ஒன்றுக்கும், பத்துவயதுள்ள கன்னிகை ஒருத்திக்கும் கௌரீ என்ற பெயர் வந்துள்ளது. இக்காரணத்தை முன்னிட்டும் அம்பிகை கௌரீ என்று அழைக்கப் பெறுகிறாள். பத்ம புராணத்தில் இயம்பியிருக்கிறபடி கான்யகுஜ்ஜம் என்னும் பீடத்துக்கு அதிஷ்டான தெய்வமாக அம்பிகை வீற்றிருப்பதால் அவளுக்கு கௌரீ என்னும் பெயர் வந்திருக்கிறது என்பது மற்றொரு ஐதிகமாகும்.

636. **गन्धर्वसेविता கந்தர்வ ஸேவிதா**— கந்தர்வர்களால் சேவிக்கப்படுபவள் என்பது இதன் பொருள்.

கந்தர்வர்கள் தேவலோகத்தில் சிறந்த பாடகர்களாக இலங்கி வருகிறார்கள். அவர்களுக்குத் தலைவனாக இருப்பவன் விஸ்வாவசு என்னும் பெயர் படைத்திருக்கிறான். அம்பிகையைச் சேவிப்பதற்குப் பல உபாயங்கள் இருக்கின்றன. சாதகன் ஒருவனுக்கு வாய்க்கப் பெற்றுள்ள வாய்ப்புகளில் இன்னிசையும் ஒன்றாக இருக்குமாகில் இந்த இசையை அவன் வழிபாட்டுக்கு நன்கு பயன்படுத்தலாம். கானரசம் பொருந்திய பாடல்களைக் கொண்டு அம்பிகையை வழுத்தினால் அந்தக் கானரசமானது மற்ற உயிர் வகைகளையும் வழிபாட்டின் கண் கவர்ந்திழுக்கின்றது. இன்னிசையைப் போகத்துக்கும் பயன்படுத்தலாம், யோகத்துக்கும் பயன்படுத்தலாம். அதை யோகத்துக்கென்றே பயன்படுத்துவது சாலச்சிறந்தது என்னும் கோட்பாடு கந்தர்வ ஸேவிதா என்னும் நாமத்தில் அடங்கியிருக்கிறது. கந்தர்வர்கள் தங்களுடைய பாடல் திறனை அம்பிகை வழிபாட்டுக்குப் பயன்படுத்திய சிறப்பும் இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

637. **विश्वगर्भा விச்வகர்பா**— அகிலாண்டங்களையும் தன்னுள் உடைத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இந்த நாமத்தின் உட்பொருளை அறிந்து கொள்ளுதற்கு நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்றைச் சான்றாக எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. பாரமார்த்திக வாழ்வு வாழ்ந்து வந்த ஒருவன் யாத்திரை பண்ணப் புறப்பட்டான். சில நாட்களாக யாத்திரையும் செய்து கொண்டிருந்தான். ஸ்தலயாத்திரையில் விருப்பம் வைத்திருந்த மற்றொரு மனிதன் இவன் எந்த க்ஷேத்திரத்துக்கு யாத்திரை போய்க்கொண்டிருந்தான் என்று வினவினான். பெரிய க்ஷேத்ரங்களில் தேடி பூமாதேவியின் தரிசனம் பெற எண்ணியிருந்ததாக இம் மனிதன் விடைவிடுத்தான். விஷயத்தை அறிய வினவினவன் இந்த யாத்ரீகனுக்கு மேலும் எடுத்து மொழிந்தான். நீ சூரியனுடைய தரிசனத்தைப் பெறுவதற்கு யாத்திரை போவதற்கு நிகராகிறது பூமாதேவியின் தரிசனத்தை நாடி நீ போய்க்கொண்டிருப்பது. அலை எங்ஙனம் சமுத்திரத்திற்குப் புறம்பானதாக இருக்க முடியாதோ அங்ஙனம் உடல் தாங்கியிருக்கும் மானுடனொருவன் எப்பொழுதாவது எவ்விடத்திலாவது பூமாதேவியின் சந்நிதிக்குப் புறம்பாயிருப்பவனல்லன். பூமாதேவிதானே மக்கள் எல்லாரையும் தாங்கிக்கொண்டு இருக்கிறாள். அவளுடைய மகிமையை இருக்கும் இடத்திலிருந்து அறிந்து கொள்ளுதல் உசிதம். அவளுடைய தரிசனம் பெறுவதற்காக எங்கெங்கோ யாத்திரை போவது பொருளற்றது. இப்புவியில் எங்குப் பிறந்து எங்கு வாழ்ந்திருந்தாலும் மனிதன் பூமாதேவியின் மடியிலேயே இருந்து வருகிறான்.

அம்பிகைக்கு கோயில் எழுப்பி அதில் ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டைபண்ணி அந்த மூர்த்திக்கு நித்திய வந்தனை வழிபாடு செய்வது பூமாதேவியின் தரிசனத்துக்கு யாத்திரை போவதற்கு நிகராகிறது. அகிலாண்டங்களையும் தன்னகத்து அடக்கி வைத்திருக்கிற அம்பிகை தானே அகிலாண்ட சொரூபிணியாகவும், அகிலாண்ட நாயகியாகவும் இலங்கி வருகிறாள். ஆத்ம சாதகன் ஒருவன் தெய்வ சாந்நித்தியத்தை நாடி இங்குமங்கும் அலைந்து திரிவது பொருளற்றது. 'பார்க்கும் இடமெங்கும் பரவெளியாய்த் தோன்ற ஒரு வார்த்தை சொல்ல வந்த மனுவே பராபரமே' என்கிறார் தாயுமானவர். மனிதன் கடவுளைத்தேடித் திரியலாகாது. அவன் எதைக் காண்கின்றானோ

அதைக் கடவுள் சொருபமாகக் காண்கிற மன பரிபாகத்தைப் பெறுவது அவசியமாகிறது. 'விச்வகர்பா' என்று அம்பிகையைப் பற்றி இயம்பும்பொழுது அவள்தானே அனைத்து மாய் மிளிர்ந்து கொண்டிருக்கிறாள். என்னும் உண்மை வெளியாகிறது. ஆதலால் அவளுக்கு ஆலயம் எழுப்புவதும் ஒரு வடிவத்தின் வாயி லாக வழிபாடு செய்வதும் சிறு குழந்தைகள் மணலில் வீடுகட்டி மணலில் சோறு சமைத்து விளையாடுவதற்கு நிகராகிறது.

மானுடன் ஒருவன் எவ்வுயிரை எவ்வடிவத் தில் பார்த்தாலும் அவ்வடிவத்தின் வாயிலாக அம்பிகையின் சொருபத்தையே காணுகிறான். ஆத்ம சாதகனொருவன் தன் மனப்பான்மையை மாற்றியமைத்துக்கொள்வதே நல்ல வழிபாடு ஆகிறது. உலகனைத்துமாய், உயிர்களனைத்து மாய் அம்பிகை சர்வகாலமும் இலங்கிக்கொண் டிருக்கிறாள். ஆதலால் உயிர்களோடு இணக் கம் வைக்கின்ற ஆத்ம சாதகனொருவன் அவ் உயிர்களை அம்பிகையின் சொருபமாகப் பொருள்படுத்த வேண்டும். பெரியது, சிறியது, பாங்குடையது, பாங்கற்றது, சேதனமாய், அசேதனமாய்த் தென்படுகின்ற அனைத்தும் அம்பிகையின் சொருபங்களாம். யாரொருவன் இக்காட்சி காணுகிற பாங்கில் தன் மனதைத் திருத்தியமைக்கின்றானோ அவனே சரியான முறையில் அம்பிகை வழிபாடுசெய்பவனாகிறான். விச்வகர்பா என்னும் ஒரு நாமத்தில் அம்பிகை யின் ஸ்தூல அமைப்பு முழுவதும் அடங்கி யிருக்கிறது. இவ்வுண்மையைச் சுவானுபவத் தில் கொண்டுவர முயலுவதே நல்ல ஆராதனை ஆகிறது.

638. स्वर्णगर्भा ஸ்வர்ண கர்பா— பொன் னார் மேனியளாகப் பொலிகிறவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரளயம், சிருஷ்டி ஆகிய இரண்டு நிலைகள் இரவு பகல் போன்று மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பிரளயத்தில் அகிலாண் டங்களும் தோன்றாநிலை எய்துகின்றன. நமக் குக் கனவற்ற உறக்கத்தில் எங்ஙனம் நாமும் அகிலாண்டங்களும் மறைந்துபட்டுப்போகின்ற னவோ அங்ஙனம் அந்த நிகழ்ச்சி அண்ட கோடிகளனைத்துக்கும் பொதுவாக நிகழுகிற பொழுது அது பிரளயம் எனப்படுகிறது. ஒடுங்கியுள்ள அவையாவும் தோற்றத்துக்கு வரும்பொழுது இருளாய் இருப்பது எதுவோ அது உருக்கி எடுத்த தங்கம் போன்று பிர காசத்தைப் பெறுகிறது. ஆதலால் சிருஷ்டி கர்த்தாவுக்கு ஹிரண்யகர்ப்பன் என்னும் பெயர் வந்துள்ளது. அண்டம் என்றால் முட்டை என்று பொருள்படுகிறது. பிரம் மாண்டம் என்று சொல்லுகிறவிடத்து வடிவ மற்றிருந்த பொருள் ஸ்வர்ணம் அல்லது தங் கத்தின் பிரகாசத்தை உடைய பெரியதோர் உருண்டையாக வடிவெடுக்கிறது. பிறகு அதினின்று நாமரூபங்களனைத்தும் உருவெடுக் கின்றன. அதே கோட்பாடு அம்பிகையை ஸ்வர்ணகர்பா என்று அழைக்கிற பொழுது அந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது. தங்கத் துக்கு நிகரான ஒழுங்குப்பாடும், அழகும், வடி வெடுத்தவளாக அகிலாண்டகோடி பிரம் மாண்டநாயகி இலங்குகின்றாள். அனைத்தை யும் அம்பிகையின் சொருபமாகக் காண்பது பரஞானத்தின் முதற்படியாகிறது. அந்நிலையை அடையப் பெறுகிற ஆத்மசாதகன் எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அதைப் பொன் னார் மேனி படைத்ததாகப் பார்க்கிறான். அழ கற்றது என்பது ஒன்றுமில்லை. ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வோர் உயிரிலும் அழகு நிறைந்திருக்கிறது. அவையாவும் தேஜோ மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஒழுங்கற்றவைகள் போன்று தென்படுகின்ற பொருள்களிடத்தும் ஒழுங்குப்பாடே நிறைந் திருக்கிறது. இவ்வுண்மையை அறிவதும் ஞானக்காட்சியின் முதல்படியாகிறது.ஸ்வர்ண கர்பா என்னும் பதத்தில் இக்கோட்பாடு அடங்கியிருக்கிறது. அம்பிகையின் வழிபாட் டுக்கு அருள்பெற்ற சான்றோர்கள் பாமாலை தொடுக்கின்றனர். அது என்றைக்கும் பயன் படுகிறது. அதை ஓதுகின்ற ஒவ்வொரு ஆத்ம சாதகனும் அப்பாமாலையைத் திரும்பத் திரும்ப அம்பிகைக்குச் சூட்டுபவன் ஆகிறான். 'அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே, பின்னை யும் கன்னி என மறைபேசும் ஆனந்த ரூப மயிலே' என்னும் பாமாலையை யார் வேண்டு மானாலும் சூட்டலாம். அத்தகைய பாமாலை மயமாக அம்பிகை இருக்கிறாள் என்னும் கருத் தும் இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (144) *நல்லவன் விரைவில் கெடுகின்றான். ஆனால் கெட்டவன் நல்லவனாக நெடுநாட்கள் ஆகின்றன. கருணாகரக் கடவுள் ஆட்சியில் இங்ஙனமிருக்கலாமா?*

இக்கேள்விக்கு விடையாக இயற்கையில் பல சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். தூய வெள்ளை வஸ்திரத்தை அழுக்குப்படுத்துவதற்குச் சிறிதுநேரம் போதுமானது. ஆனால் அழுக்கேறிய வஸ்திரத்தைத்துவைத்து சுத்தப்படுத்தி வைப்பதற்கு நெடுநேரம் பிடிக்கிறது. வெடிகுண்டு போட்டு ஒரு வீட்டைச் சிறிது நேரத்தில் பாழ்படுத்தலாம். ஆனால் அந்த வீட்டைக் கட்டுவதற்கு நெடுங்காலம் அவசியமாகிறது. பயனற்ற ஒரு பூமியைத் திருத்தியமைத்து கிருஷிக்குத் தகுதியுடையதாகச் செய்தற்கு நெடுங்காலம் பிடிக்கிறது. ஆனால் அதைத் தரிசாக்குவதற்கு ஒரு பருவம் போதுமானது. இது இயற்கையைப் பற்றிய நியதி. இனி மானுட அமைப்பை ஆராய்வோம். உயிர் வாழ்ந்திருப்பது கடினமானது. உயிரை ஒடுங்கிப் போகும்படி விட்டுவிடுவது ஒரு வினடியில் நிகழுகிறது. கல்வி கற்பதற்கு மனிதன் நெடுநாள் எடுத்துக்கொள்கிறான். கற்றகல்வியை நிரூபிப்பதற்குச் சிறிது நேரம் போதுமானது. மனிதன் உடல் திட்பத்தைப் பெற நாள்தோறும் உடற்பயிற்சிபண்ணவேண்டும். தான் பெற்றுள்ள திட்பத்தைப் பிறர்க்குக் காட்டித்தருதற்குச் சிறிது நேரம் போதுமானது. இனி ஒழுக்கம் என்னும் விழுப்பம் அலாதியான பாங்குடையதாக இருக்கிறது. மானுடன் ஒருவன் ஒழுக்கத்தில் சிறந்தவன் என்பதை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு நாளும் அவன் ஒழுக்கத்தில் நிலை நின்று வரவேண்டும். தன்னை ஒழுக்கம்கெட்டவனாகச் செய்துகொள்ளுவதற்குச் சிறிது நேரம் போதுமானது. தன் செயலே தன் பாங்கை எடுத்துக் காட்டுகிறது. கருணாகரக்கடவுள் சந்நிதியில் மனிதன் நல்லவனுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. அவன் கெட்டுப் போவதற்கும் வாய்ப்பிருக்கிறது. நல்லவனைக் கெட்டுப்போகும்படி கருணாகரனாகிய கடவுள் ஏன் விட்டுவிட்டார் என்னும் கேள்விக்கு இடமில்லை. தீபத்தின் வெளிச்சத்தைக்கொண்டு ஒருவன் தெய்வீக நூல்களைப் படித்து வருகிறான். அதே தீபத்தின் வெளிச்சத்தைக்கொண்டு மற்றொருவன், புல்லிய விஷயங்களை வேறு ஒரு புஸ்தகத்தினின்று படிக்கின்றான். தீப வெளிச்சமோ இரண்டு செயல்களுக்கும் பொது நிலையிலிருந்துகொண்டு பயன்படுகிறது. மானுட வாழ்வு அந்தத் தீப வெளிச்சத்திற்கு நிகரானது. படிப்படியாக மேல் நிலைக்கு வருதற்கு வாழ்வைப் பயன்படுத்தலாம். சிறிது நேரத்தில் அதே வாழ்வைக் கெட்டதாகவும் செய்துகொள்ள மனிதனுக்கு இயலுகிறது. கெட்ட புஸ்தகத்தைப் படிக்க தீபம் ஏன் வெளிச்சம் தருகிறது என்னும் கேள்வியைக் கேட்பது பொருந்தாது. மனிதனைக்கெட்டுப்போக கருணாகரனாகியகடவுள் ஏன் இடம் கொடுத்தார் என்கின்ற கேள்விக்கும் இடமில்லை. கருணைக்கு இருப்பிடமாகக் கடவுள் இருக்கிறார் என்பது கோட்பாடு, இங்கு கருணைஎன்பதற்குப்பொருள் வசதிகளனைத்தையும் உயிர் வகைகளுக்கு இறைவன் செய்துவைத்திருக்கிறார் என்பதாம். இந்த வசதிகளை மனிதன் தன்னுடைய முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தலாம்; தனக்குக் கேடு சூழ்ந்து கொள்ளுவதற்கும் பயன்படுத்தலாம். இதுவே இயற்கையின் நியதி. சூரிய வெளிச்சத்தை நலன் செய்வதற்கும் பயன்படுத்தலாம்; கேடு செய்வதற்கும் பயன்படுத்தலாம். சூரிய வெளிச்சம் வாய்த்திருப்பது கடவுளின் கருணை. அதை யார் எந்தக் காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது அவரவர் பரிபாகத்தையும் பொறுப்பையும் பொறுத்ததாகிறது. குழந்தையொன்று திண்ணையினின்று கீழே விழாதிருக்கும்படி பெற்றதாய் பார்த்துக் கொள்ளுகிறாள். அதே விதத்தில் நல்லவர்கள் கெட்டவர்களாகப் போகும்படி கடவுள் இடந்தரலாகாது என்று சொல்லுவது பொருந்தாது. நலத்தின் விளைவையும், கேட்டின் விளைவையும் கடவுள் சதா காட்டிக்கொண்டிருக்கிறார். கேட்டைத் தவிர்த்து நலத்தில் நிலைபெற்றிருப்பது நம்முடைய பொறுப்பாகும். நல்லவனொருவன் கேட்டினுள் பிரவேசிக்கின்றபொழுது அப்படிச் செய்யவேண்டாம் என்று மனச்சாட்சியாக

இருந்துகொண்டு கடவுள் எச்சரிக்கை செய்கிறார். அந்த எச்சரிக்கையை ஏற்றுக்கொள்கிறவன் கேட்டினின்று விலகிக்கொள்கிறான். அந்த எச்சரிக்கையைக் கேட்டுக்கொள்ளாதவன் தீச்செயலைச் செய்து அதன் விளைவை அனுபவித்துப் பிறகு பாடம் கற்றுக்கொள்கிறான். ஆனால் கெட்டுப்போகிறவனும் நல்வழிக்கு வருவதற்குச் சந்தர்ப்பமிருக்கிறது. அத்தகையசந்தர்ப்பத்தைக்கொடுத்து அவனைத் திருத்தியமைப்பது கடவுளின்கருணைஎனலாம்.

சுருங்கச் சொல்லின் கருணை எனப்படும் இயற்கையின் வசதிகளை நல்வழிக்கு ஒருசிலரே பயன்படுத்திக்கொள்ளுகின்றனர். அவர்கள் மேலே வருகின்றனர். மற்றவர்கள் வசதிகளை முறைதவறிப் பயன்படுத்தி துன்பத்தில் இடர்பட்டு பிறகு நல்வழிக்குத் திரும்புகின்றனர். இடர்படுதல் அன்னவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. அங்ஙனம் துன்பத்தின் வாயிலாகவும் அவர்களை நல்வழிக்குத் திருப்புவது கடவுளின் கருணை எனலாம். ஆதலால் கருணாகரனுடையகருணைச்செயல்யாண்டும்வேலைசெய்துகொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்துபவர்களுக்கிடையில் பரிபாக வேறுபாடு உண்டு.

கேள்வி: (145) *'பிறர்க்குத் தீங்கு செய்யாதே; கோபம் கொள்ளாதே' என்கிறார்கள். கோபித்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை வருகிறது. கேடு செய்தால்தான் நம்கடமையைச்செய்தவர்கள்ஆகின்றோம். இந்நிலையில் சும்மா இருப்பது முறையா?*

கோபத்துக்கு அடிமையாகாதே என்பது கோட்பாடு. கோபத்துக்கு அடிமை ஆகிறவர்கள் கோபித்துக்கொண்டிருக்கிற வேளையில் தீங்கையே விளைவிக்கின்றனர். நலனை விளைவிக்க அவர்களால் இயலாது. முற்றிலும் தன்னடக்கம் பழகியிருக்கிறவர்கள் கோபித்துக்கொள்ளவேண்டிய சூழ்நிலை வாய்க்கின்றவிடத்து வேண்டுமென்றே கோபத்தைப் பயன்படுத்துகின்றனர். அந்த நிலையில் அவர்கள் கோபத்துக்கு அதிபதிகளாக இருக்கின்றனர். அடிமைகளாவதில்லை. அந்தப் பாங்கில் கோபத்தை வரவழைத்துப் பயன்படுத்தலாம். அங்ஙனம் கோபத்தைப் பயன்படுத்துதலில் நலன் யாவும் உண்டு. கேடு ஏதுமில்லை. குழந்தை செய்த குற்றத்தைக் கண்டித்தல் பொருட்டுத் தாய் வேண்டுமென்றேகோபித்துக்கொண்டவள் போன்று நடந்துகொள்ளுகிறாள். சரியாகப் பாடம் படிக்காத மாணக்கன்மீது கோபித்துக்கொண்டவர் போன்று ஆசிரியர் நடந்துகொள்கிறார். அங்ஙனம் வரவழைக்கப்பட்ட கோபத்தில் கேடு ஒன்றுமில்லை. அந்நிலையில் கோபித்துக்கொள்ளாது வெறுமனே உட்கார்ந்திருப்பது பொருந்தாது. கொலைபாதகனொருவன் பிறரைக் கொன்று அவருடைய பொருளை அபகரித்துக்கொள்ளுகிறான். கொலை, களவு ஆகிய இரண்டும் பொருந்தாத செயல்கள். அத் தீச்செயல்களைச் செய்தான பிறகு அவன் மறைந்திருந்து தப்பித்துக்கொள்ள முயலுகிறான். சில நாட்களுக்குப் பிறகு துப்பறிகிறவர்கள் கொலைபாதகனைக் கண்டுபிடிக்கிறார்கள். அவனுடைய செயலை விசாரணைக்குக் கொண்டுவருகிறார்கள். நீதிமன்றத்தில் அவன் விசாரிக்கப்படுகின்றான். அவன் செய்த குற்றமெல்லாம் வெளியாகிறது. பிற உயிரை வாங்கியதற்குத் தண்டனையாக அவனுக்கு மரணதீர்ப்பு வாய்க்கிறது. மரணதீர்ப்பு கொடுத்தநியாயாதிபதிதீச்செயல் செய்தவர் ஆகமாட்டார். கொலையாளிகளை எல்லாம் மன்னித்துக்கொண்டே போனால் சமுதாயத்தில் கொலை செயல்கள் அதிகரிக்கும். கொலைகாரனுக்குமரணதண்டனைஎன்கிறதீங்கைசெய்வதன்வாயிலாக சமுதாயத்தில் நலன் நிலைநாட்டப்படுகிறது. ஒருவன் வம்பு சண்டைக்கு வந்து மற்றொருவனைத் தாக்குகிறான். அப்படித் தாக்குகிறவனுக்குச் சரியான பாங்கில் பிரதி தீங்கு செய்வது முறையாகிறது. கோழைத்தனத்தை முன்னிட்டோ அல்லது அஹிம்சா தர்மத்தின் பெயராலோ தீங்கு செய்தவனுக்குப் பிரதி தீங்கு செய்யாவிட்டால் போக்கிரிகளுடைய போக்கிரித்தனம் அதிகரித்துக்கொண்டே போகும். அத்தகைய கேட்டைத் தவிர்ப்பதற்குப் பிரதிகேடு செய்வதே முறையாகும். இன்னும் சிலர் வாய்ச் சண்டையில் நிபுணர்களாயிருக்கிறார்கள். தக்க காரணமில்லாது பிறரை வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்கள். அப்படித் திட்டுகிறவர்களை எதிர்த்துத் திட்டுவது பொருந்தாது. அன்னவர்களுக்கு அடிகொடுத்து வாயடக்குவதே முறையாகும்.

ராமராஜ்யம்

(151ஆம் பக்கத் தொடர்ச்சி)

தசரத ராமன் பதினான்கு வருஷகாலம் வனத்தில் தவம் புரிந்து தன்னைப் பக்குவப் படுத்திக் கொண்ட பிறகு அயோத்திக்குத் திரும்பி வந்து ஆட்சி புரிதல் என்னும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். ஆனால் அதில் அவன் நாட்டம் கொள்ளவில்லை. விருப்பமிருந்தால் தம்பி பரதனே நாடு ஆண்டு கொண்டு இருக்கட்டும் என்று மனமுவந்து இளையவனுக்குச் சலுகை காட்டினான். ஆனால் தம்பி பரதனோ அதற்கு இணங்கவில்லை. நாடு ஆளுவது தமையன் பொறுப்பு. தமையனுக்குப் பணிவிடை பண்ணுவது தம்பியின் பொறுப்பு என்று அவன் இயம்பினான். பின்பு அதன்படி அவன் நடந்துகொண்டான். ராமன் போன்றும், பரதன் போன்றும் இருக்கிற மக்களே நாடு ஆளத் தகுதி யுடையவர்கள் ஆகிறார்கள். பதவி வேட்டையாடுகிறவர்கள் நாட்டுக்கு ஒருநாளும் நலன் செய்யமாட்டார்கள். சுயநலப் பற்றற்ற பொதுமக்கள் நாட்டில் அதிகரிக்க வேண்டும். அப்பொழுதே நாடு நலனடையும்.

ராமன் ஆண்ட ஆட்சியில் முடியரசும் குடியரசும் நன்கு இணைக்கப்பட்டிருந்தன. பொதுமக்களின் பிரதிநிதிகள் ராமராஜ்யத்தில் நன்கு இடம் பெற்றிருந்தனர். அன்னவர்களுடைய கருத்தும், மந்திரிமார்களுடைய கருத்தும் சான்றோர்களாகிய ரிஷிகளுடைய கருத்தும் ஒன்றுபட்டு வந்த பிறகே எடுத்துக் கொண்ட காரியம் ஒவ்வொன்றும் செயலுக்கு வந்தது. பிழைபோவதற்கு ராமராஜ்யத்தில் இடமில்லை.

நாளடைவில் ராமராஜ்யமானது நாடெங்கும் பஞ்சாயத்து ராஜ்யமாகப் புதிய பெயர்பெற்று பரவியது. அதன் பிறகு நாடாளும் மன்னர்கள் எத்தனை எத்தனையோ பேர்கள் தோன்றி வந்தார்கள். அவர்களுக்கிடையில் கொடுங்கோல் மன்னர்களும் சிலர் இருந்தனர். ஆனால் அதை முன்னிட்டு பஞ்சாயத்து ராஜ்யத்துக்கு ஒருநாளும் பழுது ஏற்படவில்லை. பஞ்சாயத்து ராஜ்யம் மக்களுக்குப் பொதுவானது. கட்சி பிரதிகட்சிக்கோ, போட்டி பொறாமைக்கோ அதில் இடமில்லை. சத்தியமே பேசு. தர்மத்தையே கடைப்பிடி என்பது தேசிய லட்சியமாகும். பஞ்சாயத்து ஆட்சியில் பொய்பேசுதற்கு இடமில்லை. தர்மத்திலிருந்து பிசகுதற்கும் அதில் இடமில்லை. நல்ல உணவு எங்ஙனம் ஜீரணக்கருவிகளை உறுத்தாது செமிக்கப்படுகிறதோ அங்ஙனம் பஞ்சாயத்து ஆட்சி முறை அமைதியாகவும், ஆடம்பரமின்றியும், ஒழுங்காகவும் பல்லாயிரம் ஆண்டுகளாக நாடெங்கும் நிகழ்ந்து வந்திருக்கிறது.

ஒவ்வோர் ஊரிலும், அல்லது வட்டாரத்திலும் வசித்து வந்த மக்களுக்கிடையில் நல்லவர்களுடைய பட்டியல் அமைதியாக ஆயத்தப்படுத்தப்பட்டது. நல்லவர்களுடைய வயது, கல்வி, அனுபவம், ஒழுக்கம், தொழில், பொது நலப் பணிவிடையில் ஊக்கம் முதலிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டே நல்லார் பட்டியல் ஆயத்தப்படுத்தப்பட்டது. அந்தப் பட்டியல் பொதுமக்களுடைய ஆராய்ச்சிக்கு என்றைக்குமே உரியதாய் இருந்து வந்தது. புதிய பெயர்கள் சேர்க்கப்படுவதும், பழைய பெயர்கள் ஒதுக்கப்படுவதும் தக்க காரணத்தைக் கொண்டே நடைபெற்று வந்தன. இந்த நல்லார் பட்டியலிலிருந்து அப்போதைக்கப்போது ஏதேனும் ஐந்துபேர் பொறுக்கி எடுக்கப்பட்டனர். ஒரு பட்டியல்படி ஒரு தொகுதியில் ஐம்பதுபேர் அல்லது அறுபதுபேர் இருந்தால் அத்தனைபேர் பெயர்களும் தனித்தனி ஓலைச்சீட்டுகளில் எழுதப்பட்டன. அவையாவும் கோயிலிலோ அல்லது வேறு ஏதாவது பொது நல இடத்திலோ ஒரு குடத்தினுள்போட்டு குலுக்கப்பட்டன. பிறகு அதினின்று குழந்தை ஒன்று ஏதேனும் ஐந்துஓலைகளைக் கைபோட்டு எடுக்கும். அந்த ஐந்து ஓலைகளில் எழுதப்பட்டுள்ள பெயர்கள் பொதுமக்களுக்கிடையில் வாசிக்கப்படும். அந்த ஐந்துபேரும் ஆட்சி முறையைக் குறிப்பிட்ட காலத்திற்கு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பொதுமக்கள் சார்பாக ஊர்ப் பெரியவர் ஒருவர் வேண்டிக்கொள்வார். அந்த ஐந்துபேரும் திருவருள் சம்மதத்தால் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள் ஆகிறார்

கள். பொறுப்புடனும், பணிவுடனும் அவர்கள் தங்கள் கடமையை ஏற்றுக்கொண்டனர். ஐந்துபேருடைய ஆடசிமுறையினல் அது பஞ்சாயத்துஆட்சி எனப்பட்டது. இடையிடையே முக்கியமான விஷயங்களுக்குப் பொதுமக்களுடைய அபிப்பிராயங்கள் கூட்டங்கள் கூட்டி வேண்டப்பட்டன.அதன்படி ஊர் ஆட்சி ஒழுங்காகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நிகழ்ந்து வந்திருக்கிறது. இத்தகைய ஆட்சிமுறையே நம்நாட்டுக்கு உகந்ததாகிறது. இதில் பணச் செலவுக்கு இடமில்லை. பிரச்சாரத்துக்கு இடமில்லை. கட்சி பிரதிகட்சிக்கு இடமில்லை. போட்டிக்கு இடமில்லை. ஆதலால் மக்களுக்கிடையில் ஆட்சியைப் பற்றிய பிணக்கு ஏதும் உண்டாகக் கிடையாது. அமைதியான முறையில் சமுதாய வாழ்வு நிறைவேறி வருவதாயிற்று. ஸத்யமே பேசுதல் தர்மத்தையே கடைப்பிடித்தல் ஆகிய இந்தச் சீரிய கோட்பாடுகள் காலமெல்லாம் நம் நாட்டின் மக்களின் இலட்சியமாக இருந்து வருகின்றன. நலன்கள் அனைத்தும் இந்த இரண்டு கோட்பாடுகளில் அடங்கியிருக்கின்றன. இவைகளை நிலைநாட்டுதற்குக் கட்சி பிரதிகட்சிக்கு அவசியமில்லை. தேசீய ஆட்சி முறை ஒன்றே போதுமானதாக இருந்து வந்திருக்கின்றது. கடந்த முப்பது வருஷங்களாக நம் நாட்டுக்கு ஒவ்வாத கட்சி பிரதிகட்சி ஆட்சிமுறையை நாம் கையாண்டு பார்த்திருக்கிறோம்.அதனல் விளையும் கேடுகளையும் அனுபவித்து வருகிறோம். ஆதலால் நாட்டிலுள்ள அறிஞர்கள்எல்லாரும்ஒன்றுகூடிபழைய பஞ்சாயத்து ஆட்சிமுறையை இக்காலத்துக்கு ஏற்றபாங்கில் அமைப்பது அவசியமாகிறது. கிராமங்களில் மணியக்காரர்களும் கணக்குப் பிள்ளைகளும் யாண்டும் இருந்து வருகின்றனர். அவர்கள் குடும்பப் பரம்பரையாக வரலாம் அல்லது பயிற்சியின் வாயிலாகத் தகுதி பெறுவதால்அமையலாம். மாகாணஅளவிலும், மத்திய அரசாங்கத்திலும் காரியங்களை (Secretaries) வகித்து வருகிறவர்கள் இருக்கிறார்கள். கல்வித் திறமையை முன்னிட்டே இவர்கள் இந்த ஸ்தானத்தைப் பெறுகின்றனர். அடுத்தபடி நிர்வாகத்தின் வாயிலாக இவர்கள் அனுபவம் மிகப் பெறுகின்றனர். ஆங்கில அரசாட்சி காலத்தில் இவர்கள் I. C. S. உத்தியோகஸ்தர்கள் என்னும் பெயர்பெற்றனர். ஆட்சி முறைக்கு இவர்களே நாயகர்கள் (Steel frame). இன்றைக்கு இக்கூட்டத்தார் I.A.S. பதவியைப் பெற்றுவருகின்றனர். இக்கூட்டத்தார் யாண்டும் வாழையடி வாழையாகப் பயிற்சியின் வாயிலாக வளர்ந்து வரவேண்டும். கல்வித் திறமை வாய்க்கப் பெற்றவர்கள் யார் வேண்டுமானாலும் I.A.S. உத்தியோகத்துக்கு ஏற்ற தகுதியைப்பெறலாம். சிபாரிசுகளின் மூலமாகவோ லஞ்சம் அல்லது கைக்கூலிகளின் மூலமாகவோ இந்த ஸ்தானத்தை யாரும் பிடிக்க முடியாது. ஆட்சிமுறை சீர்கேடடையா வண்ணம் பாதுகாத்துவருகிறவர்கள் இக்கூட்டத்தாரே ஆவார். அந்தந்த வட்டாரங்களில் உள்ள தகுதி வாய்ந்தவர்களின் பட்டியல் ஒன்றை மணியக்காரனும், கணக்கப்பிள்ளையும் சேர்ந்து ஆயத்தப்படுத்த வேண்டும். வயது, கல்வி, தொழில், ஒழுக்கம், பொதுநலசேவை ஆகியவைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டே தகுதி வாய்ந்தவர்கள் பட்டியல் ஆயத்தமாக வேண்டும். அதைப் பொதுக்கூட்டத்தில் வைத்து மக்களின் ஆமோதிப்பைப் பெறவேண்டும். இன்றைக்கு இருக்கிற (adult franchise) முதியோர் வாக்குரிமை என்னும் புதிய திட்டத்தை ஒதுக்கிவிட வேண்டும். இது பயன்படாது என்பதை நாட்டு மக்கள் அனுபவ பூர்வமாக அறிந்திருக்கிறார்கள். தகுதி வாய்ந்தவர்களின் பட்டியலிலிருந்து குடஓலை அல்லது திருவுளச்சீட்டு போட்டு பஞ்சாயத்து நிர்வாகத்துக்குரிய ஐந்துபேர் பொறுக்கி எடுக்கப்படுவார்கள். இது தேர்தல் முறையன்று. திருவுளச்சீட்டு முறையாகிறது. இதில் சிறு சிறு மாறுதல்களைச் சமயோசிதம் போன்று தகுதி வாய்ந்தவர்கள் தீர்மானித்துக்கொள்ளலாம்.

மாகாண ஆட்சி மன்றம், மத்திய அரசாங்க ஆட்சி மன்றம் State Legislature, Parliament ஆகிய ஆட்சி மன்றங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் ஆங்காங்கு பிராந்தியங்களில் உள்ள தகுதிவாய்ந்தவர்கள் பட்டியலிலிருந்து பொறுக்கி எடுக்கப்படுவார்கள். அப்படிப் பொறுக்கி எடுப்பதற்கு மாஜி நியாயாதிபதிகளும், மாஜி கலெக்டர்களும் அந்தந்த வட்டாரங்களுக்கேற்ற பாங்கில் அமைக்கப்பெறு

வார்கள். மாகாண ஆட்சிமுறைக்கேற்ற தகுதியும், மத்திய அரசாங்க ஆட்சிமுறைக்கேற்ற தகுதியும் படிப்படியாக மேல் நிலைக்குப் போகும். அந்த ஏற்பாட்டின்படி தகுதிவாய்ந்தவர்கள் அந்தந்த வட்டாரங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்படுவார்கள். அந்தப் பட்டியலும் பொதுமக்களுடைய ஆராய்ச்சிக்குரியதாக இருக்கும். மாகாண மன்றத்துக்கு ஏற்றவர்கள் திருவுளச் சீட்டின் வாயிலாகவே பொறுக்கி எடுக்கப்படுவார்கள். அதே விதத்தில் மத்திய அரசாங்க மன்றத்துக்கும் அதற்கேற்ற தகுதி வாய்ந்தவர்களுக்கிடையில் திருவுளச் சீட்டின் வாயிலாகவே மன்ற உறுப்பினர் பொறுக்கி எடுக்கப்படுவார்கள். இந்த முறைப்படி தகுதியற்றவர்கள் அந்தந்த ஸ்தானங்களுக்கு வரமுடியாது. தகுதிவாய்ந்தவர்களுக்கிடையில் தெய்வாதீனமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களே பொறுப்பை வகிக்க முன் வருகிறார்கள். ஆதலால் அந்தந்த மன்றங்களில் தகுதிவாய்ந்தவர்களே இடம் வகித்து வருவார்கள். போட்டி முதலிய கேடுகளுக்கு இந்த முறையில் இடமில்லை. குடும்பச்சண்டை, ஊர்ச்சண்டை, மாகாணச் சண்டை முதலிய சண்டை சச்சரவுகள் அடிபட்டுப் போம். யாண்டும் அமைதியே நிலவும். பஞ்சாயத்தில் துவங்கி மத்திய அரசாங்கத்துக்குரிய பாராளு மன்றம் ஈருக எல்லா மன்றங்களும் தேசீய மன்றங்களாகத் திகழும். Party Government அல்லது கட்சி ஆட்சிமுறை ஒதுக்கித் தள்ளப்படும். பாராளும் மன்றத்துக்கு உறு துணையாக மற்றொரு மன்றம் அமையப்பெறும். அது அந்தந்த மாகாணங்களில் உள்ள சான்றோர்களுக்கிடையில் அங்கத்தினர்களாகும்படி வேண்டி அழைக்கப்பட்டவர்களுடைய கூட்டமாகும். முதுமையும், நல்லறிவும், பொறுமையும் அவர்களிடத்தில் அமைந்திருக்கும். ஏதேனும் ஒருஆட்சிமுறையை அமுலுக்குக்கொண்டு வருவதற்குப் பாராளுமன்றமும்,முதியோர் குழுவும் (council of elders) சேர்ந்து முடிவுகட்டும். இவர்களுக்கிடையில் அபிப்பிராய வித்தியாசம் இருந்தால் அபிப்பிராய ஒற்றுமை வரும் பரியந்தம் அந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வராது காத்திருக்கும்.

மாகாணங்களுக்கு கவர்னர்களாக வருபவர்களும், மத்திய அரசாங்கத்துக்கு ஜனாதிபதியாக வருபவரும் இதே திருவுளச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த முறையைக் கையாளுவதால் எல்லாப் படித்தரங்களிலும் தகுதிவாய்ந்தவர்களே சட்டசபை அங்கத்தினர்களாகவும், நிர்வாக அங்கத்தினர்களாகவும் வந்து அமைகிறார்கள். பண்டைக் காலத்தில் தசரதராமன் வகுத்து வைத்த முறை வெளிநாட்டு அரசாங்கம் வரும் பரியந்தம் ஒழுங்காக நடைபெற்று வந்திருக்கிறது. அப்பழைய முறையை மீண்டும் புதிப்பிக்கிறபொழுது ஒழுங்குப்பாடு தானாக வந்து அமையும். இதுவே ஒப்பற்ற குடியரசு ஆகிறது. மக்கள் எல்லார்க்கிடையிலும் நம் தேசீய லட்சியங்களாகிய சத்தியத்தைக் கடைப் பிடித்தலும், தர்மத்துக்கு ஒத்து ஒழுகுதலும் ஆகிய இந்த இரண்டு கோட்பாடுகள் வலிவு பெற்று வருவதற்கேற்ப தீமைகளனைத்தும் அடிபட்டுப்போம். மக்களுக்கிடையில் போட்டிக்கோ பொறாமைக்கோ இடமில்லை. வாழ்க்கை வசதிகளைப் பெறுதலில் தனிச் சலுகை யாருக்கும் கிடையாது. உயர்வுதாழ்வு பாராட்டி கீழோரை ஒதுக்கிவைக்கும் குறைபாடு ராமராஜ்யத்தில் இருந்தது கிடையாது. இனி, நாம் அமைக்கும் குடியரசு திட்டத்திலும் அத்தகைய பாகுபாட்டுக்கு இடமில்லை. குடும்பத்திலுள்ள எல்லார்க்கும் சமஉரிமை இருப்பது போன்று நாட்டுமக்கள் எல்லார்க்கும் உரிமைகள் யாவும் ஒரே பாங்கில் வழங்கப்படும். இதுகாறும் கீழோர் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தவர்களுக்குக் கல்வித்துறையில் தனி ஆதரவு வழங்கப்படும். அரசியல் பிரச்னைகள் இத்திட்டத்தில் இடம் பெற மாட்டா. மக்கள் எல்லாரும் பலப்பலத் துறைகளில் நல்ல உழைப்பாளிகளாக இருப்பார்கள். சத்தியமும் தர்மமும் மக்கள் எல்லார்க்கிடையிலும் ஆழ்ந்து இடம் பெற்றுவரும். பரஸ்பர அன்பும் அனுதாபமும் ஓங்கி வளரும். ராணுவ வலிவு தன்போக்கில் உச்ச ஸ்தானம் பெறும். வம்புச் சண்டைக்கு நம் நாடு போகாது. வலிய வந்த சண்டையை அது நன்கு சமாளிக்கும். கடவுள் பக்தி ஓங்கும். (முற்றும்)

தெய்வீக மகிமைகள்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1972ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

சூரியன் மேல் கீழ் நடு ஆகிய எல்லாத் திசைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பது போன்று கடவுள் ஏக வஸ்துவாக உயிர்கள் அனைத்துக்கும் மூலப்பொருளாக இருந்து வருகின்றார். தெரிந்த ஒன்றை முகாமையாக வைத்துக்கொண்டு தெரியாத ஒன்று விளக்கப்படுகின்றது. சூரியனைச் சான்றாக வைத்துக் கொண்டு பரதத்துவத்தை விளக்கி இருக்கின்றனர். சௌர மதத்தில் சூரிய நாராயணன் பர தத்துவத்துக்கு விளக்கமாக இருக்கின்றார். சூரியனுடைய சொருபத்தை நன்கு கிரகித்தால் பரதத்துவத்தைக் கிரகிப்பதற்கு அது துணைபுரிகின்றது. பஞ்ச பூதங்களுள் ஆகாசத்துக்கும் பரவஸ்துவுக்கும் நிறைய தொடர்பு இருக்கின்றது. அஃதே போன்று சூரியனுக்கும் பரவஸ்துவுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. பரவஸ்துவின் மகிமைகள் யாவும் சூரியனிடம் அமைந்திருக்கின்றன. இரவில் சூரியப்பிரகாசம் நமக்கில்லை. தன்னைச் சார்ந்திருக்கின்ற கிரகங்கள் யாவற்றுக்கும்சூரியன் சதா வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கிறது. உயிர்களுக்கெல்லாம் வெப்பத்தையும், உயிர்த் தத்துவத்தையும் சூரியன் தந்துகொண்டிருக்கிறது. எல்லாத் திக்குகளுக்கும் சூரிய ஒளி சென்று கொண்டிருக்கிறது. எல்லாம் ஒடுங்கிப்போகும் பிரளய காலத்தில் சூரியனும் ஒடுங்குகின்றது. காலையில் உதயமாகி மாலையில் மறைவதாக சூரியன் நம் காட்சியில் தென்படுகிறது. ஆனால் சூரியன் தன் அளவில் உதிப்பதும் இல்லை; ஒடுங்குவதும் இல்லை. இதைச் சிறிது சிந்தித்துப்பார்க்க வேண்டும். நம் உள்ளத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கும் பரவஸ்துவுக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. சூரியன் ஒரு இடத்தில் உதயமாகிற அதே வேளையில் மற்றொரு இடத்தில் அஸ்தமனம் ஆவது போன்று ஜீவன் ஒரு சரீரத்தைத் துடைத்துத் தள்ளுகின்ற அதே வேளையில் மற்றொரு சரீரத்தை எடுப்பதற்கான சூழ்நிலையைத் தனக்குத் தானே உண்டு பண்ணிக்கொள்கிறது. ஆகையால் ஒரு காட்சியில் ஜீவனும் மரணம் அடைந்து கொண்டிருக்கின்றது. மற்றொரு காட்சியில் அதே ஜீவன் உயிர்பெற்று எழுந்து கொண்டிருக்கிறது. இவ் உண்மையை விளக்குவதற்கு அஸ்தமன சூரியனும், உதய சூரியனும் நன்கு பயன்படுகின்றன. ஜீவன் ஒரு சரீரத்தை விடுவதையும், இன்னொரு சரீரத்தை எடுப்பதையும்,இறப்பு, பிறப்பு என்றுசொல்லுகின்றோம். உதயசூரியன் என்றும் அஸ்தமன சூரியன் என்றும் உபசாரத்துக்காகச் சொல்லுகின்றோமே ஒழிய உண்மையில் சூரியனிடத்தில் எந்தவித மாறுதலும் உண்டாவதில்லை.

சூரியன் வெளிச்சம் தருகின்ற அளவு உயிர்கள் பிராணனைப்பெற்று வருகின்றன. சூரிய வெளிச்சம் பயிர் பச்சைகள் மீது படாவிட்டால் அவை வெளுத்துப் போய்விடும். சூரிய உஷ்ணம் விறகில் புதைந்திருந்து அடுப்பு எரிக்கும்பொழுது வெப்பமாக அது வியாபகமாகிறது. பூமிக்குள்ளே இருக்கும் நிலக்கரியிடத்தும் சூரியவெப்பம் புதைந்து கிடக்கிறது. பூமியிலிருந்து எடுத்து உபயோகிக்கும் எண்ணெயிலிருந்து கிடைக்கும் வெப்பமும் சூரியனிடத்திருந்து வந்ததாகும். உணவில் உள்ள வெப்பசக்தி நம்முடைய உடலுக்கு வெப்பம் தருகிறது. வெளிச்சம் இல்லாது தாவரங்கள் வளருவது இல்லை. வெப்பம் இல்லாது சரீரத்தில் சீதம் உண்டாகும்பொழுது அது சாவதற்கு அறிகுறி என்கின்றோம். வெளிச்சம் இல்லாதுபோனாலும், வெப்பம் இல்லாது போனாலும், உயிர்த்தத்துவம் வளர்ச்சி அடையாது. உலகில் எந்த இடத்திலிருந்து எப்படி வெப்பத்தைப் பெற்றாலும் அது சூரியனிடத்திருந்து வந்த வெப்பமே ஆகும். நாம் உயிர் வாழ்ந்திருப்பதற்கு சூரியனே மூலகாரணமாக இருக்கின்றது. இயற்கை முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு நட்சத்திரமும், ஒவ்வொரு சூரியனாகும். இரவில் நட்சத்திரங்களைக் காண்கின்றோம். பகலில் சூரியனைக் காண்கின்றோம். சூரியனைப் பகல் நட்சத்திரம் என்று சொல்லலாம். நட்சத்திரங்களின் அமைப்பில் ஏற்றத்தாழ்வு உண்டு. நடுத்தரமான வண்

ணம் உடையது சூரியன். சூரியனைவிடப் பெரிய நட்சத்திரங்களும் உண்டு; சிறிய நட்சத்திரங்களும் உண்டு.

''ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி'' என்று ரிக்வேத காலத்திலேயே சொல்லி உள்ளார்கள். மெய்ப்பொருள் ஒன்று. ஆன்றோர்கள் அதற்குப் பலபல பெயர் இட்டு அழைக்கின்றார்கள். ஒரே தெய்வம் பல மஹிமைகள் உடையதாக இருந்து வருகிறது. ''எங்கள் மதத்தில் ஒரே தெய்வம்தான் உண்டு. பல தெய்வங்களைக்கொண்டிருக்கின்ற மதத்தினர் குழம்பியவர்களாக இருக்கின்றனர்'' என்று கூறும் மதவாதிகள் இருக்கின்றார்கள். சந்நியாசிகளுக்கிடையில் பகுதகன் என்ற கூட்டம் உண்டு. அவர்கள் பல இடங்களுக்குச் செல்லுவார்கள். அந்தந்த இடங்களில் உள்ள தண்ணீரைப் பருகுவார்கள். இந்த ஊர்த்தண்ணீர் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகையால் ஜலதோஷம் பிடித்துவிட்டது என்பார்கள். கடல் நீர், குளத்து நீர், குட்டை நீர், ஆற்று நீர், கிணற்று நீர், ஊற்று நீர், ஏரி நீர், மழை நீர் என்று சொல்லுகின்ற இடத்துப் பெயர்கள் பலவானாலும் நீர் என்ற ஒரே பூதத்தைத்தான் குறிக்கின்றோம். உண்மையில் நீர்கள் பல அல்ல. சூழ்நிலையை முன்னிட்டு நீர்களுக்குப் பல பெயர்கள் அமைந்திருக்கின்றன. அங்ஙனம் மெய்ப்பொருள் ஒன்று எனினும் அது பல வடிவங்களில் தன் மகிமைகளை விளக்கிக்கொண்டிருக்கிறது. நிறமற்ற சூரிய கிரணத்தை முப்பட்டைக் கண்ணாடி வழியாகச் செலுத்தும் பொழுது அது ஏழு நிறங்களாகச் சிதறடைகிறது. அவ் ஏழு நிறங்களும் மூல வெளிச்சத்துக்குப் புறம்பானவை அல்ல. ஒளி ஏழு நிறங்களாகப் பிரிகின்றது. ஓசை சப்த சுரங்களாக வடிவெடுக்கிறது. அறுசுவை என்கின்றோம். அறு சுவைக்கும் பொதுவாக சுவையற்ற நீர் இருக்கிறது. அதில் ஒரு சுவை இருக்கிறது. அதையும் சேர்த்தால் சுவை ஏழு ஆகிறது. சப்த தாதுக்களாக உணர்கின்ற இடத்து ஸ்பரிச உணர்ச்சி ஏழாக வடிவெடுக்கிறது. நறுமணம், துர்நாற்றம் என்ற இரண்டாக நாற்றம் நமக்கு விளங்குகிறது. நாற்றமும் ஏழாகச் சிதறடைந்து இருக்கிறது. அவற்றைக் கிரகிக்கும் மோப்ப சக்தி மனிதனுக்குக் குறைவு. மனிதனைவிட நாய்க்கு மோப்பசக்தி அதிகம். இறைவன் பிரபஞ்சமாக வருமிடத்து ஒவ்வொரு இந்திரியத்தின் வாயிலாகவும், ஏழு விபூதிகளை உடையதாகச் சிதறடைகின்றார். ஏழு ஞான பூமிகளாகவும், ஏழு அக்ஞான பூமிகளாகவும், இறைவன் தம்முடைய மகிமைகளை விளக்கிக்கொண்டிருக்கின்றார். அவருடைய விபூதிகளைக் கொண்டுதான் அவரை நன்றாக அறியமுடிகிறது.

வரேண்யம் என்று சொல்லுமிடத்துப் போற்றுதற்குரிய பொருள் அவர் ஒருவரே. மனிதனுக்குத் தருகின்ற புகழ், பொருள் சேராத புகழ். உலோபியைப் பெரிய கொடையாளி என்று உபசாரத்துக்காக உலகத்தவர்கள் சொல்லுவார்கள். இறைவனுக்கு எத்தகைய புகழ்ச்சியும் பொருந்தும். அவருடைய மகிமை அளப்பரியது. ''இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' என்பது குறள். பிரபஞ்சத்தில் உள்ள யாவுமாகக் கடவுள் இருக்கின்றார். ஒவ்வொரு உயிரும் போற்றிப் பாராட்டுதற்குரிய மகிமையுடன் இருக்கிறது. இயற்கையில் பேரழகாகத் திகழ்வது கடவுளே ஆவார். இன்னிசையாக இருந்து உள்ளத்தை எல்லாம் அவர் கவர்கின்றார். ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே என்று அவர் போற்றப்படுகின்றார். கண்ணன் தம் குழல் ஓசையின் மூலமாகத் தெய்வத்தின் மகிமையை விளக்குகின்றார். கண்ணனுடைய குழல் ஓசை உயிர்களை எல்லாம் கவர்ந்து இழுக்கின்றது. நாம் இயற்கையில் காண்கின்ற மகிமை அனைத்தும் தெய்வத்தின் மகிமை ஆகும். எனவே அவர் போற்றுதற்குரிய பொருள் ஆகின்றார்.

சேதனம், அசேதனம், க்ஷரம், அக்ஷரமாக உள்ள அனைத்துக்கும் மூலகாரணம் கடவுள். ஆதிபகவன் முதற்றே உலகு என்பது கோட்பாடு. இத்தனையுமாக அவர் தம்மை விளையாட்டுப் போன்று விளக்கிக் காட்டுகின்றார். ஓசையைப் பரப்புவதற்கு ஒலிபெருக்கி பயன்படுகின்றது. வெப்பத்தை நீக்க மின்விசிறி பயன்படுகிறது. தணுப்பைப் பாதுகாக்க குளிர் முறைப் பாதுகாப்புப் பெட்டி (Refrigerator) பயன்படுகிறது. சமைப்பதற்கு மின் அடுப்பு பயன்படுகிறது. மின்சக்தி இங்ஙனம் பல

விதங்களில் தன் மகிமையை விளக்கிக் காட்டு கின்றது. ஒவ்வொரு சக்தியும், தன் மகிமையை விளக்கிக்கொண்டிருக்கிறது. இத்தனை சக்தி களாகத் தம்மை விளக்கிக்கொண்டிருப்பவர் கடவுள். அவருக்குப் புறம்பாக ஒன்றும் இல்லை. கடவுளைச் சரியாக அறிகின்றபொழுது அவரிடத்திருந்து காரியமாக வந்துள்ள ஜகத் ஜீவர்களாக இருக்கும் இவ்வளவையும் அறிகின்றோம். பகவான் அர்ஜுனனுக்குத் தம் விசுவரூப தரிசனத்தைக் காட்டியபொழுது கண்ணனுடைய மகிமைகளை அர்ஜுனன் அறிந் தான். அர்ஜுனன் தனக்கு எதிரிகளாகத் தென் படுபவர்களும் கண்ணனிடத்திருந்தே வந்த வர்கள் என்பதை அறிந்தான். கண்ணன் தம் மகிமையை அடக்கி ஒடுக்கிவைத்துவிட்டுச் சிறியவராகத் தம்மைக் காட்டிக்கொண்டிருக் கின்றார் என்பதை அறிந்தான். சேதனம் அசே தனம், நலம் கேடு ஆகிய அனைத்தும் அவருக் குப் புறம்பானவை அல்ல. "ஈசாவாஸ்யம்: இதம் சர்வம்: யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" என்பது உபநிஷதம். ஈசன்தான் பிரபஞ்சத்தில் இத்தனையுமாகத் தோன்றி விளையாடிக்கொண் டிருக்கின்றார். நம்முடைய அறிவுக்கு எட்டு கின்ற அளவு நாம் அவரைப் போற்றமுடியும்.

பகவான் என்பது கடவுளுக்கு ஒரு பெயர். ஷட்குண சம்பன்னன் என்று அப்பெயர் பொருள்படுகின்றது. ஞானம், வைராக்கியம், வீர்யம், ஐசுவரியம், ஸ்ரீ, கீர்த்தி ஆகிய இவ் ஆறும் தெய்வீக மகிமைகளாகும். இவ் ஆறை யும் உடைத்திருப்பவன் பகவான். பரம்பொரு ளைப் பெண்பாலாகக் கருதினாலும், ஆண்பாலா கக் கருதினாலும் வஸ்து ஒன்றே. கடவுள் ஆணும் அன்று; பெண்ணும் அன்று. ஆண், பெண் என்ற பால்வேற்றுமையைக் கடந்த அதீதப் பொருள் அவர். நம்முடைய வசதிக் காக அவரைப் பகவான் என்றும், பகவதி என் றும் அழைக்கின்றோம். அவர் படைத்துள்ள மகிமைகளுள் ஒரு சிறுபகுதி ஜீவன் இடத்து இருக்குமாயின் அவன் பெரிய ஜீவன் ஆகின் றான். ஈசனுடைய இத்தனை மகிமைகளும் அமையப்பெறும்பொழுது அவர் அவதார மூர்த்தி அல்லது ஈசுவரன் ஆகிறார். அவதார மூர்த்தி வாயிலாக அன்றி ஈசுவரனுடைய மகிமையை அறிவது கஷ்டம். மின்சக்தி ஒலியைப் பெருக்கக்கூடும் என்பது ஒலிபெருக் கியின் மூலம் நமக்கு விளங்குகிறது. மின்சக்தி ஒளியைத் தரக்கூடும் என்பதை மின் விளக்கு விளக்குகிறது. இறைவனுடைய ஆறு சம்பத் துக்களையும் அவதார மூர்த்திகளின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளமுடியும். பல முறை ராமாயாணம் கேட்டதன் வாயிலாக ஓரளவு ராமனை அறிந்திருக்கிறோம். ராமனைச் சான் றாக எடுத்துக்கொண்டு ஞானத்தை ஆராய்ந்து பார்ப்போம். "எப்பொருள் எத்தன்மைத்தா யினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்பது குறள். அறிவு என்பதும் ஞானம் என்பதும் ஒன்று. மைந்தன் என்பவன் தந்தை யின் மற்றொரு சொரூபம் ஆகின்றான். அவன் என்றைக்கும் தந்தைக்கும், தாய்க்கும் அடங் கியவனாக நடந்துகொள்ள வேண்டும். தந்தை, தாயின் ஆணைப்படி நடந்துகொள்பவனே மைந்தன் ஆகின்றான். அப்படி நடந்துகொள் ளும் மைந்தனுக்குப் புத்திரோத்மன் என்ற மகிமை உரியது ஆகிறது. இதையறிந்திருப் பவன் உலக வாழ்க்கையைப்பற்றிய ஞானம் பெற்றவன் ஆகின்றான். ராமன் இதையறிந்து நடந்து கொண்டான். தந்தை சொற்படி மட்டு மல்லாமல், மாற்றாந்தாயின் சொற்படியும் நடந்து கொண்டவன் ராமன். ராமன் கைகேயி யைத் தாயாகவே பொருள்படுத்தினான். ராமன் காட்டிற்குப் போனதைக் குறித்துப் பெரும் வேதனை அடைந்து சரீரத்தைவிட்ட தசரதனுக்கு ஆறுதல் சொல்லுவதற்காகத் தேவர்கள் தசரதனை ரதத்தில் இலங்கைக்குக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது இராவண சம்காரம் நிகழ்ந்துவிட்டது. ராமன் ராவண சம்காரம் என்னும் அரியகாரியத்தைச் செய்வ தற்காக அவதரித்து வந்தான். இலங்கைக்கு வாராது அயோத்தியிலேயே இருந்திருந்தால் ஒரு சிற்றரசனாகத்தான் திகழ்ந்திருப்பான். இங் ஙனம் கூறி தேவர்கள் தசரதனுக்கு ஆறுதல் கூறினார்கள். தசரதனும் மகிழ்ச்சியுற்றவனாகராம னிடம் விடைபெற்றுக்கொண்டு சொர்க்கத்துக் குத் திரும்பும்போது, "எக்காரணத்தை முன் னிட்டும் என் தம்பி பரதன் மீதும், என் தாய் கைகேயிமீதும் தாங்கள் எவ்வித வருத்தமும் கொள்ளக்கூடாது" என்று ராமன் தசரதனை வேண்டிக்கொண்டான். என் தாய் கைகேயி

என்று ராமன் கூறினது ராமன் அடைந்திருந்த பண்பின் உச்சநிலையையும், ஞானத்தின் உச்ச நிலையையும் காட்டுகிறது.

எந்த மனிதனும் சத்திய விரதத்தினின்றும் பிசகக்கூடாது. ஞானம் படைத்தவனுக்குத் தான் அது விளங்குகிறது. இன்றைக்கு நம் நாடு க்ஷீணதசை அடைந்ததற்குக் காரணம் நாம் சத்தியத்தினின்று பிசகியதேயாம். இது பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. சத்தியத்தினின்றும் பிசகுவதைவிட சீர்கேடு வேறொன்றும் இல்லை. சத்தியத்தினின்றும் ஞானி ஒரு பொழுதும் பிசகமாட்டான். தந்தையைச் சத்திய சங்கல்பன் ஆக்கும் பொருட்டு ராமன் அயோத்தியைத் துறந்து ஆரண்யத்துக்குப் போனான். ராமன் ஆரண்யத்துக்குப் போகாதிருந்திருந்தால் தசரதன் மகிழ்ச்சி அடைந்திருப்பான். ஆனால் ராமனோ தந்தை வாக்கை நிறைவேற்றுதல் பொருட்டு ஆரண்யத்துக்குப் போவதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டான். சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதினுடைய அவசியத்தை ராமன் அங்கு விளக்கிக் காட்டுகின்றான். சத்தியநெறிநிற்பவனைச் சத்திய சொரூபமாக இருக்கின்ற பரவஸ்து காப்பாற்றுகின்றது. மகாபாரதத்தில் எத்தகைய நெருக்கடி வந்த பொழுதிலும் தர்மத்தைவிட்டுச்சிறிதும் பிசகாதவனைத் தர்மம் காப்பாற்றுகின்றது என்பதைத் தர்மராஜா விளக்குகின்றார். தர்மராஜா சொர்க்கத்துக்குப் போகும்பொழுது அவருடன் சென்ற உடன் பிறந்தவர்களும், மனைவியும் வழியில் விழுந்துவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு குறை இருந்தது. ஆகையால் இறுதிவரையிலும் அவரோடு அவர்கள் செல்ல முடியவில்லை. அவரைப் பின்தொடர்ந்து நாய் ஒன்று சென்றது. தர்மராஜாவைச் சொர்க்கத்துக்கு அழைத்துப்போக விமானம் ஒன்று வந்தது. அந்த விமானத்தில் வாலை ஆட்டிக் கொண்டு தர்மராஜாவோடு நாயும் ஏறியது. ஆனால் தேவர்கள் சொர்க்கத்தில் நாய்க்கு இடமில்லை என்று நாயைத் தடுத்தார்கள். என்னை நம்பி வந்த ஜீவனை இடைவெளியில் விட்டு விட்டு எனக்கு மட்டும் சொர்க்கம் என்றால் அந்தச் சொர்க்கம் எனக்குவேண்டாம் என்றார் தர்மராஜா. அது தர்மத்தினுடைய உச்சநிலையாகும். உங்கள் பொருட்டு நாயையும் உள்ளே அனுமதிக்கிறோம் என்று நாயையும் சேர்த்து தேவர்கள் உள்ளே அழைத்துப் போனார்கள். உள்ளே சென்றவுடன் நாய் தர்மதேவதையாக மாறி தர்மராஜாவிடம் "உம்மைச் சோதிக்கவே நான் வந்தேன். நீர் தர்மத்தை விட்டுப் பிசகவில்லை. தர்மமும் உம்மைவிட்டுப் பிசகவில்லை" என்றது. இது ஞானிக்குத்தான் விளங்குகிறது. புத்தகங்களைப் படித்துச் சில புள்ளி விவரங்கள் தருவதை நாம் ஞானம் என்கிறோம். எத்தகைய கஷ்டம் வந்தாலும் தர்மத்தை விட்டுப்பிசகாது, சத்தியத்தை விட்டுப் பிசகாது இருப்பவன்தான் ஞானத்தைப் பெற்றவன் ஆகின்றான். ராமனும், தர்மராஜாவும் அங்ஙனம் நடந்துகொண்டதால் அவர்கள் ஞானத்துக்கு விளக்கமாகின்றார்கள்.

ஞானத்துடன் சேர்ந்தே வைராக்கியம் வருகிறது. வைராக்கியம் என்பது பற்றற்ற நிலையாகும். வைராக்கியத்திற்குப் பிடிவாதம் என்று மக்கள் பொருள்படுத்துகின்றனர். அது தவறு. ஞானத்தின் விளைவாக உலகத்துப் பொருள் எதிலும் பற்று வைக்காது இருப்பது வைராக்கியம் எனப்படும். குழந்தை ஒன்று தாயின் இடுப்பில் இருந்தது. குழந்தையை வைத்திருந்த தாய் எரிகின்ற தீபத்திற்குச்சற்று தூரத்திலிருந்தாள். குழந்தை தீபத்தின் ஒளிப் பிழம்பைத் தொட முயற்சித்தது. ஆனால் அப்பிழம்பு அதன் கைகளுக்கு எட்டவில்லை. மற்றவர்களோடு பேசிக்கொண்டிருந்த தாய் பேச்சில் மனத்தைச் செலுத்தியவளாக எரிந்து கொண்டிருந்த தீபத்திற்கு அருகில் சென்றாள். குழந்தை ஒளிப்பிழம்பைத் தொட்டதும் அது கையைக் காந்தியது. ஓ! என்று கத்தியது. அதன் பிறகு அக்குழந்தை அத் தீப்பிழம்பைத் தொடாது. பிழம்பைத் தொட்டால் கைகாந்திப் போகும்என்ற ஞானம் அதற்குவந்து விட்டது. முன்பு அந்த ஞானம் இல்லாமையால் அதைப் பற்றிப் பிடித்தது. அந்த ஞானம் வந்தவுடன் குழந்தை அதை விட்டு விலகிக்கொண்டது. பிரபஞ்சப்பொருள்கள் இன்னகாரியத்துக்கு இவ்வளவுதான் உதவும், அதற்கு மேல் அவை உதவமாட்டா. எனவே அவற்றின் மீது பற்று வைக்கவேண்டியது அவசியமில்லை. இத்தகைய மனத்தெளிவு வந்துவிட்டால் உலகப்பொருள்

24

களிடத்து வைராக்கியம் வந்துவிடுகிறது. ஒளிப்பிழம்பு சுடும் என்பதை அறிந்தானபிறகு குழந்தைக்கு அதன் மீது பற்றற்ற நிலை சுலப மாக வந்துவிட்டது. பிரபஞ்சப்பொருள்களி டத்துப் பற்றுதல் வைப்பதுபொருளற்றது என் பது விளங்கிவிட்டால் வைராக்கியம் தானுக வந்துவிடுகிறது. இப்பூவுலக வாழ்க்கையில் அரச வாழ்வு வரினும், ஆரண்ய வாழ்வு வரி னும் வித்தியாசம் பாராட்டாது இரண்டையும் ஒன்ருகக் கருதுபவன் ஞானி. ராமனுக்கு இத் தகைய சூழ்நிலை வந்து அமைந்தது. முந்திய நாள் இரவு ராஜரீதியில் அமைந்திருந்த படுக் கையில் படுத்து உறங்கிய ராமன் அடுத்த நாள் இரவு நாடு கடத்தப்பட்டவனுக மரத்தடி யில் சருகை விரித்து அதன் மீது படுத்து அயர்ந்து தூங்கினுன். ராமன் உறங்கியதைப் பார்த்த லக்ஷ்மணன் "ஒரு மனிதனுடைய வாழ் வில் ஒரே நாளில் எத்தகைய மாறுதல் வந்து அமைந்திருக்கிறது! அந்தமாறுதலைப் பொருள் படுத்தாது ராமன் ஆனந்தமாக இருக்கின்ருர். என்னே இவருடைய வைராக்கியம்!" என்று வியப்படைகின்ருன். வைராக்கியத் துக்கு ராமன் சான்று ஆகின்ருன். சீதை காணுமல் போனபொழுது ராமன் அடைந்த வருத்தம் இவ்வளவு அவ்வளவு அன்று. அவ தார மூர்த்தியாக வந்த ராமன் சீதையின் மீது அவ்வளவு பற்று வைத்திருக்கலாமா என்னும் கேள்வி எழலாம்? ராமன் சீதையின்மீது வைத்த பற்று பந்தப்படுத்தக் கூடிய பற்று அன்று. சிறிது நேரத்திற்குள் வருத்தத்தைத் துறந்துவிட்டுத் தன் கடமையில் கருத்துச் செலுத்தினுன். வேண்டிய இடத்துச் சீதை யைத் துறக்கவும் ஆயத்தமாக இருந்தான். ஆகையால் ராமன் சாதாரண மனிதர்களைப் போன்று பற்றுடையவன் அல்லன். சீதையை ராவணனிடமிருந்து மீட்டெடுத்து அயோத்திக்கு வந்த பிறகு குடிமக்களுக்குப் பாடம் புகட்டுவதற்காகச் சீதையைத் துறந்து விட ராமன் ஆயத்தமாக இருந்தான். அயோத் தியில் ஒரு குடும்பத்தில் கணவனுக்கும் மனை விக்கும் இடையில் சச்சரவு ஏற்பட்டது. கண வன் மனைவியைப் பார்த்து "நீ என்னை ராமன் என்று எண்ணிக்கொண்டாயா? அயலான் வீட்டில் பல மாதங்கள் இருந்த சீதையைத் தன்னேடு வைத்திருக்கின்ற ராமனைப்போன்று என்னை எண்ணிவிட்டாயா?" என்று பகர்ந் தான். இந்தச் செய்தி ராமனுக்கு எட்டியது. உடனே நிறை கர்ப்பிணியாக இருந்த மனைவி யைக் காட்டுக்கு அனுப்பி விட்டான். அரசன் குடிகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ராமன் மனைவி யைத் துறந்தான். சீதையைக் காணுமல் போனபொழுது அழுத ராமன் ராஜ தர்மத் தைக் காப்பாற்றும் பொருட்டுச் சீதையை எளி தில் துறந்தான். ராமன் பற்று உடையவன் அல்லன் என்பதை அங்கு நிருபித்துக் காட்டு கின்ருன். பிரபஞ்சப் பொருள் எதிலும் பற்று இல்லை என்பதை ராமன் அந்நிகழ்ச்சியின் மூலம் காட்டித்தந்தான். தன்மனதை எப்படி வென்றி ருந்தான்என்பதையும் ராமன் அங்குக் காட்டித் தருகிருன். ராமன் போன்று நாம் வாழக்கற்று கொள்ளவேண்டும். "சேற்று மீன் போன்று உலகில் வாழ்ந்திரு" என்று பரமஹம்சர் பகர்ந்துள்ளார். உலகப்பற்றிலிருந்து நீ விலகி இருக்கின்ற அளவு பெரிய நிலைக்கு வருவது சாத்தியம். படகு நீரில் மிதக்கலாம். ஆனல் படகுக்குள் நீர் புகுந்துவிடக்கூடாது. அங்ங னம் நீ உலகில் வாழ்ந்திருக்கலாம். ஆனல் உலகப்பற்று உன் உள்ளத்தில் புகுந்துவிடலா காது. பற்றற்ற நிலையில் வாழ்கின்றவன் தான் பெருமகனுகின்ருன். ஞானம் வரும் பொழுதுதான் பற்று அகலுகின்றது. தன் சொருபத்தைப் பற்றி அறிந்துகொள்ளுவது ஞானம். பிரபஞ்சத்தில் என்ன பாங்கில் இணக்கம் வைக்கவேண்டும் என்பதையறிந்து அதனிடத்து முறையாக இணக்கம் வைப் பவன் ஞானவான் ஆகின்ருன். ராமனு டைய ஜீவிதத்தை ஆராய்ந்து பார்த்தால் எல்லாப் படித்தரத்திலும் அவன் ஞான சொருபமாகத் திகழ்கின்ருன். பிரபஞ்சத் தோடு இணக்கம் வைக்கவும் தெரிய வேண் டும். அதைவிட்டு விலகி இருக்கவும் தெரிய வேண்டும். பலருக்குப் பிரபஞ்சப் பொருளில் பற்றுதல் வைக்கத் தெரியும். பிரபஞ்சப் பொருளை விட்டு விலக அவர்களுக்குத் தெரி யாது. பிரபஞ்சம் பரவஸ்துவைச் சார்ந்திருக் கிறது. பரவஸ்து பற்றுதலைத் தாண்டிய நிலையில் இருக்கிருர்.

(தொடரும்)

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆனந்த சொருபியான ஆத்மாவுக்கு இந்தச் சரீர சம்பந்தத்தால், சரீரத்தோடு கூடிய நிலையால், ஜீவ வியக்தியால் துக்கம் ஏற்பட்டது. அரசர்களும், சக்கரவர்த்திகளும் கூட, சரீரத்தால் உபாதி, துக்கம் அனுபவிக்கிறார்கள். ஆனால் ஞானியோ இந்தச் சரீரத்தின் கூத்தாட்டங்களை யெல்லாம் சாக்ஷி மாத்திரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். மானுட சரீர எலும்புக்கூடு ஒன்றில் அதன் பாகங்களையும், அதன் அமைப்பையும், செயல் முறையையும் ஆசிரியர் மாணுக்கர்களுக்குக் கோலால் சுட்டிக்காட்டி விளக்குகிறார். அதேபோல திடஞானி இந்தச் சரீரக்கூண்டைப் பாவிக்கிறான். தான் (ஆத்மா) வேறு, சரீரம் வேறு என்பது அவனுக்குப் பிரத்யக்ஷமாக விளங்குகிறது. அது அவனுக்கு அனுபவத்தில் கைகூடிய விஷயம். இவ்வுண்மையைக் கோவில் விழாவில் சுவாமி வீதிவலம் வரும்பொழுது சுவாமி முன்னே ஆடிக்கொண்டு வரும் பொம்மலாட்டத்தின் மூலம் புகட்டுகிறார்கள். பிராரப்தம் முடியுமட்டும் ஞானியின் சரீரம் நடமாடி ஓய்கிறது. **ஜீவன் முக்தி** என்று இந்நிலை விளக்கப்படுகிறது. ஞானி ஒருவருக்குக் கெண்டைக்காலில் புண் வந்து, புரை ஏறி புழு வைத்துவிட்டது. அவர் அதைப் பொருட்படுத்தாதவராக இருந்தார். உதிர்ந்த இலை காற்றில் அங்கும் இங்கும் அலைவது போன்று அவரது சரீரம் நடமாடி வந்தது. ஒருநாள் ஒரு மரத்தடியில் அவர் வீற்றிருந்தார். அவரது கெண்டைக்காலிலிருந்து ஒரு புழு நெளிந்து தரையில் விழுந்து தவித்துக் கொண்டிருந்தது அவரது பார்வையில் பட்டது. அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. உதிர்ந்த சருகு ஒன்றினால் அப்புழுவை எடுத்து "இருக்க வேண்டிய இடத்தில் இருக்காமல் ஏன் கீழே விழுந்து தவிக்கிறாய்?" என்று அன்புடன் கடிந்து அதைப் புண்ணில் வைத்தார். இந்தச் சரீரம் அவருக்கு என்னவாக இருந்தது? இமாலயத்தில் கங்கையாற்றின் ஒரு கரையில் தியானம் செய்து கொண்டிருந்த துறவி ஒருவரைப் புலி ஒன்று கௌவிக் கொண்டு போவதை விவேகானந்த சுவாமிகள் எதிர்க்கரையில் இருந்தபடியே பார்த்தார். அம்முனிவரின் முகத்தில் புன்முறுவல் பூத்தது. ஆனந்தம் ஜொலித்தது. வாய் அடக்கமாக, சாந்தமாக, ஆனந்தமாக 'சிவோஹம், சிவோஹம்' என்று உச்சரித்தது. அமைதியான அக்காட்டில் அது தெளிவாகக் கேட்டது. புலியும் இப்பிரபஞ்சமும் அவருக்கு என்னவாகக் காட்சி அளித்தன? நம் தலையிலிருந்து ஒரு ரோமம் உதிர்வது போன்று ஞானியின் சரீரம் வீழ்கிறது, மரணமடைகிறது. அப்படி வீழ்ந்ததும் அவருக்குத் தெரியவும் தெரியாது என்று ஞானியின் மரணம் பற்றி சொல்லப்படுகிறது. பழைய கிழிந்த சட்டையைக் களைவது போன்று ஞானி தன் ஜீரணமான உடலைக் களைகிறான் என்று எவ்வளவு சாதாரணமாக அது சொல்லப்படுகிறது. இவ்வுடல் அவர்களுக்குப் பந்தமன்று, இவ்வுடலால் அவர்களுக்கு உபாதி இல்லை. இப்பிரபஞ்சம் அவர்களுக்குப் பரம்பொருளாகத் தோன்றுகிறது. மறைப்பு நீங்கி தன் நிஜசொருபத்தில் அவர்களுக்குக் காட்சி கொடுக்கிறது. ஆத்மா ஆனந்தசொருபம். இவ்வுலகின் சுக துக்கங்கள் எதுவும் ஆத்மாவை எட்டமாட்டா; அவை அந்தக்கரணத்தோடு சம்பந்தப்பட்டவை என்பதற்கு ஞானியின் வாழ்வே சான்றாகிறது. நோயே, பாயே, சரீரமே நீங்கள் மூவரும் கூடி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் சிவ உணர்விலேயே இருப்பேன் என்று பக்தர் ஒருவர் பாடுகிறார். ஸ்ரீ கிருஷ்ணவதாரம் பூரணவதாரம். அவரது வாழ்வில் பரதத்துவம் முழுவதும் விளக்கப்படுகிறது. சரீரத்தில், இப்பிரபஞ்சத்தில் கட்டுப்படாத வாழ்வாக அது விளங்குகிறது. கிருஷ்ணவதாரத்தில் அவர் சிரித்ததில்லை, அழுததில்லை, அதற்குத் தீராத பிரச்னையே இல்லை. அது எல்லையற்ற அன்பு; அருள்வடிவாய் விளங்குகிறது. **असङ्गो ह्ययं पुरुषः** இந்த ஆத்மா எதிலும் சம்பந்தமற்றது என்று வேதம் சொல்லுகிறது. வேதாந்தக் கதை ஒன்றை, பெரியார் ஜீவிதம் ஒன்றை சில ஆட்கள் கூடி நடித்துக் காட்டுகிறார்கள். அதே

போல பரமாத்மாவின் சொருப லக்ஷணமான குணங்களை, பரதத்துவங்களையெல்லாம் ஞானியும், அவதாரபுருஷரும் தம் சரீரங்களின் மூலம் நடித்துக் காட்டுகிறார்கள்; அப்பியாசம் செய்து காட்டுகிறார்கள். பாகவதம்–பக்தன்–பகவான் மூன்றும் ஒன்றே. குருவும் கடவுளும் ஒன்றே. சரீரபோதம் கடந்த ஞானியும் கடவுளும் ஒன்றே. ஆத்மா சாசுவதமானது, அழிவில்லாதது. அதற்கு அவயவம் இல்லை. இந்திரியங்கள் இல்லை. அதைச் சுக துக்கங்கள் அணுக மாட்டா. இத்தத்துவங்கள் ஆத்மாவின் சொருப லக்ஷணம். யுக்தி பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டவைகள். சுஷுப்தியிலும், மனது செயலற்று சாந்தமாக இருக்கிறவேளைகளிலும், (**தூஷ்ணீம் பாவம்**) சமாதி அவஸ்தையிலும் ஆனந்த அனுபவம், சாதாரண மானுடனுக்கும், முமுக்ஷுவுக்கும் சாதனத்தின் முடிவை எட்டியுள்ள ஞானிக்கும் உண்டாகிறது. இங்ஙனம் சாஸ்த்ரம், யுக்தி, பிரத்யக்ஷம் ஆகிய மூன்று பிரமாணங்கள் மூலமும் ஆத்மாவின் நிஜசொருபம் ஆனந்தம் என்பதும் சரீர சம்பந்தத்தாலேயே அதற்குத் துக்கம் வருகிறது என்பதும் ஞானி அதைக் கடந்து பழையநிலைக்குப் போய் விடுகிறான் என்பதும் முடிவான தீர்மானம் ஆகிறது.

வேதங்களில் கதை ஒன்று உண்டு. தேவர்களின் அரசன் இந்திரனும் அசுரர்களின் அரசன் விரோசனனும் பிரம்மாவிடம் உபதேசம் கேட்கப் போனார்கள். 'நீயே ஆத்மா' என்று அவர் உபதேசித்தார். விரோசனன் சரீரத்தையே ஆத்மா என்பதாகப் புரிந்துகொண்டான். விசாரம் செய்து பார்க்கவில்லை. அதற்கேற்ப அவன் வாழ்வும் மாறி அமையவில்லை. இந்திரனோ ஆத்மாவின் தத்துவங்களைக் கேட்டிருக்கிறான். 'அது அழியாதது, மாறாதது' என்று சொல்லப்பட்டிருக்கிறதே. நீயே ஆத்மா என்று பிதாமகர் சொன்னதில் நீயே என்பது அழியக்கூடிய இந்தச் சரீரமாக இருக்க முடியாது. பின் எதை நீயே என்று குறிப்பிட்டார்' என்று மனதினுள் விசாரித்தான். பலதடவை பிரம்மாவிடம் போனான். அவர் அந்தப் பதிலையே சொன்னார். சரீரம் அல்ல, இந்திரியங்கள் அல்ல, அந்தக்கரணம் அல்ல, பிராணன் அல்ல, பஞ்சகோசங்கள் அல்ல, உயிர் அல்ல என்று ஒவ்வொன்றாக விசாரித்து, புறக்கணித்து முடிவில் உண்மையை உணர்ந்தான். இவை அனைத்தையும் எது உடைத்திருக்கிறதோ, பயன் படுத்துகிறதோ அதையே ஆத்மா என்றும், பிரக்ஞை என்றும் அறிந்து கொண்டான். மானுட உலகில் விரோசனன் போன்ற மந்த புத்தி, ஜட புத்தி உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஆத்ம சொருபத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யாமல், தேகத்தையே ஆத்மாவாக எண்ணிக் கொண்டு தேக தர்மங்களை ஆத்மாவிலும், ஆத்மாவின் தர்மங்களை தேகாதிகளிலும் ஒன்றை ஒன்று மாற்றி தப்பாக எண்ணிக் கொண்டு நான் மனிதன், நான் தமிழன், நான் பிராம்மணன், நான் பிரம்மசாரி, என்று ஜாதி, மொழி, வர்ணாச்ரம எண்ணங்களுடன் கூடியவர்களாக இவ்வுலகின் சுகதுக்க அனுபவங்களில் அழுந்திப் போகிறார்கள்.

தேவர்களும் தேவதைகளும் சரீரம், வியக்தி இருப்பதால் சுகதுக்கங்களுக்கு உட்படுகிறார்கள். புராணங்களில் இந்திரன் பலதடவை தன் பதவியினின்று தள்ளப்படுவதையும், சாபங்களுக்கு ஆளாவதையும், தேவாசுர போர்பற்றியும், தேவர்கள் தோற்று அசுரர்களுக்கு அடிமை ஆவதையும், அவர்களிடம் அடியுண்பதையும் நாம் படிக்கிறோம். வசுக்கள், அசுவினிகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் என்கிற மானுட இனத்துக்கு மேற்பட்ட ஜீவர்களும் இதற்கு விலக்கு இல்லை. அவர்களது புண்ணிய பலன் தீர்ந்ததும் மீண்டும் மனுஷ்ய லோகத்தில் பிறக்கிறார்கள். பின் ஏன் அவர்களை மக்கள் உபாசிக்கிறார்கள்என்கிற கேள்வி எழலாம். அவர்களால் எப்படிக் கோரிய பலனை, இன்பங்களைக் கொடுக்க முடிகிறது? இவ்வுலகிலும் அரசர்கள் தங்களுக்குப் பல கஷ்டங்கள் இருந்தாலும் தம்மை அண்டினவர்களைக் காப்பாற்ற வில்லையா? அதுபோல தேவர்களும்,தேவதைகளும் தங்களுக்குப் பயம், கஷ்டம், அழிவு இருந்தாலும், தங்களை உபாசிப்பவர்களைவிட மேல் நிலையில் இருப்பதால், உபாசிப்பவர்களின் இஷ்டங்களை நிறைவேற்றுகிறார்கள்.

வேதத்தில் ஒரு வாக்கியம் உண்டு. **देवलोके देवा आनन्दरूपरितष्ठन्ति ।** – தேவலோகத்தில்

தேவர்கள் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறார்கள் என்று இதற்குப் பொருள். இதைச் சரியாக அர்த்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். மனுஷ்ய லோகத்தில் துக்கத்துக்கு ஏதுவான சரீரவாழ்க்கை வாழ்ந்தாலும் ஞானி எப்படி அதில் சம்பந்தப்படாது அது அந்தக்கரணத் துக்குரியதென்றும், ஆத்மாவைப் பாதிக்காது என்றும் இருக்கிறானே அங்ஙனம் வாழ்வாம் ஏணியில் மேல்படியில் உள்ளவர்கள், அறிவு வளர்ச்சியடைந்துள்ள தேவர்கள் தங்களுக்கு நேரும் துன்ப துயரங்கள் அந்தக்கரணத்தை ஒட்டியவையே என்று தீர்மானித்து அவைகளால்பாதிக்கப்படாத மனம் வாய்ந்தவர்களாக எப்போதும்ஆனந்தஅனுபவம்உள்ளவர்களாக இருக்கிறார்கள். சரீர உபாதிகள் அவர்களுக்கும் உண்டு. ஆனல் அவர்கள் அவற்றை மனத்தில் வாங்குவதில்லை. இம்முறையில் 'இன்பமே எந்நாளும்' என்று இருக்கிறார்கள் எனச் சொல்லப்பட்டுள்ளது ஐத்ரேய உபநிஷதத்தில் **ता एता देवताः सृष्टा अस्मिन् महत्यर्णव प्रापतत् ।** என்று சொல்லப்பட்டிருக்கிறது. "இந்தத் தேவர்களும் சிருஷ்டிக்கப்பட்ட பின் இந்தப் பெரிய சமுத்திரத்தில் தள்ளப்பட்டார்கள்" என்பது இதன் பொருள். அதாவது இப்பிரபஞ்ச இன்பங்களை அனுபவிக்க இந்திரியங்களும் சரீரமும், சூக்ஷ்மமானவைகளாக இருந்தாலும் சரி, ஸ்தூலமானவைகளாக இருந்தாலும் சரி, அவற்றைப் பெற்றுவிட்டால் துன்பத்தை அடைந்தே, நுகர்ந்தே ஆகவேண்டும். இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப்போன்று பிரிக்க முடியாதவை. ஊடு நூலும் பாவு நூலும் இணைந்து துணி ஆகி இருப்பது போன்று இன்பம் துன்பம், லாப நஷ்டம், குளிர் வெப்பம், அறிவு அறியாமை, வாழ்வு சாவு, பசி தாகம், நோய் ஆரோக்கியம் இவைபோன்ற அநேக துவந்துவங்களால் இப்பிரபஞ்சம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஒன்றைத் தவிர்த்து மற்றொன்று இல்லை. ஆகையால் இவற்றிலிருந்து விடுபடும் விதேக முக்தியை (தேக சம்பந்தமற்ற மோக்ஷம்) அடைவதற்கே நாம் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

சரீரமில்லாத மோக்ஷம்தான் சரியானது என்றால் கீழ்வரும் இவ்விஷயத்தில் முரண்பாடு வரும். ஆகாயத்தில் நக்ஷத்திர ரூபமான சரீரத்தை உடையவர்களாகக் காணப்படும் சில தேவர்களை முக்தி அடைந்தவர்கள் என்று கருதுவது பிழையாகிவிடுமே எனலாம். (துருவ நக்ஷத்திரம், சப்தரிஷி மண்டலம், அருந்ததி நக்ஷத்திரம், திரிசங்கு சுவர்க்கம் முதலியவற்றை இங்கு குறிப்பிடுகிறார். உண்மையில் உலகம், நக்ஷத்திரம், சூரியன், சந்திரன் இவைகள் ஜடப் பொருள்கள். அவைகளுக்கு அறிவும் உணர்வும் இல்லை. ஆதலால் அவைகளுக்குப் பந்தமும் இல்லை, முக்தியும் இல்லை. ஆயினும் நமது சாஸ்திரங்களில் ரிஷிகள், பக்தர்கள், கடவுள் அருளால் இங்ஙனம் நக்ஷத்திரங்கள் ஆனதாக இருப்பதால், சாஸ்திரங்களிடத்து நமக்கு உறுதியான நம்பிக்கை இருப்பதால், இக்கேள்வியை எழுப்புகிறார்.) இதற்கும் நமது சாஸ்திரங்களே விடையளிக்கின்றன. மோக்ஷம் என்பது நான்கு படித்தரங்கள் கொண்டதாக உள்ளது. 1. ஸாலோக்கியம் 2. ஸாமீப்யம் 3. ஸாரூப்யம் 4. ஸாயுஜ்யம் என்று அப்படித்தரங்கள் பகரப்படுகின்றன. (சிவலோகம் அல்லது விஷ்ணுலோகத்தில் வசித்தல், இறைவனுக்குச் சமீபத்திலேயே இருத்தல், அவரது திருவுருவம் பெறுதல், இரண்டறக் கலத்தல் என இந்நான்கு பதங்களும் பொருள்படுகின்றன.) பள்ளியில் மாணவர்கள் பரீக்ஷையில் நூற்றுக்கு எண்பது பேர்தேர்வுபெற்றுள்ளனர்என்கிறார்கள்.தேர்வு பெறத் தேவையான மதிப்பெண்மாத்திரம் அளவாகவாங்கி கடைசிநிலையில்தேர்ந்தவனும், தலைமாணக்கனும் ஒன்று போலவே அங்கு பேசப்படுகிறார்கள்.ஒவ்வொருமாணவனும் அவனவன் அறிவு, திறமைக்கு ஏற்ப மதிப்பெண் எடுத்திருப்பான்.அதைத் தரம் என்று சொல்லுகிறார்கள். ஒரு வகுப்பில் முப்பது தரம் இருக்கிற தென்றால் முதலாவது தரம் வாங்கியவன் படிப்பில், அறிவில் தலைத்தரமானவன் என்று பொருள். முப்பதாவது தரம் வாங்கியிருக்கும் மாணவன் மந்தமானவன், கடை மாணக்கன் ஆகிறான். அதே போல மோக்ஷம் அடைந்துள்ளவர்களிலும் படித்தரம் இருக்கிறது. அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரு ஆழ்வார்கள் இவர்களது சரித்திரங்களைப் பாருங்கள். கடவுளுக்காகத் தம் உடல்

பொருள் ஆவி அனைத்தையும் எப்படித் தியாகம் செய்துள்ளார்கள்! உலகின் துன்ப துயரங்களில் தோய்ந்திடாமல் கடவுளையே கதியெனப்பற்றியிருந்ததில்எவ்வளவு வித்தியாசம் காணப்படுகிறது! அப்பர், மாணிக்கவாசகர், பிரஹ்லாதன் போன்ற பக்தர்களின் அதிதீவிர உணர்வுகளையும் மற்ற பக்தர்களின் சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சீர்தூக்கிப் பாருங்கள். இம்முறையில் உள்ள படித்தரத்தைத் தான் இங்ஙனம் பிரித்துள்ளார்கள். கடவுள் கருணாகரன்,தயாபரன்,தாயினும் சாலப் பரிந்து ஏற்கும்தன்மையன். அவனுக்குத் தன் மக்களிடையே எந்தவிதமான ஏற்றத் தாழ்வும் கிடையாது. உண்மையில் மந்த அதிகாரியிடம் அவன் அதிகக்கருணைகாட்டுகிறான்.அவன் அனைவரையும் தன்னுடன் அணைத்துக் கொள்கிறான். நாம் தாம் படித்தரம் பிரித்து ஆராய்கிறோம். நாம் எங்கே இருக்கிறோம் என்பது நமக்கு விளங்க வேண்டும். நாம் மேலும் முயன்று முன்னேறியாகவேண்டும். கடவுளை அடைதல், அவருடன் இரண்டறக் கலத்தல் ஒன்றே இந்த மானுட வாழ்வின் லக்ஷியமாகும். மறுபிறப்பு உண்டாகக் கூடிய ஹேது இருப்பதினால் முதல் மூன்றும் பூரணமான மோக்ஷம் ஆகமாட்டா. சாயுஜ்யம் என்பது பூரண முக்திநிலை ஆகும். அதற்குப் பிறகு மறுபிறப்பு இல்லை. இந்நிலைகளை அடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு சாதனங்கள் இருக்கின்றன.சரியைஎன்பது பகவானுக்குக்கைங்கரியம் செய்து கொண்டு தன்னை ஆண்டவனுடைய தாஸன் என்கிற நிலையில் வைத்துக் கொள்ளுதல். இது கர்மயோகம் எனவும் சொல்லப்படும். கிரியை என்பது கிரியா விசேஷங்களோடு தன் இஷ்ட மூர்த்தியைப் பூஜித்தல், வழிபாடு செய்தல், பக்தி செய்தல் ஆகும். இது பக்தி யோகம் எனப்படும். யோகம் என்பது யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அஷ்ட அங்கங்களைக் கொண்டது. இது ராஜயோகம் என்றும் சொல்லப்படும். ஞானம் என்பது ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் பேதமில்லை, இரண்டும் ஒன்றே என்கிற ஐக்கிய புத்தி. இது ஞானயோகம் எனப்படும். மனிதன் கடவுளை நாடிச்செய்யும் எல்லா முயற்சிகளையும், ஆத்ம சாதனங்களையும் இந்த நான்கு பிரிவுகளில் அடக்கி விடலாம்.

யோகம் என்பது பொதுப் பெயர். யோகம் என்றால் இரண்டறக்கலத்தல் என்று பொருள். சாதகனின் மனப்பான்மையை அனுசரித்து எந்தக்குணம் சிறப்பாக, அவனிடம் எடுப்பாக உள்ளதோ அதற்கு அப்பெயர் இடப்படுகிறது. கர்மம்செய்பவனிடத்தில் பக்தியே இல்லை என்பதல்ல. அன்பினால் தூண்டப்பட்டே அவன் இடையறாது பணிவிடை செய்கிறான். பக்தன் கர்மமே செய்யமாட்டான் என்பதல்ல. கடவுளின் பொருட்டு அவன் எதை வேண்டுமானாலும் செய்ய ஆயத்தமாய் இருக்கிறான்; எதை வேண்டுமானாலும் தியாகம் செய்ய அவன் ஆயத்தமாய் இருக்கிறான். கர்மயோகியினிடத்திலும் பக்தனிடத்திலும் நெறியான வாழ்க்கை முறை உண்டு. பரிபூரணமான ஒழுக்கம், சன்மார்க்கம், சீலம், அறநெறி,தெய்வசம்பத் வாய்ந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். பணிவிடைசெய்யும்போதும்,கடவுளைக்குறித்து அன்புடன் வழிபடும் போதும், இறைவனது தர்சனத்துக்குஅவர்கள் ஏங்கும்போதும்அவர்களும் தாரணை,தியானம், சமாதி நிலைகளில் இருப்பவர்கள் ஆகிறார்கள். அவர்கள் மூவருக்கும் ஞானமில்லை என்று பகரக்கூடாது. கடவுள் ஒருவரே மெய்ப்பொருள், அவரை அடைதலே இந்த மானுட ஜன்மத்தின் தலையாய பிரயோஜனம், லக்ஷியம் என்று அருள்தாகம் வாய்ந்தவர்களாக அவர்கள் ஆகியிருப்பதே ஞானம்பெற்றதின் விளைவாகும். ஞானயோகத்தின் பலன் மற்ற மூன்றின் மூலமாகவும் அடையப்படுகிறது. எந்தச் சாதனத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் முறையாக முன்னேற்றமடைந்தால் அது பூரண ஞானத்தில் கொண்டு சேர்க்கும். நான்கு வேறுபட்ட மார்க்கங்கள் போன்று தென்படுபவைகள் ஒரேலக்ஷியத்தில், முடிவில் ஒன்று சேர்ந்துவிடுகின்றன. இந்நான்கினுள் ஒன்று பிரதானமாகவும், மற்ற மூன்றும் அதற்கு அனுசரணையாகவும் அமைதல் நல்லது. இதில் ஏதேனும் ஒன்றையோ, நான்கையுமோ அனுஷ்டித்து நிறைநிலை அடைதல், மோக்ஷமடைதல், பரமனுடன் இரண்டறக் கலத்தல் மானுட வாழ்வின் லக்ஷியமாகும்.

பரவாழ்வு வாழ்ந்த பெரியோர்கள்

(சுவாமி ஆத்மானந்தர்)

பிரகாசிக்கின்ற சூரியனைப்போன்று ஜ்வலிக்கின்ற துறவினாலும், இடையறாத சாதனையினாலும் ஆன்மீக வாழ்வில் பெருநிலையடைந்த அனுபூதிமான்களது வாழ்வை ஆராய்ந்து பார்த்தோமானால் நம்முடைய வாழ்வு மிகவும் அற்பத்தனமானதாகத் தோன்றும். அவர்கள் ஆற்றிய செயல்களோடு நம்முடைய செயல்களை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் நமது செயல்கள் மிக மிக அற்பமானவையாகத் தோன்றும். அவர்களுடைய சாதனைகளோடு நம்முடைய சாதனைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் நம்முடையவை பொருளற்றவையாகத் தோன்றும். அவர்களுடைய வாழ்விற்கும் நம்முடைய வாழ்விற்குமிடையில் எத்துணை எத்துணையோ வித்தியாசங்களைக் காணலாம். அவர்கள் பசியிலும், தாகத்திலும், குளிரிலும், வறுமையிலும் வாடி வதங்கினர். துன்ப துயரங்களுக்கு உள்ளாகியிருந்த வேளையிலும் அவர்கள் சாதனையைக் கைவிட்டார்களில்லை. இரவும் பகலும், உண்ணும்போதும், உறங்கும்போதும், செயல் புரிகையிலும், ஓய்வெடுக்கையிலும், விழித்திருந்து உபவாசம் செய்கையிலும், புகழ்ச்சி இகழ்ச்சிகளிலும் இறைவனுக்குத் தொண்டு புரிவதையும், அவரது திருவடியினைத் தியானித்தலையும் விட்டார்களில்லை. அருள் நாட்டம் தான் அவர்களுடைய வாழ்வாக இருந்தது. "எத்தொழில் செய்யினும் ஏதவஸ்தைப்படினும், முத்தர்மனமிருக்கும் மோனத்தே" என்ற தாயுமானாரது திருவாக்கிற்கு அவர்களது வாழ்வு எடுத்துக்காட்டாய் விளங்கிற்று.

அருள் நாட்டம் ஒன்றையே தங்களது வாழ்வின் லக்ஷியமாகக் கொண்ட பெரியோர் துன்ப துயரங்கள் பலவற்றிற்கு உள்ளானார்கள். நித்தியத்தின் பொருட்டு அநித்தியத்தைத் துறந்தார்கள். சத்தியத்தை நாடி அசத்தியத்தை விடுத்தார்கள். சத்தியப் பொருளில் ஈடுபாடு மனிதனுக்கு எளிதில் வந்து வாய்ப்பதில்லை. மெய்ப்பொருள் நாட்டம் கொள்ளுதல் அவ்வளவு எளிதானதன்று. உள்ளத்தூய்மையைப் பெறுதற் பொருட்டு மனிதன் ஓயாது முயலவேண்டும். நம்மிடத்துள்ள ஆசாபாசங்களை அகற்றுதற்கு அவைகளை எதிர்த்துப் போராடவேண்டும். உள்ளத்தில் நிகழுகின்ற போராட்டத்தின் புற வடிவமே மகாபாரத யுத்தம். நல்லியல்பிற்கும், புல்லிய இயல்பிற்கும் மனத்தகத்து இடையறாத போராட்டம் நிகழுகிறது. நல்லியல்பிற்குத் தெய்வத்தின் துணை இருக்கிறது. புல்லிய இயல்பு உலகத்தவரின் துணையை நாடுகிறது. ஆரம்பத்தில் புல்லிய இயல்பு வெல்லுவது போல் தென்படுகிறது. அதைக் கண்டு மனிதன் சோர்வடைந்து விடலாகாது. சத்தியமேவ ஜயதே! சத்தியமே வெற்றிபெறும் என்பது ஆப்த வாக்கியம். இறுதி வெற்றி நல்லியல்பிற்கே கிட்டும். ஏனெனில் தெய்வத்தின் துணை அதற்கிருக்கிறது. பாரத யுத்தமே இதற்குப் புறச் சான்றாகும். இடையறாச் சாதனைதான் இறுதியில் நமக்கு வெற்றியைத் தேடித் தரும்.

உலக நலனின் பொருட்டு நல்லவர்கள் ஓயாது உழைப்பார்கள். இரவில் நெடுநேரம் ஜபம், தியானத்தில் கழிப்பார்கள். பகலில் உடலைக் கொண்டு உழைப்பதற்கிடையிலும் அவர்களது மனம் யாண்டும் இறையுணர்விலேயே நீடித்திருக்கும். காலத்தை வீணாக்க மாட்டார்கள். ஒவ்வொரு நொடிப்பொழுதையும் பயனுள்ளவாறு கழிப்பார்கள். இறைவழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபடுங்கால் காலம் போவதே அவர்களுக்குத் தெரியாது. மீன் குஞ்சு தண்ணீரில் இன்புற்றிருப்பது போன்று தியானத்தில் அவர்கள் பரமானந்தம் அடைந்தனர். இறையுணர்வில் ஊறியிருந்த அவர்கள் உடலுணர்வை அறவே மறந்துவிட்டனர். உடலுக்கு உண்டாகின்ற பசி, தாகம், குளிர், வெப்பம் முதலியவைகளை அவர்கள் உணராதவர்களாயினர். சொத்து சுகம், பட்டம் பதவி, புகழ்ச்சி இகழ்ச்சி, உற்றார் உறவினர், நண்பர் பகைவர் ஆகிய அனைத்திலும் கட்டுப்படாதவர்களாயிருந்தனர். உலகத்தோடு பிணைத்து வைக்கின்ற பந்த பாசங்கள் அனைத்தினின்றும் அவர்கள் முற்றிலும் விடுபட்டிருந்தனர். உண்பதிலும் உறக்கத்திலும் நடுவுநிலை வகித்தார்கள். உடலின் தேவைகளை மிக மிகச் சொற்ப

மாகவே வைத்துக் கொண்டனர். எளிய வாழ்வும் உயர்ந்தநோக்கமும் தான் அவர்களதுவாழ்வாய் விளங்கிற்று.உலகத்தவர்களதுகாட்சியில் அவர்கள் வறுமை வாய்க்கப்பட்டவர்களாகக் காட்சியளித்திருக்கலாம். ஆனால், அவர்கள் வறுமையாளர்களல்லர். ஏழை பணக்காரன் என்பது மனிதனுடைய மனநிலையைப் பொறுத்தது. ஆத்மசாதகன் தன்னை ஏழையென்றோ, பணக்காரனென்றோ கருதலாகாது.

இறையருளை நாடுபவனுக்கு இதைப் பற்றி எண்ணுவதற்கெல்லாம் நேரமில்லை. சாதகன் ஒருவன் பொருட் செல்வத்தில் வறியவனாய் இருப்பினும் அருட் செல்வத்தில் அவன் வறியவனல்லன். உலக வாழ்வில் அவர்கள் ஏதோ குறையுடையவர்களாகத் தென்படலாம். ஆனால் ஆன்மிக வாழ்வில் அவர்களுக்குக் குறையேதும் கிடையாது. இறையுணர்வு அவர்களது உள்ளத்தில் யாண்டும் நிறைந்திருந்தது. தெய்விக உணர்விற்கு நிகரான செல்வம் உலகில் வேறெதுவும் கிடையாது. “அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்” என்பது கோட்பாடு.

அவர்கள் உலகப் பொருள்களிடத்தோ, உலகத்து மாந்தரிடத்தோ எந்த விதமான பற்றுதலும் வைக்கவில்லை. அந்நியர்களைப் போல் அவர்கள் உலகில் வாழ்ந்து வந்தனர். ஆனால், இறைவனோடு அவர்கள் நெருங்கிய இணக்கம் கொண்டிருந்தனர். உலகத்தவர்கள் உற்றார் உறவினரிடத்தும், பெற்றோர் பிள்ளைகளிடத்தும் கொள்ளும் இணக்கம் அனைத்தையும் அவர்கள் இறைவன் ஒருவனிடத்திலேயே வைத்தனர்.

“அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
ஒப்புடைய மாமனும் மாமியும் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இறைவன் நீ
ஏறூர்ந்த செல்வன் நீயே”

என்பது அப்பர் வாக்கு. லௌகீக சம்பந்தமான எந்தவிதமான விருத்திகளும் எழாவண்ணம் தங்கள் உள்ளத்தைத் தெய்வத்துக்குக் கொடுத்துவிட்டனர். உலகத்தில் உடைமைகள் ஏதும் அற்றவர்களாய் அவர்கள் காட்சியளித்தனர். அதனால் உலகத்தவர்கள் அவர்களை ஏசியும் தூற்றியும் பேசிப் புறக்கணித்தனர். ஆனால் அவர்கள் இறைவனது அருளுக்குப் பாத்திரராகிக்கொண்டு வந்தனர். பக்தி அவர்களது உள்ளத்தில் மேலும் மேலும் வளர்ந்து வந்தது. பாரமார்த்திகப் பெருவாழ்வில் மேல்நிலையடையும் அளவிற்கு அவர்கள்பால் பணிவும், பொறுமையும், குழந்தையைப் போன்ற கபடமின்மையும், அனைத்துயிர்களை நேசிக்கும் நிறைந்த அன்பும் உள்ளத்தில் பெருகி வந்தன. துறவு வாழ்க்கைக்கு அவர்கள் நல்லதொரு எடுத்துக்காட்டாய் விளங்கினர். சாதகர்களாகிய நாம் அச்சான்றோர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல வேண்டும். அப்பொழுது நாம் ஆண்டவனிடத்தில் அழைத்துச் செல்லப்படுவோம்.

முன்பு வாழ்ந்த உண்மை சந்யாசிகள் பரிசுத்தமே வடிவெடுத்தவர்களாகவும், பரமனிடத்துப் பக்திமிக வாய்க்கப் பெற்றவர்களாகவும், சிரத்தையே வடிவெடுத்தவர்களாகவும் இருந்தார்கள். ஓயாது ஜபதபங்களில் ஈடுபட்டனர். ஆத்மிக வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற பேராவல் கொண்டிருந்தார்கள். சந்நியாச தர்மத்தினின்றும் இம்மியளவும் பிசகாது தங்களுடைய வாழ்க்கையை ஒழுங்கு நெறிக்கு உட்படுத்திக் கொண்டனர். குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பணிவேவடிவெடுத்தவர்களாய் விளங்கினர். இக்காலத்தில் இத்தகைய துறவியர்களைக் காணுதல் அரிதாய் இருக்கின்றது.

சாதனையில் தமோகுணம் மேலிட்டு நம்மைச் சோம்பலும், மந்தபுத்தியுள்ளவர்களாகச் செய்துவிட்டது. எத்துணையோ பெரியோர்களின் வரலாறுகளைக் கற்றிருக்கிறோம். ரிஷிகள், ஞானிகள், அடியார்கள் பலரது சரிதங்களை வாசித்திருக்கிறோம். பாரமார்த்திகத்தின் உறைவிடமாகிய பாரதத்தில் பிறந்திருக்கிறோம். இத்தகைய அரியவாய்ப்புகள் யாவும் அமையப்பெற்ற நாம் சோம்பேறிகளாய் இருத்தலாகாது. கொழுந்துவிட்டு எரிகின்ற ஜ்வாலை போன்று நமது உள்ளத்தில் ஆன்மீக வாழ்வில் ஆர்வம் பொங்கியெழ வேண்டும். அணையா ஜோதியாக அது யாண்டும் இருக்கவேண்டும். பண்டைய பெரியோர்கள் அடைந்த பாரமார்த்திகப் பெருநிலையை நாமும் அடைய முயல்வோமாக. பாரமார்த்திகப் பெருவாழ்வே நமது லட்சியமாகும்.

சம்பந்தர் வாக்கு

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன்)

இயற்கையே இறைவன்; இயற்கையும் இறைவனும் ஒன்றே. இயற்கையின் முழுமையான விளக்கமாக இறைவன் திகழ்கின்ருன். இறைவன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ளான் என்று நாம் நம்புகிருேம். மரங்களையே தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தார்கள்; பிறகு, மரங்களில் தெய்வம் உறைவதாகக் கருதி வணங்கி வந்தார்கள். அரசமரத்தையும், வேப்பமரத்தையும் வணங்குவதைப் பார்க்கிருேம். சில கிராமங்களில், அடிமரத்தைச் சற்றுச் செதுக்கி, அந்த இடத்தில் மஞ்சள், குங்குமம், மாலை இட்டுக் கிராம மக்கள் வணங்கி வருவதைக் காணலாம்.

காடுகளிலும், சோலைகளிலும் தெய்வம் இருப்பதாகக் கருதி வழிபட்டு வந்தார்கள். நாளடைவில் அந்தக் காடுகளையோ, சோலைகளையோ மையமாகக்கொண்டு ஸ்தலங்கள் உருவாகத் துவங்கின.

திருநெல்வேலிக்குப் பெயர் வேணுவனம். சிதம்பரத்திற்குப் பெயர் தில்லைவனம். சேலம் சுகவனம். திருப்பராய்த்துறை தாருகாவனம். திருமறைக்காடு வேதாரண்யம். திருநெல்லிக்கா, திருக்கோலக்கா, திருக்கோடிக்கா திருவானைக்கா என்னும் பெயர்களில் வரும் கா என்ற சொல்லுக்குப் பொருள் சோலை. சோலைகளை மையமாகக் கொண்டு இந்த ஸ்தலங்கள் தோன்றின.

காலப்போக்கில் சோலைகள் அழிக்கப்பட்டு, பெரிய பெரிய கோவில்கள் கட்டப்பட்டன. அவ்வாறு கட்டியவர்கள், அந்தச்சோலைகளின் நினைவாக ஒன்றிரண்டு மரங்களை விட்டு வைத்தனர். அவை ஸ்தல விருட்சங்களாக நிலை பெற்றிருக்கின்றன.

மதுரைக்கு மற்றொரு பெயர் கடம்பவனம். அங்கே கடம்ப மரம் ஸ்தல விருட்சம். திருக்காளத்தி ஸ்தலத்தின் ஸ்தல விருட்சம் கல் ஆலமரம். எல்லா ஆலமரங்களுக்கும் விழுதுகள் உண்டு. விழுது இல்லாத ஆலமரம் கல் ஆலமரம். இதே போன்று, ஸ்தல விருட்சங்களை உடைய பல சிவ ஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று திருப்பனந்தாள் என்ற சிவ ஸ்தலம் ஆகும்.

திருப்பனந்தாள் ஸ்தலத்தின் ஸ்தல விருட்சம் பனைமரம் ஆகும். இத்தலம் தஞ்சை மாவட்டத்தில், ஆடுதுறை ரயில்வே நிலையத்தில் இருந்து வடக்கே ஆறு மைல் தொலைவில் இருக்கிறது. இத்தலத்தில் பெரிய சிவன் கோவில் ஒன்று உள்ளது. இறைவனுடைய திருப்பெயர் செஞ்சடையப்பர். இறைவி—பெரியநாயகி. தாடகை என்ற அம்மையால் வழிபடப்பட்ட தலம் இது. எனவே, தாடகை ஈச்சரம் என்ற பெயர் கோவிலுக்கு உண்டு. குங்கிலியக் கலய நாயனரும் இத்தலத்தை வழிபட்டு இறைவன் திருவருளைப் பெற்றுள்ளார்.

திருஞானசம்பந்தப்பெருமான் தஞ்சைமாவட்டத்தில் பாதயாத்திரை செய்து, தலங்கள் தோறும் சென்று வழிபாடு செய்து, அடியார்களுக்கு அருள் உரை வழங்கி, மக்களுக்குப் பணி செய்து வருகிருர். அவ்வாறு வரும் போது, திருச்சேய் நல்லூர் என்ற தலத்துக்கு எழுந்தருளி, அங்கே வீற்றிருக்கின்ற எம்பெருமானை வழிபாடு செய்து பின்னர், திருப்பனந்தாள் வந்து சேருகின்ருர்.

திருப்பனந்தாள், தாடகை ஈச்சரத்திலே எழுந்தருளியுள்ள செஞ்சடையப்பரைத் தேவாரப் பாடல் பாடிப் போற்றுகிருர்.

“கண்பொலி நெற்றியி னுன்
　　திகழ் கையில்ஓர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடை யான்
　　மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதி சேர்
　　தரு செஞ்சடை வேதியன்ஊர்
தண்பொழில் சூழ்பனந் தாள்
　　திருத் தாடகை ஈச்சரமே.”

—சிவபெருமான் நெற்றிக் கண்ணை உடையவன்; தன் கையில் மழு ஆயுதத்தை ஏந்தியுள்ளான்; தன் ஒரு பாகத்தில் உமாதேவியை வைத்துள்ளான்; ரிஷப வாகனத்தை உடையவன்; தலையிலே பிறைச் சந்திரனை அணிந்த சந்திரசேகரன். இவன் சோலைகள் சூழ்ந்த திருப்பனந்தாளில், திருத்தாடகை ஈச்சரம்

என்னும் திருக்கோவிலில் எழுந்தருளியுள்ளான்.

சம்பந்தர் திருக்கோவிலுக்குள்ளே சென்றதும், சிவபெருமான் திருமேனியைக் காணுகின்றார். நமக்கு வேண்டிய விருப்பமான ஒருவரை நாம் பார்க்கிறோம் என்றால், முதலில் அவர் முகத்தையே பார்ப்போம். அதுபோல, இங்கே, சிவபெருமான் திருமுகத்தைச் சம்பந்தர் பார்க்கிறார். யாருக்கும் இல்லாத நெற்றிக்கண் சிவபெருமானுக்கு இருப்பதையும் சம்பந்தர் பார்க்கிறார். கண்ணை உடைய நெற்றி சிவபெருமானுக்கு அமைந்திருப்பதைச் சம்பந்தர் கண்டு, ''கண்பொலி நெற்றியினன்'' என்று பாடுகிறார்.

மன்மதனை எரித்த நெருப்புக் கண்ணாக இருந்தாலும் சரி; திரிபுரங்களைச் சாம்பல் ஆக்கிய கோபக் கண்ணாக இருந்தாலும் சரி; சம்பந்தருக்கு அது அருளைப் பொழியும் அருள் கண்ணாகவே காட்சி தருகிறது. நல்லவர்களுக்கு இந்தக் கண் நல்ல கண். தீயவர்களுக்கு நெருப்புக் கண்.

நல்லகண்ணு, பிச்சைக்கண்ணு, சாமிக்கண்ணு, கண்ணுச்சாமி என்கின்ற பெயர்கள் எல்லாம், நெற்றிக்கண்ணை வைத்துச் சிவபெருமானைக் குறிக்கின்ற பெயர்கள். அந்தப் பெயர்களை மக்களுக்கு வைக்கின்றோம்.

"திகழ் கையில் ஓர் வெண் மழுவான்''— கையிலே மழு என்ற ஆயுதத்தை உடையவன். நெற்றிக் கண்ணையும், திருமுகத்தையும் கண்ட சம்பந்தர் புஜத்தோடு இணைந்த மழு ஆயுதத்தைக் காண்கிறார். தீமையை அழித்து நன்மையைச் செய்ய வல்லது மழு ஆயுதம்.

நன்மைகளையே செய்பவன் இறைவன். இருந்தாலும், உலகத்தில் தீமை செய்கின்றவர்களுக்கும் கடும் தண்டனை காத்திருக்கிறது என்பதை உணர்த்துவதற்காகவே மழு, வாள் போன்ற ஆயுதங்களை ஏந்தியிருக்கிறபடி கடவுள் உருவத்தைப் படைத்துள்ளார்கள். தவறு செய்கின்றவர்களுக்குத் தவறுசெய்யக்கூடாது என்பதை உணர்த்துவதற்கு அடையாளமாக மழுப்படை விளங்குகிறது.

சம்பந்தர் சிவபெருமானைக் கண்டதும், இறைவனின் திருவருள் நோக்கைப் பெற்றார்; பிறகு தம்மிடத்திலே மறைந்து கிடக்கின்ற குற்றங்களை அழிக்க வல்ல மழு ஆயுதத்தைக் கண்டு, குற்றங்கள் நீங்கப் பெற்றார்.

''பெண்புணர் கூறு உடையான்''—தனது ஒரு பாகத்திலே உமையம்மையை உடையவன் சிவபெருமான். சம்பந்தருக்கு முதலில் சிவபிரானுடைய திருவருள் பார்வை கிடைக்கப்பெற்றது. இரண்டாவதாக மழு ஆயுதத்தைக் கண்டு தம்முடைய குற்றங்கள் நீங்கப் பெற்றார். மூன்றாவதாக, எம்பெருமானை அம்மையும் அப்பனுமாகக் காணக்கூடிய பேறு சம்பந்தருக்குக் கிடைக்கிறது. சிவபெருமான் தம்முடைய அருளைச் சக்தியின் மூலமாகப் பாலிக்கின்றார்.

''மிகு பீடு உடை மால் விடையான்'' — பெருமை மிகுந்த திருமாலையே ரிஷப வாகனமாகக் கொண்டவன் சிவபெருமான். சைவம் என்று சொல்லி ஒரு சாரார் சிவபெருமானை வணங்கினார்கள். வைஷ்ணவம் என்று சொல்லி ஒரு சாரார் திருமாலை வணங்கினார்கள். ஒரு சாரார் இந்த வேறுபாடு உண்மையில் இல்லை என்று சொல்லி இருசாராருக்கும் ஒற்றுமை ஏற்படுத்த முனைந்தனர். சிவபெருமானுக்கு மைத்துனன் திருமால்; பார்வதி தேவி விஷ்ணுவுக்குத் தங்கை என்றெல்லாம் புராண கதையைச் சொல்லி கடவுளர்களுக்குள்ளே உறவு முறையை ஏற்படுத்திக் காட்டினார்கள்.

திருமாலை வழிபடுகின்ற ஆழ்வார், ''திருமாலின் திருமேனிக்குள்ளேயே சிவபெருமானைப் பார்க்கிறேன்'' என்று பாடினார். சிவபெருமானைப் பாடிய நாயன்மார்கள், ''சிவபெருமானுடைய திருமேனியிலேயே திருமாலைப் பார்க்கிறேன்'' என்று பாடினார்கள்.

சங்கரநயினார் கோவிலில் எழுந்தருளியிருப்பவர் சங்கரநாராயணன்; சுசீந்தரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் தாணுமாலயப் பெருமாள். சிதம்பரத்திலே நடராஜப்பெருமான்; அவருக்கு எதிரே கோவிந்தராஜப் பெருமாள். வடக்கே இமயமலையில் பத்திரிநாத் கோவில். அதே மலையில் கேதார்நாத் கோவில். இவ்வாறு இந்தியா முழுவதும் சைவ வைஷ்ணவ ஒற்றுமைக்காகக் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒற்றுமை உணர்வைத் தங்களுக்குள்ளே ஏற்படுத்தியுள்ளார்கள்.

சிவபெருமானையே வழிபட்டு வரும் சம்பந்தர், சமய உண்மைகளை விளக்கக்கூடிய புராண கதைகளையும் உடன்பட்டு ஏற்றுக் கொண்டு, திருமாலாகிய ரிஷபத்தை வாகன மாக உடையவன் சிவபெருமான் என்கிறார். சைவம், வைஷ்ணவம் ஆகிய இரண்டு பிரிவு களின் குறிக்கோள், செயல் ஆகியவற்றின் ஒருமைப்பாடு (Unity of motive purpose and action) ஒன்றுதான்.

திருஞானசம்பந்தர் தமிழ்க் கடல், தேவாரப் பாடல்களை மிகுதியாகப் பாடியிருக்கிறார். அவ்வாறு பாடல்களைப் பாடுவதற்கு உரியசொற் களைத் தேடி அவர் போகவேண்டிய அவசியம் இருந்ததில்லை. சொற்கள் தாமாகவே அவரை நாடிவரும். அவருடைய நாக்கிலே தமிழ் தவழும். சம்பந்தர் பாடினால் தமிழ் மணக்கும்.

சம்பந்தர் காலத்தில், பொதுமக்களிடத்திலே வடமொழியாகிய சம்ஸ்கிருத மொழிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. கோவில் மொழியாக வும், இறைவனை வழிபாடு செய்வதற்கும், தத்துவ நூல்களைப் பயிலுவதற்கும் வடமொழி யையே மக்கள் பெரிதும் நம்பி இருந்தனர்.

இச்சமயத்திலே அவதாரம் செய்தவர் திரு ஞான சம்பந்தர். அப்போது தமிழ்மொழி இருந்த நிலையைக் கண்டு கலக்க முற்றார். தமிழ் தன்னுடைய பழைய பெருமையை அடைய வேண்டும் என்று எண்ணினர். அதற் காகவே பணி செய்தார். இறைவனுக்கும் மக்களுக்கும், இறை உண்மைகளுக்கும் மக்க ளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க முயன்றார்.

அதற்கு ஏற்றவாறு தமிழைக் கோவில் மொழியாக்கினர், தத்துவ உண்மைகளையும், அருள் நூல் கருத்துக்களையும் தமிழிலே எடுத்து விளக்கினர். வெறுமனே தமிழ் என்று சொல்லாமல், "திருநெறிய தமிழ்" என்று சொல்லுகிறார் சம்பந்தர்.

"துன்பம் அற, அழியாத இன்பம் உறச் செல்லும் வழியையும், அவ்வழியில் ஒழுகும் ஒழுக்கத்தையும், அவ்வொழுக்கத்தின் நீங்காத நீதியையும், "நெறி" என்பார்கள். நெறி என்ற சொல்லுக்குத் தரப்படும் விளக்கம்இது.

"திருநெறிய தமிழ்" என்று, சம்பந்தர் தமிழுக்குச் சிறப்புக் கொடுத்துக் கூறியதன் பெருமையை நாம் அறியலாம். "தமிழ் விரகர்" எனவும், "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்" எனவும் தமிழால் ஞான சம்பந்தர் சிறப்பிக்கப்படுவ தையும் இங்கு ஒப்பு நோக்கவேண்டும்.

எல்லா வகையிலும் தமிழை உயர்த்தப் பாடு பட்டவர் சம்பந்தப் பெருமான். அதற்காகவே கடவுள் தம்மைப் படைத்ததாகவும்,தமிழ்ப்பணி செய்யுமாறு கடவுளே தமக்குக் கட்டளை இட்ட தாகவும் சொல்லி, தமிழோடு தம்மை இணைத்து, பெருமிதத்துடன் கூறுவார் சம்பந்தர்.

வேத நெறி சிறந்து விளங்கவும், சைவ நெறி மக்களிடையே பொலிந்து தோன்றவும், இறை வன் மீது பற்றுக்கொண்ட அன்பர்களின் வாழ்வு சிறக்கவும் பணி புரிவதைக்குறிக் கோளாகக் கொண்டவர் சம்பந்தர்.

சம்பந்தர் சமூகத்தைப் பார்த்த பார்வை வேறு. உளவியல் அணுகு முறையில் (Psychological approach) தனி மனித மனங்களைப் பற் றிச் சிந்தித்தார். அறநெறி அடிப்படை அணுகு முறையில் (Moral approach) சமுதாய ஒழுக் கப்பிரச்னையை அணுகினர். சமுதாயவியல் அணுகு முறையில் (Sociological approach) சமுதாயப் பிரச்னைகளை அணுகினர்.

"சொல் தமிழால் என்னைப்பாடுக!" என்று சிவபெருமான் சுந்தரரைத் தமிழ் பாடச் சொன் னதும், மாணிக்கவாசகர் பாடிய தமிழ்ப் பாட லைச் சிவபெருமானே தன் கைப்பட ஏட்டில் எழுதியதும் எவற்றை உணர்த்துகின்றன!

அக்காலத்தில் தாழ்ந்திருந்த தமிழை மேல் நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணி ஆன்றோர்கள் செய்த அரு முயற்சி களையே உணர்த்துகின்றன.

சம்பந்தர் தமிழில் சிறந்த ஆற்றல் உடைய வராக விளங்கினர் என்று பார்த்தோம். அதே போன்று வடமொழியிலும் நல்ல புலமை பெற்று விளங்கினர்.

வடசொற்களை விரவி, அவற்றிற்கு ஏற்றாற் போல, தமிழ்ச் சொற்களை அமைத்துச் சந்த நயம் அமைத்துப் பாடிய பாடல் வருமாறு:

"நிராமய பராபர புராதன
பராவுசிவ ராக அருள்என்று
இராவும் எதிராயது பராநினை
புராணன் அமராதி பதியாம்

அராமிசை இராத எழில்தராய்
அரபராயண வராக உருவா
தராயனை விராயெரி பராய்மிகு
தராய் மொழி விராயபதியே.''

நிராமய—நோய் அற்றவனே! பராபர—உயர்வும் தாழ்வும் இல்லாதவனே! புராதன—பழமையானவனே! பராவு சிவ—எல்லாரும் துதிக்கின்ற சிவபெருமானே! ராக—அனைவராலும் விரும்பத் தக்கவனே! அருள் என்று—அருள் பாலிப்பாயாக என்று வேண்டி, இராவும்—இரவிலும், எதிராயது—பகலிலும், பரா—வணங்கி, நினை—உயிர்கள் அனைத்தும் நினைத்துத் தியானிக்கின்ற, புராணன்—பழமையானவன், அமராதிபதி—(சிவபெருமான்) அமரர்களுக்கெல்லாம் தலைவன், பதி—எழுந்தருளியிருக்கும் தலம், அராமிசை இராத—ஆதிசேடனாகிய பாம்பின் மேல் இல்லாத, எழில்—அழகிய பூமியை, தரு—கொம்பினால் கடலுக்குள் இருந்து கொண்டு வந்த, அரபராயண—சிவபெருமானைத் துதிக்கின்ற, வராக உரு—வெண்பன்றி வடிவம் கொண்ட, வாதராயனை—திருமாலை, எரி—தீப்போன்ற பழி நீங்குவதன் பொருட்டு, பராய்—அவனால் வணங்கப்பட்டு, மிகு—புகழ் மிகுந்த, தராய் மொழி—பூந்தராய் என்னும் பெயர் கொண்ட பதி சீகாழி ஆகும்.

பிறப்பு இறப்பு பிணி மூப்பு ஆகிய உடலைப் பற்றும் நோய் எதுவும் அற்றவன் சிவபெருமான். உயர்வும் இல்லாதவன்; தாழ்வும் இல்லாதவன். வளர்ந்து தேய்கின்ற பொருள்களுக்கும், தோன்றி மறைகின்ற பொருள்களுக்கும் உயர்வு உண்டு; தாழ்வு உண்டு. இறைவனுக்கு இத்தகைய விகாரங்கள் எதுவும் இல்லை. ஆகவே அவனுக்கு உயர்வோ தாழ்வோ இல்லை. புராதனம் ஆனவன், பழமையானவன் இறைவன். அவனுக்குத் தோற்றம் இல்லை. அவன் அனாதி, அவன் ஆதி, காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டவன். இறைவனுக்கு யார் கால நிர்ணயம் செய்வார்கள்? ஒருவரும் இல்லை. எல்லாராலும் விரும்பித் துதிக்கப்படுகின்றவன் அவன். வராக அவதாரம் எடுத்துப் பூமியைத் தாங்கிய திருமால் சிவனை விரும்பி வழிபட்ட தலம் சீகாழி ஆகும்.

இப்பாடலில் சிவ பெருமானுடைய இயல்பு, உயிர்கள் அவனைப் போற்றுகின்ற பெருமை ஆகியவை சொல்லப்படுகின்றன. ஒரே விதமான சந்தம் உடைய வடசொற்கள், தமிழ்ச் சொற்கள் ஆகியவற்றைக் கலந்து ஓசை நயம் அமையும்படிப் பாடியிருப்பது காணலாம்.

பாண்டிய நாட்டில் பல சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள் நாயன்மார்களால் பாடப்பெற்ற—தேவாரம் பெற்ற—தலங்கள் பல உள்ளன. அத்தகைய தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று திருநெல்வேலி. வேதசருமர் என்பவர் சிவபூஜை செய்பவர். இறைவனுக்கு நைவேத்தியம் படைத்தும் பூஜை செய்வதற்காகப் பச்சை நெல்லை வெயிலில் உலர்த்தி விட்டுத் தாமிரவருணி ஆற்றுக்கு நீராடச் சென்றார். நீராடச்சென்ற சமயத்தில், மழைக்கு உரிய கருமேகங்கள் திரண்டு வந்து மழை பொழியத் தொடங்கின. வேத சருமர் கவலையடைந்தார். காய வைத்திருந்த நெல்லை மழை நீர் அடித்துக்கொண்டு போய்விடுமோ, இறைவனுக்குத் திரு அமுது படைக்க முடியாமல் போய்விடுமோ என்று அஞ்சினார். நீராடி விரைந்தோடி வந்தார். நல்லவேளை, அவர் காய வைத்திருந்த நெல்லைச் சுற்றிலும் வேலி இடப்பட்டிருந்தது. சிவபெருமானே அவ்வாறு நெல்லைச் சுற்றிலும் வேலியிட்டுப் பாதுகாத்தார். நெல்லைச் சுற்றி வேலியிட்டு நெல்லைக் காத்தமையால், ஊருக்கு நெல்வேலி என்ற பெயர் ஏற்பட்டது. இது புராண கதை.

திருநெல்வேலி வளமான நன்செய் நிலப் பகுதி. தாமிரவருணி ஆறு பாய்ந்து நிலத்தைச் செழிப்பாக்குகிறது. அது முப்போகம் விளையக் கூடிய பூமி. திருநெல்வேலியைச் சுற்றிலும், பச்சைப்பசேல் என்று வேலியிட்டது போன்று, நெல் வயல்கள் சூழ்ந்துள்ளன. எனவே நெல்வேலி என்ற பெயர் அமைந்தது என்று சொல்லுவதும் பொருத்தமாகும். நிலத்துக்கு வளம் சுரந்து, தங்களுக்கு வாழ்வளிக்கும் இறைவனை நெல்வேலி நாதர் என்று மக்கள் போற்றினர்.

திருநெல்வேலிக்கு மேற்கே வீரவநல்லூர் என்ற ஊர் அமைந்துள்ளது. இந்த ஊரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் பூமிநாதர். தெற்குப் பகுதியில், கன்

னடியன் கால்வாய்க் கரையில், திருவாங்கூர் மன்னர்களால் அமைக்கப்பெற்ற சிவன் கோவி லில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் புற வேலி நாதர் என்பதாகும்.

தங்கள் பூமியைக் காப்பாற்றி வாழ்வளிக் கும் கடவுளைப் பூமிநாதன் எனவும், ஊருக்குப் புறத்தே அமைந்துள்ள தங்கள் நிலங்களை வேலியாக அமைந்து பாதுகாக்கும் கடவுளைப் புறவேலி நாதர் எனவும் கூறுவது போல, திருநெல்வேலி அப்பரையும் நெல்வேலி நாதர் எனக் கொண்டாடினர்கள்.

திருநெல்வேலிக்கு வேணுவனம் என்ற பெய ரும் உண்டு. வேணு என்றால் மூங்கில் என்று பொருள். இறைவன் மூங்கில் புதரில் இருந்து தோன்றினர். எனவே இதற்கு வேணுவனம் என்ற பெயர் உண்டாயிற்று எனவும் கூறு வார்கள்.

திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள இறை வரின் திருப்பெயர் நெல்லையப்பர். அம்பிகை யின் பெயர் காந்திமதி அம்மை. இத்தலத்தின் தீர்த்தம் தாமிரவருணி, திருமால், பிரம்ம தேவன், அகத்தியர் ஆகியோர் இத்தலத்தில் வழிபாடு செய்து பேறு பெற்றார்கள்.

கூத்தப் பெருமானுகிய நடராஜப் பெருமான் எல்லாத் திருக்கோவில்களிலும் நடனம் ஆடு கின்ற திருக்கோலத்துடன்தான் காட்சி தரு கின்றார். இருந்தாலும் முக்கியமாக ஐந்து தலங்களை நடராஜப் பெருமான் நடனத்துக்கு விசேஷமாகச் சொல்லுவார்கள். இந்த ஐந்து தலங்களையும் ''பஞ்ச சபைகள்'' என்பார் கள். சிதம்பரம்–பொன்னம்பலம், பொற்சபை. மதுரை-வெள்ளியம்பலம், இரஜத சபை, தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள திருவா லங்காடு இரத்தின சபை. திருநெல்வேலிக்கு அருகில் உள்ள இராஜவல்லிபுரத்தில் இருக் கும் செப்பறைத் திருக்கோவில் தாமிர சபை. திருக்குற்றாலம் சித்திரசபை. திருநெல்வேலி யையும் தாமிரசபை என்று கூறுவார்கள்.

திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் உள்ள தலங்களைத் தரிசிப்பதற்காக யாத்திரை வருகிறார். அவ்வாறு வரும்போது, இராமநாத புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக் கானப்பேர் எயில் என்ற காளையார் கோவில், திருச்சுழியல், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருக்குற்றாலம் ஆகிய தலங்களை வழி பாடு செய்த பிறகு திருநெல்வேலிக்கு எழுந் தருளி வருகின்றார்.

''மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றும் எல்லாம்
அருந்துயர் கெடும்அவர் நாமமே
சிந்தைசெய் நன் நெஞ்சமே
பொருந்துதண் புறவினில் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம் பூம்
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலி
உறை செல்வர்தாமே.''

முல்லை நிலத்தில் கொன்றை மரங்கள் பூத்த மலர்களைத் தரையிலே உதிர்க்கின்றன; கொன்றை மரங்களின் அருகிலே உள்ள செருந்தி மரங்கள் பொன்னைப்போல அழகான மலர்களைத் தரையிலே உதிர்க்கின்றன. இப் படிப்பட்ட அழகான இயற்கையழகு நிறைந்த சோலைகளால் சூழப்பெற்ற திருநெல்வேலி நாதர் இப்பிறவியாகிய நோயைப் போக்கும் அருமருந்து ஆவார்; உடலில் உண்டாகும் நோயை நீக்க உதவும் மந்திரமும் ஆவார். இப்பிறவியில் மட்டும் அன்றி மறுபிறவியிலும் நன்மைகளைப் பலவற்றை விளைவிக்கும் தூய நெறியாக விளங்குகிறார். சுருக்கமாகச் சொன் னால், எல்லா நன்மைகளுமாக அப்பெருமான் திகழ்கிறார்.

அவர் நாமமாகிய திரு ஐந்தெழுத்து மந்திர மும் பிறவிநோயைப் போக்கும். உடல் நோயை ஒழிக்கும். மறுமை வாழ்வில் நன்னெறியாக உதவும். இந்த ஆன்மா ஈடேற எல்லாவகை யிலும் உதவும். இவ்வளவு நன்மைகள் இருப் பதால், ஏ நெஞ்சமே! நீ நல்ல நெஞ்சமாக இருக்கிறாய். எனவே, அவருடைய திரு நாமத்தை எப்போதும் சிந்தனை செய்வாயாக என்று நெஞ்சுக்கு நீதி உரைக்கிறார் சம்பந்தர்.

இந்தப் பாடல், தன்னுடைய நெஞ்சைப் பார்த்துப் பாடியதாக அமைந்துள்ளது. அதா வது நெஞ்சுக்கு அறிவுரை கூறுவதுபோல அமைந்துள்ளது. தன் உள்ளத்து உணர்ச் சியை வெளிப்படுத்தும் தன் உணர்ச்சிப் பாடலாக அமைந்துள்ளது.

பாடுகின்றவர் ஒவ்வொருவரும் தமது நெஞ் சைப் பார்த்துப் பாடுகின்ற அனுபவம் இப் பாடலால் கிடைக்கிறது.

அஃகம் சுருக்கேல்

(சுவாமி துருவானந்தர்)

தளவாய்புரம் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர் செல்லமுத்து. நேர்மையாகக் கடமையைச் செய்து, முறையான வழியில் பொருளீட்டி மக்களிடம் நற்பெயர் பெற்றவர். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பிறந்த இரண்டொரு ஆண்டுகளில் தன் தாயை இழந்தான். மகனுக்கு மார்த்தாண்டன் என்னும் பெயரிட்டு நன்கு வளர்த்துவந்தார். தாயில்லாப் பிள்ளையாகிய அவனுக்கு அதிகமாகச் சலுகை கொடுத்தார். அதன் விளைவாகத் தாயில்லாக் குறை தீரும் என்று நம்பி வந்தார். அதே ஊரில் ஒரு தாயும் சேயும் வாழ்ந்துவந்தனர். அவளுடைய கணவன் ராணுவத்தில் சேர்ந்து தம் உயிரைத் தியாகம் செய்தவர். விதவைத் தாய் மலர்கொய்து மாலைகட்டி விற்று மகனைப் படிக்கவைத்தாள். ராஜா என்று பெயரிட்டு அவனை வளர்த்தாள். நலிவுற்ற சமுதாயத்துக்கு நல்வழி காட்டவேண்டுமென்று தனயனை உருவாக்கி வந்தாள். ராஜாவும், மார்த்தாண்டனும் ஒரே வகுப்பில் படித்த நண்பர்கள்.

ராஜாவிடம் பழகுவதில் மார்த்தாண்டன் பெருமையுற்றான். நெருப்போடு தொடர்பு வைக்கின்ற கரி தீ மயம் ஆவது போன்று ராஜாவிடம் நட்பு கொண்டு பழகிவந்த மார்த்தாண்டனும் மாறியமைந்தான். நண்பனைப் போன்று முற்போக்குத் திட்டமும், நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற தணியா தாகமும் வளரத்தொடங்கின. மார்த்தாண்டனிடம் எற்பட்ட மாறுதல் அவன் தந்தை செல்லமுத்துவுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. தான் மார்த்தாண்டன் பொருட்டு வேண்டிக்கொண்ட பிரார்த்தனைகள் வீண்போகவில்லை யென்று சமாதானம் அடைந்தார். உடல் நலிவுற்றிருந்த அவர் இனியும் தாம் நெடிது வாழமுடியாது என்பதை உணர்ந்து ராஜாவின் தாயைத் தம் வீட்டில் தங்கி இருக்கும்படி வேண்டினர். பிள்ளைகள் இருவரையும் நன்கு உருவாக்கி நாட்டை நல்வழியில் கொண்டு செல்லும் நல்ல தீரர்களாக ஆக்கவேண்டும் என்று வேண்டி செல்வங்கள் இருவரையும் அப்புனித மாதுவிடம் ஒப்படைத்துவிட்டு மறைந்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு அம்மாது இறுதிக் காலத்தைக் காசியில் கழிக்க விரும்பினாள்.

அன்பிற்குரிய அன்னையாரைக் காசிக்கு அனுப்பினர் நண்பர்கள் இருவரும். தாயைச் சிவனரிடம் அனுப்பிவைத்ததில் தனயன் மகிழ்ச்சி மிக எய்தினன். அந்த மகிழ்ச்சிக்கிடையே துயரமும் உள்ளத்தைக் குடைந்துகொண்டு வந்தது. 'யாரோ அனாதையாக வந்த ஒருவனை வீட்டில் இன்னும் வைத்துக்கொண்டிருப்பதா? அவனைக் போனால் சரி, இல்லையென்றால் அவனை உயிரோடு வாழவிடாது செய்துவிடுவோம்' என்று புதிய உறவுமுறை கூறிக்கொண்ட அவ்வூர் பெருந்தனக்காரர்கள் வசைமாரி பொழிந்தனர். நண்பனும், ராஜாவும் நன்கு சிந்தித்தனர். 'இப்போதைய நிலையில் இவ்வுலகுக்கு நல்வழிகாட்ட நமக்கு இயலாது. முதலில் கொஞ்ச நாட்கள் தனியாக நான் எங்கேனும் இருந்து மனதைப் பக்குவப்படுத்திவிட்டுப் பிறகு உன்னைச் சந்திக்கிறேன். அதுவரை உன் தந்தையின் ஸ்தானமாகிய பஞ்சாயத்துத் தலைவராக இருந்து சிறப்பாகச் செயலாற்று. நான் வருகிறேன்' என்று ராஜா நண்பனிடம் விடைபெற்றுப் புறப்பட்டான்.

ஏகாந்தத்தை நாடி புறப்பட்ட ராஜாவுக்குப் புகைவண்டியில் ஒரு பெரியவரின் தொடர்பு ஏற்பட்டது. அவர் மூலமாகச் சித்த புருஷர் ஒருவரைப்பற்றிக் கேள்விப்பட்டுப் பம்பாய் நோக்கிப்புறப்பட்டான். பம்பாயில் அவரைச் சந்தித்தான். அவருக்குச் சீடனாக இருந்து பணிவிடை செய்துவந்தான். ராஜாவின் பணிவும், இடைவிடா சேவையும் அந்த முனிவருக்கு மகிழ்ச்சி அளித்தன. அவனை நன்கு ஆத்ம சாதனத்தில் ஈடுபடுத்தி வந்தார். அஷ்ட சித்திகள் பெறவேண்டும்; அவற்றை உலக நலனுக்கு வழங்க வேண்டும் என்றெல்லாம் எண்ணிய ராஜா சமயம் பார்த்துத் தன் விருப்பத்தைத் தன் குருவிடம் தெரிவித்தான். 'சித்தி வேண்டாம், மனதை அடக்கி பரம் பொருள் சிந்தனையில் திருப்பு' என்று ஆசி வழங்கினர். இருப்பினும் அம்மகான் அவனைக் கெடுக்காத சித்தி ஒன்றினை உரியகாலத்தில்

வழங்குவதாகச் சொல்லி வைத்தார்.

பம்பாய் நகரைச் சுற்றிப் பார்த்து வரும் பொழுது 'விவேகானந்த வீர வாலிபர் சங்கம்' என்ற பெயரிடப்பட்ட கட்டடத்திற்குள் ராஜா நுழைந்தான். அங்குப் பல இளைஞர்கள் உடற் பயிற்சி, தடி சுழற்றுதல், சிலம்பு, வாள் பயிற்சி, குஸ்தி, கராத்தே முதலிய பல வீர விளையாட்டுக்களைச்செய்து கொண்டிருந்தனர். மாவீரர் சிவாஜி, பகத்சிங், ஜான்ஸிராணி, நேதாஜி போன்ற வீரத் தலைவர்களின் படம் அக்கட்டடத்தினுள் இருந்து அலங்கரித்தன. துறவி வேந்தன்விவேகானந்தரின் படம் கம்பீர மாக இருந்தது. அதற்குரிய மரியாதையைச் செலுத்திவிட்டு அவ்விளைஞர்களுடன் ராஜா சிறிது உரையாடினன். "நாட்டுக்கு நலம் செய்யவிரும்புபவன் முதலில் தன்னைப்பலவா னுக்கவேண்டும். முதலில் உடல் பலம். அதைத் தொடர்ந்து மனேபலம் வரும். உடல் பலம் உள்ளவன் சன்மார்க்கத்தில் போகும்பொழுது நெறி தவறமுடியாது. நாம் பண்ணுகிற பல பாபங்களுக்கும், தவறுகளுக்கும் உடல் பல ஹீனமாயிருப்பதே காரணம். ஆகவே முத லில் பலவானுகுங்கள்" என்ரூர் விவேகானந்தர். இரும்புத் தசையும், எஃகு நரம்பும் பெற்ற இளம் சமுதாயத்தை விரும்பினர் சுவாமி விவேகானந்தர். ஆகவே நாட்டுக்குத் தொண் டாற்ற விரும்புகிற நாங்கள் முதலில் எங்களைப் பலப்படுத்துகிரேம் என்றனர் அந்த வீர வாலிபர்கள்.

சங்கத்தின் செயல் முறையும், வாலிபர் களின் நோக்கமும் ராஜாவை வியப்பில் ஆழ்த்தின. தானும் அச்சங்கத்தில் சேர்ந்து பயிற்சிபெற்று வந்தான். குருநாதரின் கருணை யும் உரிய காலத்தில் பலன் தந்தது. ராஜா வின் மன நிலையை அறிந்த குருநாதர் ஒரு மந்திரத்தை அவனுக்குக் கற்றுக் கொடுத்தார்.

மந்திரத்தை ஜபித்தான் ராஜா. அவனது உடல் சிறிது சிறிதாக மறைந்தது. ஆகாயத் தில் பறந்து தன் சொந்த ஊருக்குப் போனன். தளவாய்புரத்திற்குள் நுழைந்தவுடன் தன் நண்பன் மார்த்தாண்டனைச் சந்திக்க விரும்பி னன். ஆனல் அப்போது ஒரு கூக்குரல் கேட் டது. பெண் ஒருத்தி முரடன் ஒருவனிட மிருந்து தப்ப முடியாது அலறினள். அவளு டைய கஷ்டதசையைக் கண்ட ராஜா அந்த முரடனைத் தாக்க எண்ணினன். மற்றவர்கள் அக்கொடியவனிடம் நெருங்க அஞ்சுவதையும் கண்டான். ஆகவே மரத்தின் அடியிலிருந்த ஒரு கருநிறமான தடி ஒன்றை எடுத்து அவனை நன்கு புடைத்தான். அடிதாங்க மாட்டாது அக்கொடியவன் ரத்தம் கக்கி இறந்தான். எங்கேயோ இருந்து திடீரென்று வந்த தடி யைக் கண்டு மக்கள் பீதியடைந்து ஓரமாக நின்று பார்த்தனர். அந்தக் கருநிறமான மரத் தடி வானத்தில் செங்குத்தாக நின்றது. அங்கு மிங்கும் ஆகாயத்தில் நீந்தியது. சிறிது நேரத் திற்குள் அக்கிரமம் செய்த கொடியவன் மாயத் தடியால் அடியுண்டு மாண்ட செய்தி அந்த ஊர் முழுவதும் பரவ ஆரம்பித்தது. இதைக் கேள்வியுற்ற போக்கிரிகளும் பகிரங்கமாகத் தவறு செய்ய பயந்தார்கள். அந்தக் கருந்தடி மெதுவாகக் கீழே இறங்கிஅனைவருக்கும் ஆசி வழங்கிவிட்டு ஆகாயத்தில்செங்குத்தாகப் பறந் தது. சுற்றுலாச் சென்று கொண்டிருந்த மாண வர்களின் பஸ் ஒன்றைச் சோதனைச்சாவடி அதிகாரி ஒருவர் மடக்கி லஞ்சமாக இருபது ரூபாய் கொடுத்தால்தான் பஸ்ஸை விடுவதாக மிரட்டினர். மாணவர்கள் எவ்வளவு கெஞ்சி யும் அந்த மிரட்டல் பேர்வழி பஸ்ஸை விடுவ தாக இல்லை. வானத்தில் மிதந்து வந்த ராஜா வின் கண்களுக்கு அக்காட்சி புலனுயிற்று. நாட்டிலிருந்து லஞ்சப் பேயை ஒழித்தா லொழிய மக்கள் நிம்மதியாக வாழமுடியாது என்று எண்ணி தடியுடன் வானத்தில் பேசி னன்: "அடே, துரோகி, லஞ்சம் பெற்று வயிறு வளர்க்கிற வாழ்க்கை ஒரு வாழ்க் கையா? ஊழலை ஒழிக்க வேண்டிய நீங்களே இந்த இழி செயலைச் செய்கிறீர்களா? உங்க ளைப்போன்ற ஊழல் பேர்வழிகள் நாட்டில் இருப்பது பாபம்" என்று உரத்த குரலில் உரைத்து கருந்தடியால் அந்த அதிகாரிகள் இருவரையும் நன்கு உதைத்து சோதனைச் சாவடியிலிருந்த மூங்கில் மரத்தின் உயரே கட்டி வைத்தான். வயது முதிர்ந்த பெரியவர்கள் ஊர்ப் பொதுச் சத்திரத்தில் அமர்ந்து அந்தக் கருந்தடியின் அவதார ரகசி யத்தைச் சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்தது ராஜாவின் காதுகளில் எட்டியது. "அரசன்

அன்று காப்பான்; தெய்வம் நின்று காக்கும்'' என்பார்கள். ஆனல் நாட்டில் நடக்கும் அக்கிர மத்தைக் காணப் பகவானுக்கே சகிக்கவில்லை. அதனல் அரசாங்கம் செய்ய முடியாது தினறும் இத்தவறுகளைப் பகவானே கருந்தடி ருப மெடுத்து நம்ஊரில் திருவிளையாடல்புரிகின்ருர். அதர்மம் தலையெடுக்கும் பொழுது அதை அழித்து தர்மத்தை நிலைநாட்டக் கண்ணன் அவதாரம் எடுப்பதாகக் கீதையில் கூறுகிருன். அந்தக் கிருஷ்ணனே கருந்தடி உருவில் தீமைகளைக் களைந்துநலனை நிலைநாட்டவந்துள்ளான். அக்கிரமக்காரர்கள் இனிமேலாவது திருந்தி நல்வாழ்வு வாழட்டும்'' என்று அவர்கள் பேசிக்கொண்டனர். அவர்களுள்ஒருவர் ''இது மட்டும்போதாது. பதுக்கல்பேர்வழிகளைஒழிக்க வேண்டும். அவர்களால்தான் நாட்டில் உணவு பஞ்சம் ஏற்படுகிறது. பதுக்கல்காரர்களைப் பகவான் இன்னும் ஏன் விட்டுவைத்திருக்கிருர் என்பதுபுரியவில்லை'' என்ருர். ''பெரியவர்களே பதுக்கல்காரர்கள் யார் என்பதை எனக்குச் சொல்லுங்கள். இன்றே அவர்களை ஒடுக்கி பதுக்கப்பட்ட தானியங்களை மக்கள்அனைவருக்கும் குறைந்த விலையில் விநியோகம் பண்ணலாம்'' என்ருன் ராஜா. ஆகாயத்திலிருந்து குரல் வருவதைக்கேட்ட பெரியவர்கள் நடுங்கினர். அந்தத் தடியைக் கண்டு மகிழ்ந்து ஸ்தோத்ரங்கள் சொல்லினர். கீழே விழுந்து நமஸ்கரித்தனர். பதுக்கல் பேர்வழிகள் யார் யார் எங்கெங்கே உள்ளனர் என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் கூறினர். பதுக்கல்காரர்களின் வீட்டினுள் நுழைந்த ராஜா கருந்தடியைக் காண்பித்து 'பதுக்கி வைக்கப்பட்டுள்ள அனைத்தையும் வெளியே கொண்டுவா இல்லையேல் இந்தத் தடியால் அடிபட்டு மாண்டு போவாய்,என்று ஒரு அடிகொடுத்தான். இதே மாதிரி எல்லாப் பதுக்கல்காரர்களுக்கும் எச்சரிக்கை பிறந்தது. இதனைக் காண ஏராளமாகக் கூட்டம் கூடியது. பதுக்கி வைக்கப்பட்டுள்ள ஏராளமான மூட்டைகள் பஞ்சாயத்துத் தலைவரிடம் அனுப்பப்பட்டன. இச்செய்திகளைக் கேள்வியுற்ற மார்த்தாண்டன் இத்தகைய மர்மமான ஈசனுடைய களையெடுப்பு இந்த நவீன யுகத்திலும் நடைபெறுமா என வியந்தான். பதுக்கல்காரர்கள் விசாரணைக்கு அனுப்பப்பட்டனர். மார்த்தாண்டனின் வீட்டுக்குள் நுழைந்தான் ராஜா. ''நண்பா,உன்ராஜா இதோ இருக்கிருன். தெரிகிறதா?'' என்ருன். கருந்தடியால் அக்கிரமக்காரர்களைத் தண்டித்துத் திருத்திய ராஜாவின் உருவம் மந்த்ரஜபத்தின்மூலம்சிறிது சிறிதாகத் தெரிய ஆரம்பித்தது. கருந்தடியோடு ராஜா முன் தோன்றினன். நண்பனும் மகிழ்ச்சியடைந்தான்.

'அஃகம் சுருக்கேல்' என்ற ஔவை வாக்குக்கு விளைபொருள்களைப் பதுக்கி வைக்காதே என்பது பொருள். இதனைச் செயலுக்குக் கொண்டு வந்து ராஜா மக்களுக்குச் சுகவாழ்வு தந்தான். நாட்டில் பக்தியும், நற்பண்பும் பெருகியது.

செய்திகள்

நிகழ்பவை:

மே மாதம் 17ஆம் தேதி செவ்வாய்க்கிழமை, 18ஆம் தேதி புதன்கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் புதுக்கோட்டை ஜில்லா திருவரங்குளத்தில் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள் தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். புதுக்கோட்டையில் இருந்து ஆலங்குடி செல்லும் மார்க்கத்தில் ஐந்தாவது மைலில் இவ்வூர் அமைந்துள்ளது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் நபர்ஒன்றுக்கு; நாள் ஒன்றுக்கு ரு 4 வீதம் செலுத்தி மே மாதம் 16ஆம் தேதி மாலை 5 மணிக்குள் திருவரங்குளம் வள்ளநாடு நகரத்தார் தவணைக் கட்டடத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டு வந்துவிடவேண்டும்.

மே மாதம் 30ஆம் தேதி திங்கட்கிழமை அன்று ஸ்ரீ விவேகானந்த வித்தியாவன குருகுலத்திற்குத் தேவையான புதிய மாணவர்கள் 4, 5, 6, 7 வகுப்புகளுக்குப் பரீட்சை செய்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அன்று காலை 9 மணிக்குள் புதிதாகச் சேரும் மாணவர்கள் குருகுலத்திற்கு வந்து பரீட்சை எழுதத்தயாராக இருக்கவேண்டும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்-மூன்றாம் பதிப்பு
பிரசார விலை ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை-பதினொன்றாம் பதிப்பு
பிரசார விலை ... 12-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
கர்மயோக விளக்கம் ... 7-00
பக்தியோக விளக்கம் ... 6-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
விவேகானந்த விவரணம் ... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 4-00
விவேகானந்த உபநிஷதம் ... 4-00
கடவுளின் வடிவங்கள் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II ... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரி
ஆறாம் பதிப்பு-பிரசார விலை ... 2-75
தினசரி தியானம்-பதிமூன்றாம் பதிப்பு
(பிளாஸ்டிக் உறையுடன்) பிரசாரவிலை ... 2-75
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம் ... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் ... 2-00
கண்ணன் என்னும் கடவுள் ... 2-00
தாயுமானவர் இயற்றிய
கருணாகரக்கடவுள் ஷை ... 2-00
மௌனகுரு வணக்கம் ஷை ... 1-50
பரசிவ வணக்கம் ஷை ... 0-50
சந்நியாசி ... 1-25
பஜனைப் பாடல்கள் ... 1-25
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
இராவணத் தத்துவம் ... 1-00
சகோதரி நிவேதிதை ... 1-00
ஹரிச்சந்திரன் (நாடகம்) ... 1-00
காயத்ரீ ... 1-00
வாலிமோக்ஷம் (நாடகம்) ... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்) ... 1-00
அறம் வளர்த்த நம்பி ... 0-95
நோய்க்கு இடம் கொடேல் ... 0-80
நன்மக்களைப் பெறுதல் ... 0-80
தானவீரன் கர்ணன் (நாடகம்) ... 0-80
பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்) ... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ... 0-75

இறை வணக்கம் ரூ. 0-75
*ஆத்ம சக்தி ... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 0-75
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவ தத்துவம் ... 0-70
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி
கர்வபங்கம் (நாடகம்) ... 0-65
ப்ரஹ்லாதன் (நாடகம்) ... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் ... 0-60
*ஆலய வழிபாடு ... 0-60
ஸ்ரீ ராமகிருஷ்ணாஷ்டோத்தர சத
நாமாவளி: ... 0-50
சைவன் யார்? ... 0-50
*சூரிய நாராயணன் ... 0-50
*முருகக் கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 0-40
தபோபலன் (நாடகம்) ... 0-40
*கணபதி ... 0-40
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 முதல் 25 வரை
ஒவ்வொன்றும் ... 0-30
பரசுராமர் கர்வ பங்கம் (நாடகம்) ... 0-15
The Bhagavad Gita (8th Imp.) ... 15-00
The Indian National Education ... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram ... 8-00
Ramakrishna Lives Vedanta ... 5-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Daily Divine Digest (with plastic-cover) ... 4-50
Mahabharata (with plastic cover) ... 4-50
Ramayana (do) ... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover) ... 3-00
The Bhagavad Gita (Small Size) (With plastic cover) ... 3-00
Sri Vishnu Sahasranama Stotram ... 2-50
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
*Introducing the Gita ... 1-50
*Key to Higher Life ... 0-75
*The Teacher ... 0-60
*The Student ... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபாற் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-00ம் மஞ்சரிக்கு ரூ. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை–639 115, திருச்சி Dt.

DHARMA CHAKRAM Regd. No. M. 6022

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.